ஓம் பரப்பிரம்மணேநம:

அமிர்தகுணபோதினி

(முந்திய "ஆநந்த குணபோதினி"யே இப்பொழுது "அமிர்த குணபோதினி" என்று புதுப்பெயருடனும் வெளிவருகின்றது)

அறிவை விளக்கி, உற்சாகத்தைப் பெருக்கி, ஆநந்தத்தைத் தரவல்லதான அநுபவ விநோத ஞான கலா விலாஸங்கள் நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் - எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு.

" எண்ணிய எண்ணியாங் கெய்துப ; எண்ணியார்
COPY RIGHT] திண்ணிய ராகப் பெறின். " (திருக்குறள்.) [REGISTERED.

கமலம்-3.	சென்னை: விபவஹு ஆவணிமீ 1உ	இதழ்-29.
Vol. 3.	1928-ம்ஹு ஆகஸ்ட்டுமீ 15உ	No. 29.

ஆநந்த தர்சனம்

ஒன்றாகி மூன்றா யுயிர்த்துணையா யொப்பிலதாய்
நன்றாகி நின்றதனி நாயகனைத் துதிமனமே
நாயகனைத் துதிபுரியி னன்மையுறுந் தின்மையறுந்
தீயகம்போ மெய்துறங்காண் டேவர் பெறும்பேறே.

ஒன்றாகியும், மூன்றாகியும், உயிர்கட்குத் துணையாகியும், ஒன்றுக்கும் ஒப்பிலாததாகியும், யாவற்றிற்கும் நல்லதாகியும் இருக்கின்ற ஒப்பற்ற கடவுளை மனமே நீ துதிக்கக் கடவாய். அப்பேர்பட்ட ஆதிநாயகனைத் துதி செய்தால் ஸகல நன்மைகளுமுண்டாகும், தீங்குகளெல்லாம் அற்றுப்போகும், நரகமும் நீங்கும். தேவர்கள் பெறும்படியான பாக்கியத்தையும் நாம் அடைவதற்கு வல்லவராவோம்.

***

"உள்ளங்குழைய உடல்குழைய வுள்ளிநந்த கள்ளங்குழைய வென்று காண்பேன் பராபரமே" என்றார் சர்வேஸ்வரனைத் தரிசிப்பதின் பயனை யறிந்த ஒரு பெரியார். இந்த ஆவணி மாதத்தில் ஸ்ரீ கிருஷ்ண ஜனனம்

"அமிர்த குணபோதினி"யின் 56 பக்கங்களும் அமிர்த மயமே. அதன் பெயருக்கேற்றபடி ஸகல மங்களங்களையும் அளிக்கவல்லதாய், எல்லோரும் வாசித்து ஸந்தோஷம்படத்தக்க பரம சிலாக்கியமாய் அமைந்திருக்கிறது.

வருகின்றது. இழிவு படைத்த சிறைச்சாலையே ஸ்ரீ கிருஷ்ண பகவானின் ஜன்மஸ்தானம். அங்கு வஸுதேவர் தேவகி இவர்கள் காலில் விலங்கு பூட்டப்பட்டு அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். ஸ்ரீ கிருஷ்ண பகவான் சதுர்ப்புஜத்துடன் குழந்தையாக அவதரித்திருக்கின்றனர். கம்ஸனுடைய அகங்காரப் பிரபுத்துவம் நாளைக்கு பகவானால் இப்படித்தான் வீழ்த்தப்படப் போகிறதென்று காட்டுவதுபோலக் காவலாளர்கள் குறட்டை விட்டுக் கொண்டு அயர்ந்து தூங்குகின்றனர். வசுதேவரோ குழந்தையின் திவ்விய ரூபத்தைப் பார்த்து நமஸ்கரித்து, இந்த நான்கு கரங்களுடன்கூடிய ரூபகாந்தியை மறைத்து முன்போல் குழந்தையாய் விடும் என்று பிரார்த்திக்கிறார். ஸ்ரீ பகவான் பிறந்ததும் காடாந்தகாரமான சிறையில் கோடி சூர்யப் பிரகாசமாய் ஒளிவீசியது. துஷ்டர்கள் மனம் பதைபதைத்து விழுந்தது. பக்தர்கள் ஆடிப் பாடி ஆர்த்தனர். சிறைக்கதவு திறந்துகொண்டது. வஸுதேவர், தேவகி இவர்களின் கால் விலங்குகள் முறிந்தன. நாட்டை நலிவிக்கும் அடிமைத்தனம் நீங்கி, நலமும், தனமும், சுகமும் பெருகிட ஜனங்கள் ஆநந்தமாய் அனுபவித்தார்கள். நமக்கும் அந்த ஆநந்தாமிர்தம் சித்திக்குமாறு பகவானின் அவதார தினத்தை கொண்டாடக்கடவோம்.

***

உன்னை மறக்கி லேந்தா யுயிரொன்னுடம்பில் வாழுமோ?'' என்று பக்தாதிகள் பகவானைப் பாடித் துதிக்கும்போது கல்நெஞ்சமும் கரைந்துருகும். ஈசனை வெளிக்கண்ணால் ஒருபோதும் காணமுடியாது. ஞானக் கண்ணை விருத்தி செய்தால் பகவானை யடைவது ஸாத்யமாகும். கண் பார்க்கிறது, அதனுடைய சக்தியால் பதார்த்தங்களின் ரூபம் ஆகிருதி ஸ்வபாவங்களை யறிகிறோம். புத்தி பார்த்த பொருள்களின் குணதோஷங்களைப் பிரித்துக் காட்டுகிறது. எல்லா இந்திரியங்களிலும் நயனேந்திரியம் சிலாக்கியமென்கின்றனர். வெளிக்கண்ணுக்கே இத்தனை மகிமை இருக்கையில் ஞானக் கண்ணுக்குள்ள விசேஷத்தை எடுத்துக் கூறமுடியுமோ? உத்தம ஞானத்தைப் பெறுதற்கு சுத்த ஹிருதயம் வேண்டும். ஹிருதய சுத்தியுண்டாக ஸத்கர்மங்களைச் செய்வது அவசியம். மனதை யடக்கியாண்டால் ஸகலமும் வசமாகும். அந்தர் திருஷ்டியின் பெருமையை அளவிட முடியாது.

***

"இன்றே பகலோ விரவோ வருநாளி லென்றே வறியே னெளியேனே'' என்று வருங்கால மறிய இயலாமையைக் குறித்துப் பெரியோர்கள் கூறியுள்ளார். உள்ள சொற்பநாளிலேனும் பக்தியாபரணம் பூண்டு பரவசமுறாமல் பாமரராய்ப் பல பல போக்கில் இருப்பது பரிதாபமன்றோ? உலகத்தில் நாலுவித சுகங்கள் இருக்கின்றன. ஒரு சுகமாவது ஞானமில்லாமல் அனுபவிக்க முடியாது. ஒரு புஸ்தகத்தை வாசித்தால் அதிலுள்ள விஷயங்கள் வெகு உவப்பாயிருக்குமென்று வைத்துக்கொள்வோம். அதைப் படிப்பதற்கு அக்ஷர ஞானம் வேண்டும். ஒரு வாக்கியம் எழுதுவதற்குப் பத ஞானம்

நமது மனம் சிலரால் சந்தோஷமடைகிறது; சிலரால் துன்பமடைகிறது; சிலரால் கோபங்கொள்ளுகிறது. எதிர்ப்படுகிறவரது தன்மைக்குத் தக்கபடி நமது குணம் மாறும் போலும்.

வேண்டும். கர்த்தா, கர்மா, கிரியை ஆகிய மூன்றையும் இன்னின்ன இடங்களில் அமைக்கவேண்டுமென்ற இலக்ஷணம் தெரிந்தால் வெகு சுகமாயிருக்கும் நிற்க, ஒரு பழத்தை எடுத்துக்கொள்வோம். எக்காரணத்தாலோ நாக்கு மரமரத்துப் போனவனுக்கு அப்பழத்தின் ருசி தெரியாது. சுவை அறியும் ஞானமில்லாவிட்டால் ருசியாலுண்டாகும் சுகமே கிடையாது. சிலருக்கு ஸங்கீதத்தின் இனிமையைக் கேட்க இயலா. காரணம் அவர்களுக்கு அந்த ஞானம் இல்லாமையே. இம்மாதிரியான ஞானங்களெல்லாம் அற்பஞானமென்னும் வகுப்பைச் சேரும். மிருகங்களுக்கும் மனிதர்கட்கும், புல் பூண்டுகளுக்கும் பசி யென்ற ஒரு ஞானமுண்டு. பசியுண்டானல் மனிதர்கள் ஆகாரத்தைத் தேடுகிருர்கள். இன்னும் சமயல் ஆகவில்லையா வென்று கூச்சல் போடுகிருர்கள். பசியுண்டானல் புற்பூண்டுகள் வாடி வதங்குகின்றன. அவைகட்கு நாம் ஜலத்தைக் கொட்டி வளர்த்துச் செழுமையாக்குகிறோம். அல்லது வருணனுவது மழையை வருஷிக்கிறான். இப்படிப்பட்ட ஞானம் எல்லோருக்கு மிருப்பதால் இதுவும் அற்ப ஞானமேயாம். இதைவிட மேலானது புண்ணியமின்னது பாவமின்னது என்று பகுத்தறியும் அறிவு. இது மனிதர்கட்கு மட்டுமேயுண்டு. அந்த ஒரு விஷயத்தில் மட்டுமே மனிதன் மேம்பாடுடையவன் என்போம். ஆயினும் அநேகர் பகுத்தறிவு ஒன்றுமட்டு மிருந்தாற் போதுமென்பர். இது பிசகு. அவர்கள் ஏறக்குறைய பசுக்களுக்கு ஸமானமே. மேன்மேலும் ஞானத்தை விருத்தி செய்துகொள்ளவேண்டும். ஞானமானது படிப்பிலும், பெரியோர்களின் ஸகவாசத்தாலும் லபிக்க வேண்டும். படிப்பு ஏறவேற அடக்கமும், அமைதியும், நற்குணமும் பெருகுவ தவசியம். பெரியோர்களின் ஸகவாசத்துக்கும் இந்நற்குணங்கள் முக்கியமாகும். ஆதலால் கல்வி யென்னும் தங்கத்தின் மத்தியில் நற்குணமென்னும் நவரத்தினமிழைத்திருந்தால் மனுஷ்யன் பிரகாசிப்பான். அவனுடைய கீர்த்தி உலகெங்கும் பரவும். இப்படி சாமான்ய ஞானத்தாலேயே அநேக துக்கங்கள் நிவர்த்தியாகி சுகம் ஏற்படுவது மெய்யானல், ஆத்ம ஞானமாகிய சிறந்த ஞானத்தால் பிரம்மாநந்த முண்டாகத் தடையென்ன ? இந்த ஞானத்தை நாளை நாளையென்றில்லாமல் இன்றுமுதற்கொண்டே எய்துதற்குப் பிரயத்தனிக்கக்கடவோம்.

* * *

"ஸர்வலோக சரண்யன்" என்று பகவானைப் பெரியோர்கள் சொல்லுகிருர்கள். ஆகவே, நாம் கடவுளின் பாத கமலங்களை ஸதா தியானித்துக் கொண்டிருந்தால் விபத்துக்களெல்லாம் நீங்கிச் சுகமுண்டாவதற்கென்ன தடை ? உலகத்தை யொருமுறை சுற்றிவந்தால் விவித வர்ணமுள்ள மனிதர்களையும், ஸம்பிரதாய வேறுபாடுகளையும் பார்க்கலாம். கணக்கற்ற ஜாதியாரா யும் மதஸ்தராயும் பிரிந்திருக்கும் உலகினர் கடவுள் ஒருவர் உண்டென்றும், அவரைப் பக்தி செய்தால் பாபவிமோசனமாகி நற்கதி கிடைக்குமென்றும் நம்பியிருக்கின்றனர். அநாகரிகர் என்றும் நாம் கூறும் கீழ்த்தரமான ஜாதியார் கூட ஈசுவர பஜனை செய்யும்போது, நாகரிகர் என்று நம்மைச் சொல்லிக்

ஒரு எஜமானன் தன் தொழிலில் சம்பந்தப்பட்ட முக்கியஸ்தர்களை அவர்கள் அதிர்ப்திபடும் ஸ்தானத்தில் வைத்திருப்பது தோணியடியில் சிறு தொளைபோலாம். நடு ஆற்றில் இத்தொளையின் சங்கதி தெரியும்.

கொள்ளும் நாம் க்ஷணகாலமேனும் பகவானைப் பஜிக்காமலிருக்கலாமா? ஒரு நிமிஷ நேரத்தையும் வியர்த்தமாக்காமல் ஸதா பகவந்நாம ஸ்மரணை செய்யக் கடவோம்.

***

"புண்யம்" என்னும் பதத்திற்கே சுத்தமென்று பொருள். சுத்தமாயிராதோர் புண்ணியசாலிகளல்லர். எப்போதும் சரீரம், துணி, ஸ்தலம், ஹிருதயம் இவற்றை சுத்தமாய் வைத்துக்கொள்வதுதான் நாகரிகமாகும். பொய்யும் வஞ்சனையும் ஹிருதயத்தை இருப்பிடமாகக் கொண்டால் நாம் பாபிகளாவோம். பகவான் நம்மிடம் வெறுப்பு கொள்வர். இறைவனால் அருளப்பட்டதென்று நாம் நம்பும் வேதத்திற்சொல்லியபடி ஸகல கர்மங்களையும் செய்து வந்தால் புண்யம் லபிக்கும்.

***

"பற்றித் தொடரும் இருவினைப் புண்ய பாபமுமே" என்பதற்கிணங்க நல்வினை, தீவினை ஆகிய இரண்டும் இறந்தபின் நம்மைத் தொடர்கின்றன. நல்வினை அதிகமானால் ஸ்வர்க்கமும், தீவினைக்கேற்றபடி நரகமும் கிடைக்கும். இவ்விரண்டு வினைகளுமற்று ஞானோதயமானால் முக்தி யுண்டாகும். தானே எங்கும் வியாபித்திருக்கும் பிரம்மமென்று தோன்றும். இருவினை என்னும் திரையால் மறைக்கப்பட்டு விழிக்கும் ஜீவனுக்கு முக்தி மார்க்கத்தைக் கற்பிப்பதுதான் ஸத்குருவின் லக்ஷணம்.

***

"நம்பனே வந்துன் றிருவடி யடைந்தேன்" எவ்வாறாக, ஜீவன் வெகுகாலமாய்த் தொடர்ந்து வந்த குணமயமான போகப் பிரவிருத்தியானது எவனிடத்திலிருந்து உண்டாயிருக்கிறதோ, அந்த ஆதி பரம புருஷனையே அக்ஞான நிவர்த்தியின் பொருட்டும் சரணாகதியடையவேண்டியது என்று சாஸ்திரம் கூறுகிறது. எவன் சிக்ஷிக்கும் அதிகாரம் பெற்றிருக்கிறானோ அவனே இரக்ஷிக்கும் சக்தியையும் கொண்டவன். அதுபோல, ஒருவித பிரமையை உண்டாக்கிய பகவானே அந்தப் பிரமையை நீக்கி நமக்கு நிச்சய ஞானத்தைக் கொடுக்க வல்லவராதலின், அவருடைய கருணையை யடைவதற்கு ஸதா பக்தி செய்துகொண்டிருக்கக் கடவோம்.

***

"ஸந்தோஷம்" என்பது ஆசை, சிரத்தை, இச்சை, பக்தி என நான்கு வகைப்படும். பொன் முதலியவற்றில் கொள்ளும் ஆசை ஒருவித ஸந்தோஷம்; கர்ம உபாஸனைகளில் கொள்ளும் சிரத்தையால் ஒருவித சந்தோஷமுண்டாகும்; கிடையாத வஸ்துவிலே கொள்ளும் இச்சை ஒருவித ஸந்தோஷம்; குருவினிடம் வைக்கும் பக்தியால் ஒருவகை ஸந்தோஷம் உதிக்கும். இப்படியாக மனிதர்கள் ஸந்தோஷம் கொள்ளுகிறார்களே, இதைப்போலவே கடவுளிடமும் ஸந்தோஷம் கொள்ளுகின்றனர். ஆகையால் அதைமட்டும் ஆநந்தம் என்பானேன் என்பது கேள்வி. இதற்கு ஸமாதானம்

தீய இச்சைகள் நெஞ்சுக்குள்ளேயே அழுகி விஷமுடையனவாய்ப் படீரென வெடிக்கின்றன.

மேலே கூறிய விஷயங்கள் ஒவ்வொரு காலத்தில் கொள்ளத்தக்கவையாயும், ஒவ்வொரு ஸமயத்தில் விலக்கத்தக்கவையாயு மிருக்கின்றன. பகவத் விஷயமோ அப்படியல்ல, ஒருபோதும் கைவிடப்படாதாகையால் பகவத் தியானமே பரம ஆநந்த மென்கிறோம்.

***

"உண்மையான ஈசுவர பக்தி" யுடையவர்கள் அந்த ஈசுவரனால் சிருஷ்டிக்கப்பட்ட எதையும் விரோதியார். தமக்குத் துன்பம் இழைப்பதாய்க் காணப்படும் ஜீவராசிகளை விட்டு விலகுவர். இதுதான் ஸாத்வீகர்கள் செய்யும் காரியம். எழும்போதும் பேசும்போதும் கோபத்தைக் கொள்வது அயுக்தம். அன்னியரை நிந்திப்பது தம்முடைய மௌட்யத்தை வெளிப்படுத்துமென்பதை எல்லாரும் நன்றாய் உணரக்கடவர்.

***

"யார் உயர்ந்தவர்? யார் தாழ்ந்தவர்?" எல்லாம் உலகமயக்கமேயன்றி வேறில்லை. ஒருவன் ஒரு உத்தியோக ஸ்தானத்தில் அமர்த்தப்படும்போது எல்லோரும் அவனைப் புகழ்கின்றனர். அவன் காலம் முடிந்து வேலையிலிருந்து நீங்கும் சமயத்தில் அவனை எவரும் பொருட்செய்வதில்லை. அவனுக்குப் பதிலாக வருபவனுக்கு முகஸ்துதி கூறுகின்றனர். இதுவே பிரபஞ்ச நிலைமை.

***

" தேகவாஸனை, உலோகவாசனை, சாஸ்திரவாஸனை " என மூன்று வாஸனைகள் உண்டு. பூமியைப் பிரதக்ஷணம் செய்து பல ஸ்தலங்களுக்கும் சென்று புண்ணிய காரியங்களைச் செய்வோமென்பது தேகவாசனை. உலக வாஸனையானது தன்னை உலகத்தார் புகழவேண்டுமென்கிற விருப்பம் கொள்வது. இவ்வித விருப்பமுள்ளோர் பிறர் செய்யும் இகழ்ச்சிக்குப் பயந்து புகழ்ச்சிக்காகமட்டும் மகிழ்ச்சியடைவர். சாஸ்திரவாஸனை யென்பது பலவித சாஸ்திரங்களை படித்தறிவோமென்பது. எத்தனை சாஸ்திரங்கள் படித்தாலும் ஆத்ம ஞானமானது குருகடாக்ஷமின்றி யுண்டாகாது.

***

"நிராசை"—அதாவது ஆசையின்மை. இதை நாம் அடைவது எவ்வாறு? எல்லாப்பொருள்களுக்கும், பணத்துக்கும், பாக்கியங்கட்கும்—அவைகளைத் தேடுவதற்கு வேண்டிய முயற்சி—பாடு—உழைப்பு—பிரயாசை முதலியன வெல்லாம் நீ கொள்ளலாம். அதில் குற்றமில்லை. ஆனால், அவைகட்கு நீ சொந்தக்காரனா யிராதே. எல்லா வஸ்துக்களும் ஸர்வலோக கர்த்தருக்குச் சொந்தமென்று அவர்மீது அந்தப் பாரத்தைப் போட்டுவிடு. எவ்வாறு ஒரு கூலிக்காரன் எஜமானனுடைய பொருளை சுமந்து திரிகிறானோ அவ்வாறே கடவுளுக்குச் சொந்தமான சகல வஸ்துக்களையும் நீ வைத்துக்கொண்டிருக்கிறாய். எல்லாப் பொருளையும் ஈசுவரார்ப்பணம் செய். நீ அவற்றில் பேதமையால் ஆசை வைத்து அவையனைத்தும் உனக்கு உரியதாகக் கொள்ளாதே. இதுவே நிராசை யென்பதின் உண்மையான கருத்து.

அமிர்தகுணபோதினி

விபவஞு ஆவணிமீ 1௨

அதிர்ப்தி நன்மை தரும்.

ஓம்; திருப்திகொண்ட வாழ்க்கைக்கு விருத்தியில்லை. அதிருப்தி கொண்ட உள்ளத்திற்கோ மேன் மேலும் உயர்ந்து தாவ ஊக்கச் சிந்தனைகள் ஊறிச் சுரக்கும். அதன் அலைகள் வாழ்க்கையின் கரையிலும் வேகத்துடன் வந்து மோதித் தளர்ந்த நெஞ்சைத் திடப்படுத்தும். புத்துயிரும் உண்டுபண்ணும். அதிர்ப்தியுடையோன் ஸதா தொழில் புரிந்த வண்ணமாகவே இருப்பான். அவன் என்றும் ஓய்வு பெறுவதில்லை. தன் முயற்சியிலேயே அவனுக்கு நாட்டம். எத்தனை தோல்விகள் எதிர்ப்படினும் அவன் சலிப்பதில்லை. சோர்வையே அவன் காண்பதில்லை. சொர்க்க பதவியிலேயே அவன் நோக்கு. விடுதலையிலேயே அவனது காதல். அற்ப வெற்றிகளில் பூரித்துவிடுவதில்லை. பூரணமான வெற்றிக்கே அவனது நியானம். உச்சியை என்றைக்கேனும் எட்டிப் பிடித்துவிடுவோமென்று ஒரு உறுதி. உறுதியை நிறைவேற்றுவது இறைவனது சித்தம். சித்திக்குமோ தவறுமோ அந்தக் கவலை தனக்கு இல்லை. அதற்குரிய கடமையைச் செய்வது தனது கடன். அதற்கான முயற்சியை நடத்துவதுமட்டும் தனது பொறுப்பு. "திருப்தி" என்ற புனித வஸ்துவை அவன் அலக்ஷியம் செய்துவிடவில்லை. மானிட வாழ்வில் திருப்தி ஒரு பெரிய அமைதி என்பதை அவன் அறிந்தவனே. சமாதானத்தையும் சாந்த சித்தத்தையும் திருப்தி என்பது தரவல்லதென்று அவன் உணர்ந்தவனே. திருப்தியினின்றும் எய்தப் பெறும் அமிர்த குணங்கள் பொன்னேபோல் போற்றத்தக்கனவென்றும் அவனுக்குத் தெரியும். திருப்தி என்பது மானிட வாழ்க்கைக்கு ஓர் சிறந்த பூஷணம் என்பதை அவன் கண்டு வைத்தவனே.

எத்தகைய திருப்தியைப் பெற? அல்ப இஷ்ட பூர்த்திகளிலே திருப்தி கொண்டு விடுவதா? தன் முன்னே எறியப்படும் இரண்டொரு கற்கண்டுத் துண்டுகளிலே மயங்கிவிடுவதா? கற்கண்டு

நேசமாகிய அந்தரங்க அறைக்குள்ளிருந்து சில உதவிகளைச் சுமந்து வரும் தக்கோர் சிலர் உனக்கு இருந்தால் அது பெரிய பலம்.

செய்யும் தொழிற்சாலையையே முற்றுகையிட்டுப் பிடித்துவிட வேண்டுமென்பது தனது தீர்மானமாயிருக்கையில் இரண்டொரு கற்கண்டுத் துண்டுகள் பூரண திருப்தியைக் கொடுத்துவிடுமா? ஏன் தனது வாழ்க்கை உயரவில்லை? எது வந்து அங்கே குறுக்காக நின்று தடைபடுத்துகிறது? அதைக் கண்டறிவது அவனது வேலை. அவனது காலில் மோதி இடறப்பண்ணுவதை அப்பால் எடுத்தெறிந்துவிட்டுப் பாதையைச் செம்மைப்படுத்திக்கொண்டு நெடுகச் செல்வது அவனது வேலை. ஈசன் எங்குள்ளானென்று அவரைத் தேடியவாறாகத் துருவன் என்ற சிறுவன் போய்க் கொண்டே இருந்தான். அவன் தனது அல்ப வாழ்விலே அதிருப்தி கொண்டுவிட்டான். ஆருயிர் அன்னையையும் விட்டுப் பிரிந்து விட்டான். அவன் எவ்வித வேதாந்த பாடங்களும் கேட்டவனில்லை. ஆயினும் என்ன? பெறுதற்கரிய மனோ உறுதியை அவன் தன்னுள்ளத்தே பெற்றுவிட்டான். அதிர்ப்தி கொண்ட தனது நெஞ்சின் ஆற்றாமையைத் தணிக்கும் பாதையிலே அவன் திரும்பிவிட்டான். எத்தனையோ இன்பக்காட்சிகள் அவன் கண் முன்புதென்படுகின்றன. அவன் விழிகள் அவற்றினை நோக்கவில்லை. எத்துணையோ பயங்கரத் தடைகள் எதிர்ப்பட்டன. அவனது அதிர்ப்தி யுள்ளத்தினது வேகத்தின் முன் எதுவும் ஒரு தடைகளாக அவனுக்குப் புலப்படவில்லை. அவற்றை அவன் லக்ஷ்யம் செய்யவுமில்லை. இறைவனை நேரிற்காண்பதே அவனது முடிவு. அதற்கே ஓயாத் தொழில்—முயற்சி. சலியாது போய்க்கொண்டே இருந்தான். அவனது திடசித்தத்தினை ஐயன் கண்டுகொண்டான். அவனுக்குப் பிரத்தியக்ஷமாவதானார். வெற்றியின் எல்லை கண்டான் துருவன். சித்தி பெற்றது அவனது கருத்து.

மருமகனுக்கு எவ்வளவு செய்தும் அதிர்ப்தி. வீட்டுக்கு எத்தனை பண்ணியும் அதிர்ப்தி. மனைவியின் தாய் வீட்டினரை எவ்வளவு உபசரித்தும் அவளுககு அதிர்ப்தி. உறவினருக்கு எவ்வளவு செலவிட்டும் அதிர்ப்தி. இந்தக் கேடுகெட்ட அதிர்ப்தியைப்பற்றி நாம் இங்கு சொல்லவரவில்லை. உயர்நிலையினதாகிய அதிர்ப்தியையே நாம் இப்போது பேசுவது.

அதிர்ப்தி கொண்ட சிந்தையில் பேராசை என்பது கலக்கவில்லை. பேராசை கொள்ளும் பேய்ப்புத்தி முயற்சியில்லாதவனுடையதாகும். அவன் படிகளை மிதித்துத் தாண்டிச் செல்லாமலே மேல்மாடிக்கு ஏறப் பார்க்கிறான். படிகளின்மீது ஏறிச் செல்லும் கஷ்டத்தினின்றும் தன்னை விலக்கிக்கொண்டு, மேல்மாடியில் நினைத்த

உயர்ந்த ஆசைகளால் தூக்கிய இறகுகளை யுடையவளாய் பாரததேவி தன் சகாயத்துக்கு உன்னை அழைக்கிறாள். சகோதரா! எழுந்து நில்.

நோக்நிலேயே போய்ச் சேர்ந்து ஆநந்தமாய் வீற்றிருக்கும் சுகானு பவத்திற்கு மட்டும் இச்சிக்கின்றான். உழைப்பதற்கு இச்சிப்பதில்லை. இதன் முடிவு அவனைத் தப்புவழிக்குத் திருப்பிவிடுகின்றது. துஷ் கிருத்தியங்களுக்குத் தூண்டுதலாகின்றது. முடிவில் அவன் தீயோனு கின்றான்; கெடுகின்றான். பேராசையின் பெரிய தீங்கு இது.

உண்மையில் 'அதிருப்தி' என்பதற்குக் கௌரவம் தருபவ னே சத்தியநெறி பற்றிச் செல்வான். இறைவனை நம்பி அவர்மீது பாரத்தைப் போட்டுவிட்டுத் தனது மீட்சிக்காகவும், உயர்நிலையின் பொருட்டும் ஓயாத் தொழில் புரிவான். அவன் நியவழியை நாடு வனே? பேராசை அவனை யணுகுமோ? பர்வத சிகரத்தின் உச் சிக்குச் செல்லுகிற மலையடிப்பாதையின் ஒவ்வொரு படியின்மீதும் பிரயாசத்துடனே ஏறுவான். வழுக்கி விழினும் மீண்டும் முயல் வான். எத்தனை எதிர்ப்புகள் நேரினும் அச்சமே யுள்ளத்துக்கொள் ளான். துணுக்குற ஓங்கி நிற்பான். மற்றொரு படியிலும் காலை யூன்றி, அமைதியும் பொறுமையுமாக மேலுள்ள படிகளிலும் ஏற முயன்றிடுவான். முடிவில் அவன் சிகரத்தை எட்டிப்பிடித்து உயரச் சென்று வெற்றியாளனுகின்றான்.

ஒவ்வொருவரும் தம் வாழ்விலே ஒரு மேலான லக்ஷியத்தைக் கைக்கொள்ளவேண்டும். லக்ஷ்யத்தை வெற்றிபெற முடிப்பதிலே நாளும் நாளும் முயற்சி முயலல்வேண்டும். 'திருப்தி' கோள்ளு தல் என்பது ஒரு லக்ஷியத்தில் வெற்றிபெற்ற பின்னரேதான். ஒரு ஊரை நோக்கிப் புறப்பட்ட ஒருவன் வெயிலாற் களைத்து ஒரு ஆல விருக்ஷத்தின் அடியில் தங்குவானுயின், அவனைத் திருப்தி கொண்டவ னுய்ச் சொல்லுதல் கூடுமோ? ஆனால், அங்கு அவன் தன் பிரயா ணத்தில் ஒரு சிரம சாந்தியை யடைகிறான். ஒருவித அமைதியான மனோநிலை பெற்று இன்பமெய்துகிறான். இந்த அமைதியும் இன்பமும் "திருப்தி" என்ற பொருளில் சொல்லத்தகுமோ? அது திருப்தி யாகுமோ? ஒருவித அமைதியை "திருப்தி" என்று அழைத்தல் பிழை. "திருப்தி"யை எவ்விடத்தில் கொள்ளவேண்டுமென்பதை அறியாதிருத்தல் இன்னும் அதிக தவறு செய்ததாகும். 'அமைதி' யும், அதன்வழியாக இன்பமும் அடைந்தவன் இன்னும் மேல் நடக்க முயன்று தொடர்ந்து பிரயாணம் செய்தபின்னன்றோ தான் குறித்த ஊரை யடைவான். அடைந்ததற்குப் பிறகு அவன் திருப்தி கொள் ளலாம். இடையில் கொள்வது ஆயாச பரிகாரமும் அமைதியுமே யன்றி அது "திருப்தி" யாகாது. இன்னும் ஊர் கிட்டவில்லையே என்ற "அதிர்ப்தி" அவன் உள்ளத்தே பெருகப் பெருக அவனது

இந்தியாவின் விதியாகிய பாலைவனப் பாதையிலே சிதறுண்டு கிடக்கும் பயனற்ற நல்லெண்ணங்களின் எலும்புகள் எத்தனை எத்தனையோ?

நடையும் தீவிரங்கொள்ளும். அதனுல் விரைவினில் தான் கருதிச் சென்ற ஊரை வெகு துரிதத்தில் அடைந்து விடுதல் கூடும். இங்ஙனம் அதிர்ப்தி கொள்ளாது மார்க்கமத்தியில் ஏதோ ஒரு அமைதியைப் பெற்றுத் தங்குமிடத்தில் அதையே ஒரு திருப்தியாக அவன் தவறுதலாய்க் கொண்டுவிடுவானுகில், மேல் கொண்டு நடக்கவும், நடந்து உத்தேசித்த ஊர் சேரவும் அவன் துணியப்போவதில்லை. அவ்விடத்திலேயே அவன் நின்றுவிட நேர்கிறது. இது பிழைபட்ட தான திருப்தி செய்யும் கெடுதி. இவ்வித பிழைபட்ட திருப்தியைக் குறிப்பிட்டே "திருப்தி கொண்ட வாழ்க்கைக்கு **விருத்தியில்லை**" என்று தலைப்பில் குறிப்பிட்டதாகும். முதல்தரமானதும், உண்மை வடிவமானதுமான "திருப்தி"யோ வாழ்க்கையின்—லக்ஷ்யத்தின் வெற்றிக்குப் பின்னரேதான் விளைவதாகும். இதன் இடையிற் பாராட்டும் திருப்தி யெல்லாம் சாதாரணமான ஒருவித அமைதியே யாகும், அது கடைகெட்ட திருப்தியேயாகும். இதை வெற்றி முழக்கமான திருப்தியெனக் கொள்ளுதல் முற்றும் பேதமையாகும்.

"**அதிர்ப்தி நன்மை தரும்**" என்முர் **லார்ட் கிளாட்ஸன்.** இவர் இங்கிலாந்தின் காலஞ்சென்ற மாஜி பிரதம மந்திரி. அதிர்ப்தி கொண்ட ஒரு நாடு, ஒரு ஜாதி, ஒரு ஜனஸமூகம் உடனே விழித்துக் கொள்ளும். தனது அடிமை நிலையை உதறி எறிந்து விடுதலைக்கு நாடும். வெற்றிமேல் வெற்றியாக நெடுகப் பெற்றுச்சென்று, தான் ஆதியில் எட்ட நினைத்ததைக் கூடியவிரைவில் கிட்டிவிடும்.

இந்தியர்கள் தங்கள் கருத்த தோலினுலேயே தாழ்ந்த வல்லமை யுடையவர்களென்று கருதப்படுகிற அபிப்பிராயம் நீங்க வேண்டுமானுல், அவர்களிடையே "அதிர்ப்தி" உதயமாகவேண்டும்.

விருத்தியாகும் தேசங்கள் எவை யென்பதும், விருத்தியாகாத தேசங்கள் எவை யென்பதும் அவ்வவற்றின் சரித்திரத்தால் நன்கு தெளியப்படும். விருத்தியாகும் தேசமானது வரவர அதிகாரத்திலும் செல்வாக்கிலும் பெருகி, க்ஷேமமும் செழிப்பும் பெற்று உலகத்தாரால் மதிக்கப்படும். விருத்தியாகாத தேசத்தைக் கவனிப்பார் கிடையாது. ஏன் விருத்தியாகவில்லை? உள்ளதே போதுமென்றும், இருப்பதில் திருப்தி கொள்வோமென்றும் கருதிவிட்ட சோம்பலான தன்மையால் தான். விருத்திபடைத்த தேசங்கள் எதனைத் தமது முதற் கருவியாகக்கொண்டன? **அதிருப்தியையே.** "அதிருப்தி" கொள்வோர் சலியாது உழைத்து எவ்விதத்தும் அமர நிலை காண்பர். அதமானதிருப்தி கொண்டுவிட்டவர்களுக்கோ விருத்தியில்லை.

நம்மவரின் கட்சிக்கூர்மையெல்லாம் தன் காரியக்குட்டித்தனத்தில் இருக்கிறது. பரோபகாரம் என்பது ஒரு கௌரவத்திற்காக பூணும் வேடமே!

ஒவ்வொரு நாட்பொழுதும் மாறுங்காலை கைக்குழந்தை தனது நிலையில் தினத்துக்கொருவிதமாக அதிர்ப்தி கொண்டு முயல்கின்றது. கால்களை மட்டும் அசைத்துக்கொண்டு சிசுப்பிராயமாய்ப் படுத்திருந்த குழந்தை தன்னிலையில் அதிர்ப்தியுற்று ஒவ்வொரு படி உயரச்சென்று, எத்தனையோ முறை தவறி வீழ்ந்தும் பின்னடையாமல், மறுபடியும் மறுபடியும் முயன்று தானாகநின்று நடக்கத் தெரிகிறவரை எவ்வளவோ பாடுபட்டு முடிவில் வெற்றியைக் காண்கின்றது. படுக்கவிட்ட இடத்திலேயே கிடந்த தனது நிலைமையில் அதிர்ப்தி கொண்டதின் விளைவு இது. படுக்கை நிலையே சுககரமென்று குழந்தை தன்னுள் திருப்திகொண்டிருக்குமாயின் அது என்றுமே மேலுயா இயலா. நடக்கவும் அது பயின்றிடாது. எதுமறியாத சிசுவுக்குங்கூட "அதிர்ப்தி" என்னும் கூர்மையான மதியை அளிக்கும் இறைவனின் திருவுளக் கருத்தினை இங்கு தெளிவுறக் காண்க. "அதிர்ப்தி" கொள்ளுதல் ஆண்டவன் அங்கீகரித்ததாகும்.

அதிர்ப்தியிலிருந்துதான் புதிய ஊக்கம். அதிர்ப்தியிலிருந்துதான் வெற்றிமேல் வெற்றி. அதிருப்தியிலிருந்துதான் முன்னேறுகை. அதிர்ப்தியிலிருந்துதான் அபிவிருத்தி. அதிர்ப்தியிலிருந்துதான் ஸகல செல்வங்களும் தனதான்யங்களும் சுகாநுபவங்களுமாம்.

தன் வாழ்க்கையில் அதிருப்தி கொள்வோன் மேலுயர எழுவான். தனது ஸம்பாத்தியத்தில் அதிர்ப்தி எய்தினோன் பின்னும் பின்னும் முயன்று அதிக சம்பாதனையைத் தேட விரைவான். தான் சேர்த்துவரும் பணத்தில்—செல்வத்தில் அது எம்மாத்திரம் என்று அதிர்ப்தி காண்போன் பெருந்தொகையையும் பெருஞ் செல்வத்தையும் குவிக்க ஓயாது தொழில செய்ய நாடுவான். தான் இருக்கும் சிறு வீட்டில் அதிர்ப்தி கொண்டவன் பெரிய வீட்டைக் கட்டிவிட சலியாது முயற்சிப்பான். உள்ளது ஒரே குழந்தைதான் என்று அதிர்ப்தி கொண்டவன் அக்குழந்தையுடனும் குலாவி மகிழ்ந்துவிட்டு, இன்னும் மக்கட்பேற்றுக்கு ஐயனை வேண்டுவான்—பெற்றுக் கொள்வான். ஒரு நன்மனையாள் இல்லையே என்ற அதிர்ப்தி மிக்கோன் விரைவில் மணமகனாவான். வந்தவள் துன்மதியாயிருப்பினும் புனிதவதியாகத் திருத்தி செம்மைப்படுத்திவிடுவான். தன் கத்தி கூர்மையில்லையே என்ற அதிர்ப்தி கொண்டவன் உடனே தீட்டவும் சாணைக் கல்லில் தேய்க்கவும் சென்று சித்தி பெறுவான். தான் எழுதும் மேஜை ஒழுங்காயில்லையே என்று அதிர்ப்தி கொள்வோன் உடனே அதை அழகுபெற அமைப்பான். தன் புஸ்தகங்கள் அலங்கோலமாய்ச் சிதறிக்கிடக்கின்றனவே என்று அதிர்ப்தி எற்போன் அதை நன்றாக அடுக்கி ஒழுங்கு செய்ய உடனே எழுவான்.

நமது கைக்குள் காரியங்கள் அடங்கி நடக்காவிட்டால் நமக்குக் கைகள் இருந்து பயன் என்ன?

வீட்டுக்குரிய பாத்திரங்கள் போதாதென அதிர்ப்தி கொண்டோன் விரைவினில் வீடு முற்றும் பாத்திரங்களாக்கிவிடுவான். இன்னும் தான் ஒரு நூலும் இயற்றவில்லையே என்று அதிர்ப்தி கண்டவன் எவ்விதத்தும் பிறகு ஒரு சிறந்த கிரந்த கர்த்தா ஆகிவிடுவான். தான் வெகு சிரமப்பட்டு ஒரு வியாசம் எழுதியிருப்பினும் அதனை மற்றொரு முறை வாசிக்கையில் அதிர்ப்தி காண்போன் அதைத் தன்னருகே வைத்துக்கொண்டு அதனினும் சிறந்ததாக மற்றொன்றினை வரைந்து விட்டு முன்னதைக் கிழித்தெறிவான். ஒரு நூலை ஆக்கப் புகுகையில் தான் செல்லும் வழியில் அதிர்ப்தி கொண்டோன் அந்த க்ஷணமே புது கற்பனைகளைப் பெற்று இன்னும் மேன்மையதான வகையில் அதை இயற்ற விரைவான். தான் பயின்ற கல்வி போதாதென்று அதிர்ப்தி கொண்டோன் பிறகு ஒரு சிறந்த வித்வானாகிவிடுவான். நன்றாக விருந்தினர்களை உபசரிக்கவில்லையே என்று அதிர்ப்தி கொள்வோன் மறுநாள் இன்னும் சிறப்பாக விருந்து நடத்துவான். தன் அரிய குமார்த்திக்குத் தக்க சீதனங்கள் தரவில்லையே என்று அதிர்ப்தி கொள்வோன் மேலும் மேலும் வாரிக்கொடுத்த வண்ணமே இருப்பான். அதிர்ப்தி என்பது அபிவிர்த்திக்கு வித்து. மேலோங்குதலுக்கு அது உயிர் நிலை. தூண்டுதலுக்குத் துணை.

ஒரு பெண்மணி தன் பர்த்தாவுக்குத் தான் செய்யும் பணிகள் போதாதென அதிர்ப்தி கொள்ளுவாளாகில், இன்னும் நன்றாக நடக்க முயல்வாள். அவர் மனம் புண்பட ஏன் நடந்தோமென்று தன் செய்கையில் அதிர்ப்தி மிகுவாளாயின், அந்நாயகம் இனி என்றும் பிழைபட நடவாள். போகம் தருவதில் பாகம் தவறுகிறதோ வென அதிர்ப்திகொண்ட கற்பின்மிக்காள் இன்னும் சரசச் சிறிக்கியாய் தாசிக்கும் மிஞ்சி நடந்து தன் பர்த்தாவை ரம்மியப் படுத்துவாள். மாமனார் மாமியார் முதலியவர்கட்குத்தான் நடக்கும் விதம் சரியில்லையென அதிர்ப்தி மிகும் தையலாள் விரைவினில் நற்பெயர் காண்பாள். தன் இல்லரசிக்குப் போதிய நகைகள் பூட்டவில்லையென அதிர்ப்தி கொள்ளும் நாயகன் சிறுகச் சிறுக முயன்று சீர் படுத்திவிடுவான். தன் மனையாளைத் தான் நடத்தும்விதம் சரியில்லையென அதிர்ப்தி கொள்வோன் அன்றுமுதல் உத்தம கணவனாய்விடுவான். தாயற்ற குழந்தைகளைத் தான் செம்மையாய்ப் பராமரிக்கவில்லையென அதிர்ப்தி நெஞ்சம் ஒரு மாற்றாந்தாய்க்கு உதிக்குமாகில் அவள் தங்கக்கட்டியாய்விடுவாள். அதிர்ப்தி கொண்ட ஏவலாள் பின்னொரு காலத்தில் எஜமானத்வ உயர்வையும் எய்துவான். தன்னிலையில் அதிர்ப்தி கொண்ட போர்வீரன் என்றாவது ஒருநாள் படைத்தலைவனாவது உறுதி.

மனுஷ்யன் மிகவும் உயர்ந்த ஸ்திதியை அடையும்போது தன்னை மறக்கிறான்.

தனக்கு ஒரு நிலமில்லையே, வீடு இல்லையே யென அதிர்ப்தி கொள்வோன் என்றுவது தன் உழைப்பினூடே அதனைப் பெற்றே தீர்வான். தான் உழைத்தே—எஜமானன் மச்சு வீட்டில் வாழ்வதென்று உணரும் தொழிலாளி தனது அற்ப சம்பளத்தில் அதிர்ப்தியுறுவானாயின், அதனினும் அதிகமாக அவன் பெற்றுக்கொண்டுவிட முடியும். தான் கடவுண்மாட்டுச் செலுத்திடும் பக்தி எம்மாத்திரம் என அதிர்ப்தி கொள்வோன் பரம பக்தனாகிவிடுவன். தனது தர்மங்கள் போதாதென அதிர்ப்தி கொள்வோன் பின்னாளில் கர்னனையொத்தவனாவன். தான் பிறந்தது தன்மட்டில் உண்டு சுகித்தற்காவென அதிர்ப்தி கொள்வோன் பின்னர் ஒரு தேசோபகாரியாவான்.

இங்ஙனமே நெடுக அதிர்ப்தி ஒரு புதிய வாழ்வையும், ஒரு புதிய பக்குவத்தையும் ஈந்திடும். திருப்தியில் மூன்றுவிதம் உண்டு. (1) **அதம திருப்தி**; இது உள்ளதே போதுமெனத் திருப்திகொள்வது. இதனை ஒரு **அமைதி** என்று மட்டுமே பேசல் வேண்டும். (2) **மத்திம திருப்தி**; அதிர்ப்திபட்டு முயன்று இடையிற் கிடைத்த லாபத்தில் சாந்திகொண்டு நடுவழியில்; நின்றுவிடல்; அத்துடன் ஆவல் தணிந்து போகுதல். (3) **உத்தம திருப்தி**; தன் வாழ்நாளளவும் அதிர்ப்தியே கொண்டு மேன்மேலும் சிறந்து விளங்க அவாவுற்று முயன்று, கிடைத்தளவில் மனோசாந்தியையும் நிம்மதியையும் ஏற்று, கிடைக்காததைப் பெறுவதிலேயே சிந்தையாய் என்றும் உயர்தர நோக்கினனாய் உற்சாகத்தோடும் உலகுக்கு ஓர் உதாரணமாயிருத்தல். இதுவே உத்தம திருப்தியின் உயர்ந்த நிலை. இவ்வுத்தம ஸ்திதிக்கு ஒருவனை உயர்த்துவது **அதிர்ப்தி** என்னும் ஸஞ்சீவியே. இந்த ஸஞ்சீவியில் சோர்வு இல்லை, சோம்பல் இல்லை, திணணைத்தூங்கித்தனம் இல்லை, பொறாமை யில்லை, பேராசை இல்லை, மற்றும் எவ்வித துற்சுபாவங்களு மில்லை. பின் எது எது உண்டெனில், புதிய ஊக்கம் உண்டு, புதிய உழைப்பு உண்டு, புதிய ஜீவனுண்டு, புதிய உணர்ச்சி உண்டு, புதிய முயற்சி உண்டு, புதிய நிலையுண்டு, புதிய புத்திகூர்மை உண்டு, புதிது புதிதாக எதிர்ப்படுதலும் உண்டு, புதிய நிர்மாணிப்பு உண்டு, புதிய செல்வம்—பதவிகளுண்டு, புதிய வெற்றிகளுண்டு, வெற்றிமேல் வெற்றிகளுமுண்டு. தேசத்தின் விடுதலை அதிர்ப்தியின் கையில் இருக்கிறது. வாழ்க்கையின் புனித ஜென்மம் அதிர்ப்தியின் கையில் இருக்கிறது. பரகதியின் தூய வாழ்வு அதிர்ப்தியின் கரத்திலிருக்கிறது. அதிர்ப்தி ஒரு பரம ஸஞ்சீவி. அதிர்ப்தியில்தான் பிரபஞ்ச விருத்தி யிருக்கிறது. அதிர்ப்தி கடவுள் அருளிய ஒரு அரிய வரன். அதிர்ப்தி ஒரு புனித ரகசிய வஸ்து. அதிர்ப்தியின் முடிவே உத்தம திருப்தியாகும். அதிர்ப்தி கொள்க. அதிர்ப்தி பரவுக. அதிர்ப்தி வாழ்க.



தமக்கையின் மாண்பு.

1. தாயினுள் ளன்பு தமக்கையின் மனதில்
தழைப்பது காணலாம் ; தரையில்
சேயரை வளர்க்கத் தமக்கையென் றொருபெண்
ஜெனித்துமுன் னிருப்பதே சிலாக்யம் ;
ஆயநல் லின்ப மனைத்தினு மேலாய்
அமைந்தவோர் பாக்கிய மவளாம் ;
வாயது மலர அவள்தரு மொழியும்
மதித்திடில் தக்கதா மாண்பே.

2. சுவைதருந் தமக்கை யெனுமுடன் பிறப்பால்
தோன்றிடுஞ் செல்வநல் லின்பம்
இவைகளுக் கிணையாய் இப்பெரும் புவியில்
எடுத்துரை செய்வதெப் பொருளை?
கவைய று சிறிய பருவத்தி லிருந்து
களித்துட னாடியுண் டிருந்த
அவையெலாம் நினைக்கி லின்றொரு கனவாய்
ஆனதே போனதே அந்தோ !

3. களிபெறு தமக்கை மணமக ளாகிக்
கணவனிற் புகுந்தஅக் கணத்தில்
கிளியது பறக்கப் பஞ்சரந் தனியே
கிடப்பதோத் திமனை கண்டு
தெளியமனம் பட்ட பாடோரு பாடோ ?
தெய்வமே யறியுமென் கண்கள்
தளியெலாந் தடவிச் சிவந்தன ; மீண்டும்
சந்திப்பை நோக்கினின் றனவே

4. அக்கைதான் புகுந்த மனையடுத் தாலும்
அடிக்கடிப் பிறந்தவீ டடுப்பாள் ;
அக்கணம் பார்க்க வாய்க்குமென் றகத்தில்
ஆசையை யடக்கிக்கொண் டிருப்பேன் ;
துக்கமே கொள்ளேன் துயர்மொழி விள்ளேன் ;
தோண்டிய மரணவெங் குழியில்
புக்கின ளென்றால் கண்மணி யவளைப்
போலினிக் காண்பது முண்டோ ?

5. நிதியிருந் தென்ன ? நிலமிருந் தென்ன ?
நினைத்ததை முடித்திட வல்ல
மதியிருந் தென்ன ? துதியிருந் தென்ன ?
மற்றுமெச் சீரிருந்தென்ன ?
பதியிருந் தென்ன ? பலனுடன் பிறப்பாம்
பைந்தருத் தமக்கையொன் றிருக்கில்
அதிசய வாழ்க்கை மேலுறும் ; மனைக்கோர்
அழகெனச் சொல்லுவ ரறிந்தே.

(தொடரும்.

அந்தத் திட்டுமட்டும் தித்திப்பா ?

தன் குமாரத்தியின் பிள்ளையான தன் பேரன் எவ்வளவு திட்டினாலும் எதிர்த்தாலும், அலக்ஷியமாய்ப் பேசினாலும் அது தன் மனதிற்குப் படுவதில்லை. தன்மகன் ஒரு வார்த்தை சாதாரணமாய்ப் பேசினாலும் அதற்கு உடனே சிடு சிடு! உடனே எதிர்ப்பு! உடனே கூரான அம்புச் சொல்! உடனே மனஸ்தாபம்! பேரனுக்குமட்டும் எப்போதும் மன்னிப்பு. மகனிடமோ எப்போதும் கசப்பு. பேரன் திட்டுமட்டும் தித்திப்பா ?

சிக்கனமாகச் செலவிடாத வீட்டில், மொத்தமாக மாதச் சாமான்கள் வாங்குவது கஷ்டத்திற்கே வழி. பாதி மாதத்திற்குக்கூட அது வராது.

சென்றுபோன நாட்கள்

ஸ்ரீமான் B. வேணுகோபாலசாமி நாயுடு.

("கோவை ஜனாபிமானி" பத்திராசிரியர்.)

தமிழ் நாட்டில் வாழ்ந்து சென்ற, இப்பொழுதும் ஜீவவந்தராயுள்ள பல பெரியோர்களின் சரித்திரங்கள் செம்மையாக வெளிவரவில்லை. அவை நம்மவர்களுக்கு ஓர் பெரும் சொத்து. அவர்களுடைய வாணாட்களின் அநுபவங்கள் நம் அறிவுக்கு ஓர் நல்ல உணவு. நம் எதிர்கால வாழ்க்கையை மிகுந்த எச்சரிக்கையுடனும் ஜாக்கிரதையுடனும் நடத்திச் செலுத்துவதற்கு அவை ஓர் துணைக்கோலாகும். பெரியோர்களின் சரித்திரங்களானது நம்மையும் அவர்களைப் போலொத்த மாக்ஷிமையான ஸ்தானத்துக்குக் கொண்டு போகக் கூடுமென்பதை நினைப்பூட்டுகின்றது. பிரபலமான சிலரது பெயர்கள் மட்டும் வெளிவருகின்றனவே யன்றி, மனஸ்பூர்வமாய் ஜன்மபூமிக்கு உழைத்த பலரது ஜீவியங்கள் எவருக்கும் தெரியாமலே போய்விடுகின்றன. இவற்றை ஒன்று சேர்த்துப் பிரசுரித்து நலம் செய்யவேண்டுமென்பது நமது நோக்கம். இக்கருத்துக் கிசைந்து எழுதியனுப்பப்படும் சரித்திரங்களை அன்புடன் ஏற்றுப் பிரகடனம் செய்யச் சித்தமாயுள்ளோம்.

ஸ்ரீமான் B. வேணுகோபாலசாமி நாயுடு ஒரு பத்திராசிரியரும் கிரந்த கர்த்தருமாவார். அவரது தமிழ் நடை மிகவும் உயர்ந்தது. எளிய நடையில் எழுதவும் அவருக்குத் திறனுண்டு. எல்லாம் அநுபவ மணிகளாகவே இருக்கும். அவருடைய வாக்கே ஒரு தனிவாக்கு. யாவும் சொல்லலங்காரமாய்ப் புனையப்பட்டிருக்கும், கம்பீரமான பதஜோடினைகளாகவு மிருக்கும். வீண் வளர்ப்பு அவரிடத்திலில்லை. எழுதுவனயாவும்கருத்துகளாகவே ஒளிரும்.

ஸ்ரீமான் நாயுடு 1905-ம் வருஷத்தில் கோயமுத்தூரி லிருந்தும் "கோவை சுஜனாபிமானி" என்று ஒரு தமிழ் வாரப்பத்திரிகையை ஆரம்பித்தார். பத்திரிகை மிகவும் சிறப்புடன் வாசிப்பதற்கு வெகு ருசிகரமாக இருந்தது. பத்திரிகை வெளியான சில வாரங்களுக்குள் அவருடன் கூட்டாக நின்றவர்கள் பத்திரிகை நடத்தும் முறையில் அபிப்பிராய பேதங் கொண்டனர். உடனே ஸ்ரீ நாயுடு "கோவை சுஜனாபிமானி"ப் பத்திரிகையை விட்டு விட்டுத் தமது சொந்தத்திலேயே "கோவை ஜனாபிமானி" என்ற பெயருடன் புதுப் பத்திரிகையைத் தொடங்கிக்கொண்டார். பத்திரிகை நேர்த்தியான முறையில் நடைபெற்று வந்தது. அந்த சமயம் ஸ்ரீமான் நாயுடு "எனது நெடுங் கனவு" என்றொரு நவீனகத்தையும் வெளியிட்டு உதவினார். அதில் தம்மையே கதா நாயகனாகக்கொண்டு தமது கனவில் ஒரு கதையைக்

"கல்லும் காவேரியும் உள்ளமட்டும் வாழ்க" என்பது ஒரு வாழ்த்து.

கண்டு அநுபவித்ததாகக் கற்பனை செய்து புதுவிதமாக வரைந்திருந்தார். அந்நாவீனகத்தின் நடை மிக்க அலங்காரமானது. உயர்தனிச் செம்மொழியில் அமைந்தது. அந்நாவின் முகவுரையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார் :—

***

"நீந்தமிழுலகமாட்டு ஆர்வமிக்குடைய கவிவாணரிற் சில்லோர் உலோகோபகாரத்தை முன்னிட்டுத் தமது கல்வி ஞானத்தைக் காவிய ரூபமாகவும், வசன கதா ரூபமாகவும் உணர்த்திவரும் பண்டை வழக்கம் இன்றைவரை வளர்ந்தோங்கி வருவது வெளிப்படை."

"இதன் சார்பான கற்பனாலங்காரக் கதைவரிசைகள் நாளதுவரையும் நூற்றுக்கணக்காக அச்சுவாகன மூர்த்து வெளிப்போந்துலாவுகின்றன. அவைகளிற் கற்றோர் ஞானத்தையும், கல்லாதார் சிந்தையையும் ஒருங்கே கவரத்தக்கன சில. இவ்விருதிறத்தவரின் கருத்துக்கு ஒத்தும் ஒவ்வாதும் நின்றது பிறவாம். நடுநிலையாகப் பார்க்குமிடத்து அறிஞர் குழாங்கட்கு இன்பம் பயப்ப மகுடமாக நிற்பது விசேஷ கற்பனாலங்காரமும், காதலுறு நடையும், இதமுறுங் கோர்வையுமேயாம்."

***

என்று தமது முகவுரையை எழுதிச் சென்றுள்ளார். இனி அந்த நாவலின் ஆரம்பவாசகத்தின் சுவையையும் குறிப்பிடுகிறோம்.

***

"கடந்த வாரத்தோர்நாளிரவு யான் கடிமணம் புனைந்த கட்டழகியோடுங் கனவுல்லாசமா யுறங்குங்கால், கண்டனனொரு காக்ஷி—மாக்ஷிமையுடைய மா—விநோதக் கனவு. அதனை யான் கண்டின்புற்றவாறு உலகமும் கேட்டின்புறுமாறு ஈண்டு வரைவான் துணிந்தனன். * * * * * *"

***

என்று ஆரம்பித்துக் கற்பனாலங்காரம் மலிந்த நடையில் எழுதிச் சென்றுள்ளார்.

"கோவை ஜநாபிமானி" ஒரு வருஷம் வரையில் நடைபெற்றது. வழக்கம்போல் நல்ல பத்திரிகைகள் கொலையுண்டு போகுந் தன்மையதாக அதுவும் பிறகு நின்றுவிட்டது. அதற்குப் பின்பு எளிய நடையில் "கபட சன்னியாசி" என்றொரு நவீனகத்தை இயற்றி சேலம் "திராவிடாபிமானி"ப் பத்திரிகைக்கு அனுப்பினர். அப்பொழுது "திராவிடாபிமானி"ப் பத்திராசிரியராய் அதை நடத்திவந்த நாம் அக்கதையின் முதல் அத்தியாயத்தை 24-1-1908 உள்ள "திராவிடாபிமானி"யில் அவரது பெயருடன் பிரசுரித்து, மற்ற அத்தியாயங்களையும் தொடர்ச்சியாக வெளியிட்டு வந்தோம். அது ஒரு ரஸமான கற்பனை. அதன் ஆரம்ப வாசகத்தைத் "திராவிடாபிமானி"ப் பத்திரிகையிலிருந்தும் எடுத்து இங்கு பதிப்பிக்கின்றோம்.

***

"அத்வைத மதத்தின் சூக்ஷ்ம தத்வம் எனக்கு அனுபவ சாக்ஷியாயிருக்கின்றது. எனது மனோரதங்களை இலேசில் நிறைவேற்ற நான் இப்போது பூண்டிருக்கும் "சந்நியாசி" வேடத்தைவிடச் சிறந்த

பலனைத் தராத மரமும், வாஸனை வீசாத புஷ்பமும், ஆசைகளைத் துறக்காத துறவியும் விரும்பத் தக்கவரல்லர்.

தெது விருக்கின்றது? அத்வைதத்தின் உட்கருத்து எதிலும் பேதம் பாராட்டலாகா தென்றன்றோ? அது போன்றே **தாயும் மகளும் பெண்ணேன்பதே** எனது சித்தாந்தம். ஆழ்ந்து யோசித்தமட்டில் இத்தகைய பேதமற்ற கொள்கையே **"சச்சிதானந்தம்"** என்று எனக்குப் புலப்படுகின்றது. மற்றவர்களின் கருத்தெவ்வாறோ யானறியேன். சந்தேக நிவர்த்தி செய்துகொள்ள நான் இப்போது தயாராயில்லை. நான் இதுவரை பல வலைகளை வீசி உலகத்தைப் பலவிதத்திலும் வசப்படுத்தி என் மனோரதங்களை சம்பூர்ணப் படுத்திக்கொண் டிருப்பதுபோன்றே சமீபத்தில் ஒரு வலை வீசி யிருக்கின்றேன். நான் எதிர்பார்க்கும் "மான்" இந்த வலையிற் அகப்படாமற் போகாது. போகவும் நான் விடத் தக்கவனல்ல. * * *

***

இக்கதையில் தர்ம நியாயமான ஒரு வினா உதிக்கின்றது. அக்கபட சந்நியாசி தமது உத்தேசத்தின்படியே ஒரு வீட்டிற்குள் திடீரென்று சென்று தாம் விரும்பிய பெண்ணைக் கெடுத்துக் கற்பழித்து விடுகின்றார். எதிர்பாராத விதமாய் மோசம்போன அம்மங்கையைக் கணவன் சேர்த்துக் **கொள்வதா—தள்ளிவிடுவதா** என்பது இக்கதையின் முக்கிய கேள்வி. இவ்வினாவுக்கு விடை சொல்லும் வகையில் கதையானது தொடரப் பெற்று அதியத்புதமாய் முடிவுபெறுகின்றது. இந்நூல் இப்பொழுது தனிப் புஸ்தகமாய் அச்சிடப்பெற்றுள்ளது. அதில் இந்நூலாசிரியரின் பெயரில்லை. * * * * * அப்பெயரை அதில் காண வேண்டியது அவசியம்.

ஸ்ரீமான் நாயுடு அதன்பின் ஆசிரியத்தொழிலை விட்டுவிட்டு பம்பாயில் பிரபல வியாபாரியானார். அவருக்கு ஒரு செல்வ மகளும் குமாரனும் உண்டு. தமது புத்திரியைப் பெரிய பண்டிதையாக்கினார். **தமது உயிர் போன்றும் கருதினார்.** அத்தகைய புத்திரிகா ரத்தினம் கோயமுத்தூருக்கு வந்திருந்த சமயத்தில் இறைவனின் திருவடிநிழல் சேர, பம்பாயிலிருந்த தந்தைக்குத் தந்திபோயிற்று! அவர் வரும்வரையில் நிறுத்திவைத்திருந்தனர். **தந்தியைப் பார்த்த தந்தையின் வயிறு எப்படி எரிந்ததோ!** பம்பாயிலிருந்தும் கோயமுத்தூர் வந்து நவயௌவன யுவதியாய் விவாகமில்லாது மரித்த தமது கண்மணியைக்கண்டு அலறித் துடித்தார். அதன்பின்பு அவர் உருவே மாறி, தமது வியாபாரத்தையும் விட்டு எங்கோ சென்றுவிட்டார். வெகு காலத்திற்குப் பிறகு அவர் மலேயாவில் இருப்பதாகவும் **"ஆநந்த குண போதினி"**யைப்பிரீதியுடன் வாசித்து வருவதாகவும் நமக்குக் கடிதம் வந்தது. அக்கடிதம் எவ்விதமோ தவறிவிட்டதால் அவரது விலாஸத்தை அறியக்கூடவில்லை. அவர் தமது விலாசத்தை அன்புடன் தெரிவிப்பாரென்று நம்புகிறோம். தமிழ்நாட்டிற்குப் பத்திராசிரியராகவும், நூலாசிரியராகவும் தமிழ்த்தொண்டு புரிந்த பெரியோர்களுள் இவரும் ஒருவராவர். இனியும் அத்தொண்டினை அவர் இங்கு திரும்பி வந்து செய்யவேண்டுமென்று விரும்புகிறோம். இறைவன் அவரைக் காப்பாராக.

மதத்தின் சிறப்பையும், ஆசாரியரின் பெருமையும், ஸத்விஷயங்களையும், ஆஸ்திக பக்தியையும் கூறும் பத்திரிகையே அறிவுடையோரால் விரும்பத் தக்கவை.

பழமொழிக் குறிப்புகள்

2. அற்ப குணம்.

(187-ம் பக்கத் தொடர்ச்சி.)

103. நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தாலும், வாலைக் குழைத்துக்கொண்டு வெளியே போகும்.

அற்பர்களுக்கு அற்ப குணமே என்பது இதன் கருத்து. எவரெவருக்கு எதெது ஸ்வபாவமோ அதை அவர்கள் விடார். எவ்வளவு அன்புடன் பழகினுலும், விசுவாசித்து நம்பிக்கை வைத்து நடந்துகொண்டாலும் ஒரு காலத்தில் அவரவர்களின் ஜாதிக் குணத்தை அவர்கள் காட்டிவிடுவார்கள். ஒரு தாசியை ஒருவன் உயிருக்குயிராகவே நேசித்துத் தன் மனைவிக்கு சமமாக நடத்தினுலும், அவளுக்கு இவனைவிடப் பணக்காரன் வேருெருவன் அகப்படானு என்பதிலேயே நினைவிருக்கும். ஒரு வியாபாரியை எவ்வளவுக்கு நட்புகொண்டாலும் அவரிடம் பெறுகிற ஒரு காசுக்கும், ஒரு சாக்குப் பைக்கும்கூட வெகு சிரத்தையாய்க் கணக்கெழுதிக் கொண்டு போவார். வியாபாரமே தங்களின் லக்ஷியமென்றும் அதற்காகவே மற்றவர்களுடன் பழகுகிறதென்றும் கருதிக்கொண்டிருப்போர் எவ்வளவு அபரிமிதமான அன்பு வைத்துள்ளவர்களிடத்திலும் தங்கள் லாபத்தையே முதலாவதாய் எண்ணிக்கொள்வார்கள். தங்கள் சொந்த காரியங்களை உத்தேசித்து அதற்காகப் பழகும் உறவினரிடத்து மற்றவர்கள் எவ்வளவுதான் பிரீதிவைத்து நடந்துகொண்டாலும், அதற்குப் பதில் அன்பை அவர்கள் உணர்த்தாமல் தங்கள் மக்கள், தங்கள் பணம், தங்கள் காரியம் இவற்றிலேயே கண்ணுயிருக்கிற அல்ப புத்தியிலேயே போவார்கள். அற்ப குணமுள்ளவர்களை நமது தம்பியாயிற்றே, அந்த இந்த உறவாயிற்றே என்று எவ்வளவு தான் அன்பு வைத்துத் தழுவிச் சென்ருலும் ஒரு தினத்துக்குத் தங்களின் அல்ப குணத்தை விளக்கிவிடுவார்கள். அற்பகுணமுள்ள சில பெண்டீர்களுக்குப் பெரிய புத்தி தோன்றுவதில்லை. தன் கணவனுக்கு சம்பளம் வந்து அதை அவன் சந்தோஷத்துடன் வாங்குகையில் தங்கள் நகை ஞாபகங்களை யெல்லாம் அவன் எதிரில் கொட்டுவார்கள். அவனுக்கு வெளியில் எவ்வளவு கடன்கள் இருக்கின்றனவோ, எவ்வளவு கொடுக்கல்கள் உள்ளனவோ அவற்றை யெல்லாம் எண்ணுர். அவன் பிறகு ஆகட்டுமென்ருல், அவன் சந்தோஷத்துடன் சம்பளம் கொண்டுவந்த தினத்தைப் பாஷாணமாக்கிக் கலக நாளாய்ச் செய்து அவன் மனத்தைப் புண்ணுக்கி விடுவார்கள். இத்தகைய பெண்டீர்களை எவ்வளவுதான் திருப்திசெய்து அன்பாக நடந்து கொண்டாலும் அடிக்கடி முகம் கோணுதலும் சண்டைபிடித்துக் கொள்ளுதலுமேயாகி, அன்றைக்குப் புசிப்பை அவனே பானையைத் திறந்து தனக்குத்

மதஹீனர்களின் சிரிப்பும் விளையாட்டும் பழிப்பும் விவேகிகளுக்குக் கடோமாயிருக்கும். அனுசித பரிஹாஸத்தால் ஸ்நேகத்தைப் போக்கடித்துக் கொள்வோர் பலர்.

தானே எடுத்துப் போட்டுக்கொள்ள நேரும்படி செய்துவிடுகிறார்கள். இதில் மனம் வெறுத்து வீட்டைவிட்டுத் தொலையலாமென்று அவன் நினைத்தாலும் மக்களாசை அவன் காலுக்கு ஒருகால் விலங்காகி, அவனைப் போகவொட்டாது தடுக்கிறது. தன் குமாரன்மீது துவேஷபுத்தி கொண்டுவிட்ட ஒரு தாய் அந்த அல்ப குணத்தை வெகு நாள் வரையில் விடுவதில்லை. சிலருக்குப் பொறாமைப்படும் அல்ப புத்தி யிருக்கிறது. அவர்கள் நல்லது எது நேர்ந்துகொண்டாலும் அதன் குறுக்கே சென்று அதைக் கெடுத்துவிட ஆயிரம் சூழ்ச்சிகள் செய்வார்கள். சிலருக்கு அவன் அப்படி, இவன் இப்படி என்று ஒவ்வொருவரையும் கேவலப்படுத்திப் பேசுகிற அல்ப புத்தி அதிகம். இவர்கள் தாங்களும் ஒரு நிலையாய் ஒரு தொழிலைச் செய்யார்கள். ஒரு இடத்திலும் ஊன்றியிருந்து தங்கள் வேலையைக் காத்துக்கொள்ளார்கள். பிறரைப் பற்றி மட்டும் பிரமாதமாய் அவதூறு பேச முற்பட்டுக் கொள்வார்கள். உழைக்கிறவனைப்பார்த்து அப்படி உழைத்தாலல்லவா பணம் கிடைக்கும் என்று ஒரு பழிப்பாய்ப் பேசுவார்கள். ஏன் இவர்கள் உழைக்கிறதுதானே? உழைத்து அப்படிப் பணம் தேடுகிறதுதானே! அதற்கான தருணங்கள் எவ்வளவோ கிடைத்தும் அவற்றை யெல்லாம் நழுவவிட்டுக்கொண்டு ஊராரைமட்டும் தூற்றத் தயாராய் விடுவார்கள். சில அற்பர்களுக்கு அதிர்ஷ்ட வசத்தால் சம்பத்தும் செல்வமும் உண்டாகி அவர்கள் பெரிய மனிதர்களாய்விடினும் ஆதிநாளையிலிருந்த அல்ப புத்தியையும் சுயநலத்தையும் இறுதிநாள் வரைக்கும் அவர்கள் கைவிடுவதில்லை. எந்தக் காலத்திலும் அற்பர்களுக்கு அற்ப ஸ்வபாவம் தான். அவர்கள் அதிலிருந்தும் மாறுவதுமில்லை. திருந்துவதுமில்லை. அல்பர்கள் அவர்கள் எவ்வளவு பணம் சம்பத்துள்ளவர்களானாலும், இல்லாதவர்களானாலும், அவர்களைத் தூரத்தில் வைத்து நாம் விலகி நிற்பதே சரி. நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டுக்குள் வைத்துக்கொண்டாலும், மலம் தின்னுவதான தனது இயற்கையில் அமைந்த அல்ப புத்தியை அது என்றைக்கும் விடாது. எப்படியும் அது வெளியே ஓடிப்போய்விடும். அவ்விதமே அல்பலர்களின் சங்கதியுமொன்று இந்தப் பழமொழி எடுத்து விளக்குகிறது.

104, துரும்பு நுழைய இடம் இருந்தால் யானையைக் கட்டுவான்.

இது அல்பர்களின் ஸ்வபாவம். தனக்கு முன்பு உதவி செய்தவர்களாயிற்றே என்று எண்ணார்கள். அவர்களுக்கே சுண்ணாம்பு தடவப் பார்ப்பார்கள். அவர்களின் அற்ப குணம் என்றைக்கும் விஷமித்து வளர்ந்து கொண்டே இருக்கும். வீடில்லையே என்று தங்குவதற்குக் கொஞ்சம் இடம் தந்தால் அந்த வீட்டையே தங்கள் ஸ்வாதீனப்படுத்திக் கொள்வார்கள். எவ்வளவோ தர்ம சொத்துக்கள் இப்படிப் பிறர்வசமாகிவிட் டிருக்கின்றன. இத்தனை வருஷம் வீட்டையும் நிலத்தையும் அனுபவித்திருக்கிறேன் என்று அநுபோக பாத்யதை காட்டப் புறப்பட்டுக் கொள்வார்கள். எவரும் திக்கு இன்றி வந்தானே யென்று தன் பந்துவை ஒருவன் தன் வீட்டில் இருக்க விட்டால், பணக்காரியான அவனது விதவைத் தங்கையை மெதுவாக நேசித்துக்கொண்டு, அவளுக்கும் அவனுக்கும் பிரிவினை கலகம் நேரச்செய்து, அந்த சண்டையால் பிரிந்துபோவதான பாவனை காண்பித்துத் தங்கையை வேறு

அகங்காரத்தை நாசப்படுத்துவது முக்திக்குப் படித்துறைபோலாகும் தேகத்தை நாம் என்று பிரமிப்பது துக்கத்துக்கு மூலம்.

வீடும் குடித்தனமுமாக்கி, இவன் அந்தத் தங்கையின் வீட்டுக்குத் தலைமை அதிகாரியாய் ஏற்பட்டுக் கொள்கிறான். தனக்கு ஆதியில் இருக்க இடம் தந்தவனை அடியோடு ஸர்வ நாசமாக்கப் பார்க்கிறான். தன் ஸகோதர ஸகோதரியின் குமாரர்கள் என்று ஆசைவைத்துச் சேர்த்துக்கொள்ளப்போக, அவர்கள் அந்த இடத்தில் ஊன்றிக்கொண்டு தங்களைச் சேர்த்து வைத்தவன் மீதே "சவாரி" செய்யப் பார்க்கிறார்கள். சிறிது இடங் கொடுக்கப்போன இடத்தில் இவ்வளவு அவஸ்தைகளையும்பட நேர்ந்துவிடுவதை நினைக்கையில், அற்பர்களிடத்தில் நாம் எவ்வளவு எச்சரிக்கையாயும், ஒதுங்கியும், தூரவிலகியும், மனஸ்தாபத்திற்கு இடம் தராமலும் நடந்துகொள்ள வேண்டுமோ அவ் விஷயத்தை, அந்த அல்பர்களின் குணப்போக்கை விளக்கி இந்தப் பழமொழி ஜாக்கிரதைப்படுத்துவதா யிருக்கிறது.

105. அணிப்பிள்ளைக்கு நொங்கரிதோ? ஆண்டிச்சி பிள்ளைக்கு சோறு அரிதோ?

அல்ப குணத்திலேயே பழகிப்போனவர்களுக்குப் பெரிய மனிதத் தன்மை எப்படி வரும். ஆண்டிச்சி பிள்ளைக்குப் பிச்சைச் சோற்றிலுள்ள கேவலம் எப்படித் தெரியும்? அணிப்பிள்ளைக்கு நொங்கு சுலபமாய்க் கிடைப்பது போல, ஆண்டிச்சி பிள்ளைக்கும் சோறு இலகுவில் கிடைக்கும். அற்பர்கள் அற்பத்திலேயே மகிழ்ந்து போவார்கள். எவ்வளவு பணம் சேர்த்திருந்தாலும் தங்களின் அல்ப புத்தியையே காண்பித்துக் கொண்டு தாழ்வான உணவுகளிலேயே தங்களின் காலத்தைத் தள்ளுவோர் பலர் உண்டு. எவ்வளவோ பக்ஷணவகைகளெல்லாம் கடையில் விற்க, அவற்றை ஒன்றையும் வாங்காமல் கைநிறையக்கிடைக்கிற நிலக்கடலையை மடியில் நிரப்பிக்கொண்டு தாங்கள் போகிற வீட்டிலுள்ள குழந்தைகளுக்குக் கொடுப்பார்கள். அந்த வீட்டிலுள்ளவர்கள் இவர்களது அற்பத்தை நினைத்து சிரித்துக்கொண்டு மௌனமாய் விடுவார்கள். அற்பத்தனத்தில் பழகிப்போனவர்களுக்கு; எவ்வளவு நல்ல வாழ்வு வந்தாலும் அந்த அற்பத்திலேயே உழல்வதன்றி, அதில் இருக்கிற கேவலம் அவர்களுக்குப் புலப்படாது. அவர்களின் இழிந்த தன்மைக்கேற்ப ஈசனும் அவர்களுக்கு அல்ப வஸ்துக்களிலேயே திருப்தி படும்படி அதைத்தான் வாரிவாரிக் கொடுக்கிறார். அல்பனுக்கு எது கிடைக்கும்? அல்பம் தான் கிடைக்கும். நாய்க்கு எது கிடைக்கும்? எச்சில் இலைதான் கிடைக்கும். இவ்விதமே திருட்டுப் புத்தியுள்ளவர்களுக்கும் தாங்கள் திருடியது தான் கிடைக்கும். ஒருவரிடம் கேட்டுப் பெறுவோம் என்கிற பெரிய புத்தி எது?

106. பொன் செருப்பானாலும் காலுக்குத்தான் போடவேண்டும்.

எவ்வளவுதான் சரிகை முதலியவற்றைவைத்து அதிக வேலைப்பாட்டுடன் தயாரித்த ஜோடாக இருந்தபோதிலும், அதைத் தலையில் வைத்துக் கொள்ளப்போவதில்லை, காலில் போடத்தான் அது உபயோகமாகும். எத்தனை விலையேறியதா யிருப்பினும், செருப்பு என்று எப்போது ஏற்பட்டதோ அப்போது காலில்தான் அணியவேண்டும். அதுபோல, பெரிய இடம் என்று தாம் நினைத்துச் சேர்ந்திருந்த இடத்தில் எப்பொழுது அவர்களின் அல்பத்தன்மை விளங்கிவிடுகிறதோ அதுமுதற்கொண்டு அவர்களை அல்பத்

துக்கே ஒதுக்கிவிட்டு நாம் தூரப்போய்விடுவதே நமக்கு மரியாதை. பெரிய குணமுள்ளவர்களென்றும், உண்மையான நேசர்களென்றும், அறிய சகோதரத் துணை என்றும் நம்பிக்கொண்டு சிலருடன் பழகுகிறோம். எதுவும் பழகிய பிறகே தெரிவதால் அவர்களின் அல்ப குணமும் நாளடைவில் வெளியாகி, பிறகு நம்மாலேயே சகிக்கமுடியாமலும் போகக்கூடிய அவ்வளவு கேவலத்தன்மையை அவர்கள் காண்பித்து விடுகிறார்கள். அதற்குப்பின் அவர்களை நாம் நடத்துவதெப்படி? விலையுயர்ந்த செருப்பாயிருப்பினும் எப்படிக் காலிலேயே அணிகிறோமோ, அவ்விதமே நாம் முன்பு அறியாமல் மதிப்புடன் கொண்டாடியவர்களையும் இப்பொழுது அவர்களது அல்ப குணம் தெரிந்தால் அவர்களை நம் காலுக்குக் கீழ்போட்டு ஒதுக்கிக் குப்பையில் தள்ளவேண்டியதே. செருப்பை வீட்டிற்குள் வைப்பதில்லை. அதை வெளியில்தான் வைக்கிறோம். அவ்விதமே அவர்களையும் வெளியில் தூரவைத்துவிட்டே நாம் ஒதுங்கி நடந்துகொண்டுவிடவேண்டும்.

107. கனவிலும் காக்கைக்கு மலம் தின்பதே நினைவு.

அற்ப குணமுள்ளவர்களின் தன்மையை இந்தப் பழமொழி வெகு தெளிவாகவும் நன்றாகவும் விளக்கிக்காட்டுகிறது. அற்ப குணமுள்ளவர்கள் தங்கள் கனவிலும்கூட அற்பத்தன்மைகளையே நினைப்போராய், அத்தனை கேடு கெட்டவர்களாய் இருப்பார்கள். எப்போதும் அவர்களுக்கு அற்ப புத்தியே இருந்துகொண்டிருக்கும். எவ்வளவுதான் அவர்களை நாம் சேர்த்து வைத்தாலும் அவர்கள் தங்களின் அல்ப தன்மையைக் கடைசியில் காண்பித்துவிட்டு விலகித் தான் போவார்கள். அல்பர்கள் நடத்தும் விவாகம் முதலிய விசேஷங்களிலே இந்த அல்ப ஸ்வபாவம் பட்டப்பகலாய்த் தெரியவரும். இன்னொருவன் செலவிலேயே தனது செலவுகளையும் செய்துகொண்டுவிடப் பார்க்கும் அல்ப தன்மையுள்ளவன் தன்னை நம்பியவனைத் தலை கவிழ்க்கப் பார்ப்பானேயன்றி அவனுக்கு நல்லது தேடமாட்டான். ஏனெனில் அல்ப குணம் எந்தப் பெரிய நிலையிலும் அவனை விட்டுப்போகாது. அல்பன் என்னதான் வெளிக்குக் கம்பீரமான வேடம் புனைந்தாலும் அவனது அல்பத் தன்மை விரைவில் வெளிப்பட்டுவிடும். இவ்விதம் திருத்தமடையாமல் ஊன்றிவிட்ட அல்ப குணத்தையே கனவிலும் காக்கை மலம் தின்பதே நினைவு என்று இந்தப் பழமொழி அழகாகவும் அழுத்தமாகவும் எடுத்துக்காட்டுகிறது. இந்தக் காக்கை விஷயத்தையே தேசகவி ஸி. சுப்பிரமண்ய பாரதியார் கௌரவமான கருத்தில் வைத்து,

> " எத்தித் திருடுமந்தக் காக்காய்—அதற்
> கிரக்கப் படவேணும் பாப்பா "

என்று வெகு அழகாகக் கூறியுள்ளார். காக்கைக்குத் திருட்டுப்புத்தி இயற்கை. திடீரென்று வந்து கையிலுள்ளதைக் கொத்திக்கொண்டு போய்விடும். எவருமில்லாத சமயத்தில் மறைந்து வந்து தின்று விடும். காக்கைக்குள்ள இந்தத் திருட்டுத்தன்மைக்கு நாம் இரக்கப்பட்டுப் பரிதபிக்க வேண்டுமேயன்றி அதைக் கொடுமை செய்யலாகாது என்று பாரதியார் உயர்தரமான சிந்தையுடன் எடுத்துக்காட்டுகிறார். அவ்விதமே அல்பபுத்தி யுள்ளவர்களிடம் நாம் வருத்தங்கொள்ளாமல், அவர்களின் அற்ப தன்மைக்காக இரக்கப்படக்கடவோம். அப்பொழுது நமது சுபாவமும் மேலான தன்மையைப் பெறும்.

(தொடரும்.



பெரியாரின் மொழிகள்



(189-ம் பக்கத் தொடர்ச்சி.)

277. Every action down to the drawing of a line or utterance of a syllable, is capable of a peculiar dignity in the manner of it. RUSKIN.

ஒரு கோடு இழுத்தல் அல்லது ஒரு பதத்தை உச்சரித்தல் இது போன்ற அல்பமான காரியம் வரையில் எந்த காரியத்துக்கும் அதைச் செய்யும் வகையில் ஒருவித மேன்மையான கௌரவம் இருக்கிறது. ரஸ்கின்

278. Be a man!
Bear thine own burden never think to thrust.
Thy fate upon another!
ROBERT BROWNING.

ஆண்மைத்தனத்தோடு இரு உன்னுடைய பாரத்தை நீயே சுமந்திடுக. உன் விதியை மற்றவர் பேரில் சுமத்த ஒருபோதும் நினையாதே. ராபர்ட் ப்ரௌனிங்

279. So to living or dead let the solemn bell call;
Sleeping or waking, time passes with all. WALTER SMITH.

பய பக்தியை உண்டுபண்ணக் கூடிய மணியானது உயிருடனிருப்பவர்களுக்கும் இறந்தவர்களுக்கும் பொதுவாக அடிக்கட்டும். தூங்கிக் கொண்டிருந்தாலும், விழித்துக் கொண்டிருந்தாலும் காலம் என்பது எல்லாருக்கும் நடந்துகொண்டே இருக்கிறது. வால்டர்ஸ்மீத்.

280. Beauty without grace is the hook without the bait. Beauty without expression, tires
EMERSON.

அருள் அல்லது தயாள குணம் இல்லாத அழகு, தீனி இல்லாத தூண்டிமுள்ளை ஒக்கும். வெளிப்படையாய்ப் பிரகாசித்தல் அல்லாத அழகு சீக்கிரம் சலிப்பை உண்டுபண்ணுகிறது. எமர்சன்.

281. It is pleasant to turn from contemplating the strife and turmoil of political existence, to the peaceful repose of private life. DICKENS.

கலக்கம் அல்லது குழப்பத்தோடு கூடின ராஜாங்க வாழ்விலிருந்து அமைதியோடு கூடின தனிமையான வாழ்விற்கு மனதைத் திருப்புவது சந்தோஷகரமானது. டிக்கன்ஸ்.

282. Whatever hath been written shall remain,
Nor be erased nor written o'er again.
The unwritten only still belongs to thee.
Take heed and ponder well what that shall be.
LONGFELLOW.

எவை எவை விதிக்கப்பட்டுள்ளனவோ அவை சாசுவதமானது. அவைகளை அழிக்கவும் மாற்றி எழுத

ஒவ்வொரு நாகரீகமும் ஒவ்வொருவிதமான மனுஷ்ய அநுபவத்தின் நிர்மாணம்.

வும் முடியாது. இதுவரையிலும் விதிக்கப்படாமலிருப்பதுதான் உனக்குச் சொந்தம். ஆகையால் அப்படி விதிக்கப்படாம லிருப்பவைகள் எவைகளென்று ஜாக்கிரதையாய் கவனித்து யோசித்துப் பார்.

லாங்பெல்லோ.

283. Every right action and true thought sets the seal of its beauty on person and face every wrong action and foul thought its seal of distortion. RUSKIN.

ஒவ்வொரு நல்ல காரியமும் உண்மையான எண்ணமும் அதனுடைய அழகையும், ஒவ்வொருகெட்ட காரியமும் கெட்ட எண்ணமும் அதனுடைய அவலக்ஷணத்தையும், ஒரு மனிதனுடைய தேகத்திலும் முகத்திலும் அடையாளமிடுகிறது. ரஸ்கின்.

284. Happy the man, and happy he alone.

He who can call to-day his own. DRYDEN.

இன்றைய தினத்தை எவனொருவன் தன்னுடையது என்று சொல்லக்கூடுமோ அவன் தான் சந்தோஷமுள்ளவன். ட்ரைடன்.

285. Speaking truth is like writing fair, and only comes by practice ; it is less a matter of will than of habit. RUSKIN.

உண்மை பேசுவதென்பது அழகாக எழுதுவதை ஒத்தது. அது பழக்கத்தில்தான் வரும். அது ஒருவனுடைய பழக்கத்தைப் பொருத்தது. இஷ்டத்தைப் பொருத்ததல்ல.

ரஸ்கின்.

286. Faith and unfaith can ne'er be equal power,

Unfaith in aught is want of faith in all. TENNYSON.

நம்பிக்கை, அவநம்பிக்கை இரண்டும் சமமான சக்தியல்ல. எந்த ஒரு விஷயத்தில் அவநம்பிக்கை யிருந்தாலும் (அதைத் தழுவிய) எல்லா விஷயத்திலும் நம்பிக்கை இல்லை என்பதாகும். டெனிஸன்.

287. A strong and wise man has his strength given to him; not that he may crush the weak, but that he may support and guide them. RUSKIN.

பலமும் புத்தியுமுள்ள ஒருவனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பலமானது பலஹீனமுள்ளவர்களை நசுக்குவதற்கல்ல. அவர்களைக் காப்பாற்றவும் நல்ல வழியில் நடத்தவுமே. ரஸ்கின்.

288. Education, in its deapest sense, is not the epualizer, but the discerner of men.

RUSKIN.

ஆழ்ந்து யோசிக்குமிடத்துக் கல்வியானது மனிதர்களை சமமாக்குவதல்ல. மனிதர்களுக்குள்ள வேறுபாட்டை வெளிப்படுத்துவது.

ரஸ்கின்.

289. Be a philosopher ; but amidst all your philosophy, be still a man. HUME.

ஒரு தத்வஞானியாயிரு, ஆனல் உன்னுடைய தத்வஞானத்தினிடையே எப்பொழுதும்போல் ஒரு மனிதனய் இரு. ஹியூம்.

290. In all lands and thro' all human story. The path of duty be the way to glory.

TENNYSON.

எல்லாத் தேசங்களிலும் எல்லாச் சரித்திரத்திலும் சொல்லியிருப்பது

காபி அருந்துவோரின் வாயில் ரத்த ஜலம் ஊறிப் பசி அடங்கி ஜீரண சக்தி குறையும். காபி உட்கொள்வோரின் கண்கள் மழுங்கிப்போகும்.

தர்மம் என்கிற மார்க்கமே. அதுவே கீர்த்திக்கு வழி. டென்னிஸன்.

291. I pray you very solemnly to put tnat idea of knowing all things in Heaven and Earth out of your hearts and heads.

RUSKIN.

சுவர்க்கத்திலும், பூமியிலும் உள்ள எல்லா வஸ்துக்களையும் தெரிந்து கொண்டிருக்கிறாய் என்கிற எண்ணத்தை உன்னுடைய ஹிருதயத்திலிருந்தும் மூளையிலிருந்தும் விலக்கி வைக்கும்படியாய் உன்னை மனஸ்பூர்வமாய் நான் வேண்டுகிறேன்.

ரஸ்கின்.

292. Childhood often holds a truth with its feeble fingers, which the grasp of manhood cannot retain,—which it is the pride of utmost age to reoover.

RUSKIN.

இளங்குழந்தைப் பருவமானது தன் சக்தியற்ற விரல்களால் உண்மையை உறுதியாய்ப் பிடிக்கிறது. ஆனால் அதை (உண்மையை) ஒரு பலமுள்ள மனிதன் வைத்துக்கொள்ள முடியவில்லை. ஆகையால் அதைத் திரும்பியடைவதுதான் ஒரு வயது சென்ற மனிதனுக்குக் கௌரவம்.

ரஸ்கின்.

P. E. பாஷியம் நாயுடு.

அமிர்த குணபோதினி வாழ்த்து.

அ	மிர்த குணபோதினி ஆநந்தமான	அ
மி	ர்தம் போன்ற சிறந்த குணங்களை	மி
ர்	துவும் நயமுமாய் நேருக்கு நே	ர்
த	மிழ் மொழியினில் எடுத்தோதித்	த
கு	ந்த புத்திமதிகளை அநுப்வமாய் நன்	கு
ண	ர்த்த வல்லதாம். முந்திய ஆனந்த கு	ண
போ	தினியே அமிர்த குணபோதினியாய்	போ
தி	க்கவந்துளது. என்னே அதனனுபவத்	தி
னி	னிமை! வாழ்க அமிர்த குணபோதி	னி

நா. சுப்பிரமணிய ஐயர்.



1. சில விநோத எதிரொலிகள்:— இத்தாலி தேசத்தில் ரோம் பட்டணத்தில் கம்பானு என்னும் மைதானத்தில் ஸல்லா என்பவருடைய மனைவியின் ஞாபகச் சின்னத்தருகில் யாராவது கால் நிமிஷம் ஒரு பாட்டு பாடினால் அம்முழு பாட்டும் எதிரொலியாய்க் கேட்கிறதாம். பைஸா நகரத்தில் உலகமெங்கும் கியாதி பெற்ற சாய்ந்த கோபுரத்தில் யாராவது சில ஸ்வரங்களைப் பாடினால், அல்லது வாத்தியத்தில் வாசித்தால் உடனே கிராமபோன் வாத்தியத்தில் கேட்கும் மாதிரியாக எதிரொலி கேட்கிறதாம். கில்லார்னி மாகாணத்திலுள்ள மலைகளில் நின்று கொண்டு தாரையை ஊதினால் அச்சப்தம் அருகிலிருக்கும் குன்றுகளில் தாக்கி நூறு தரம் எதிரொலி உண்டாகிறதாம். மெனெய் என்னும் இடத்தில் போட்டிருக்கிற தொங்கல் பாலத்தில் ஒரு மூலையில் ஒரு சம்மட்டியால் தட்டினால் பாலத்தின் மேலே போட்டிருக்கும் குறுக்குத் தண்டவாளம் ஒவ்வொன்றிலும் வரிசையாக அந்த ஓசை கேட்டுக் கடைசியாக அறுநூறு அடிக்கப்புறம் இருக்கும் அக்கரையிலும் அச்சப்தம் தொனிக்கிறதாம். திருவையாறு ஸ்வாமி கோவில் பிராகாரம் வடமேற்கு மூலையில் உரக்க சப்தம் போட்டால் ஏழுதரம் எதிரொலியுண்டாகிறதாம்.

2. சில ஜந்துக்களின் நூதன இயற்கை:— ஆமைகளுக்கு பல் கிடையாது. அசை போடுகிற மிருகங்கள் எல்லாம் காலில் கவர் கொம்புள்ளதாய் இருக்கும். குதிரைகளுக்கு நெற்றி புருவம் கிடையாது. தவளை வாயைத் திறந்து மூச்சு விடாது. அப்படியே திறந்து சற்று நேரம் வைத்திருந்தால் செத்துவிடும். பன்றிகளுக்கு நீந்தத் தெரியாது. மான்களுக்கு மூக்கைத்தவிர மூச்சை ஏற்று விடுவதற்கு வேறு துவாரங்கள் இருக்கின்றன. முயல்களுக்கு கண் இமை கிடையாது. ஆகையால் அவைகள் கண்ணை மூடுவதில்லை. பச்சையோந்தி அடிக்கடி தானிருக்கும் இடத்திற்குத் தகுந்தபடி தன் நிறத்தை மாற்றிக்கொள்ள வல்லமையுடையது.

3. பிரான்ஸ் தேசத்தில் கொடிமுந்திரி சாகுபடி செய்வதில் எழுபது லக்ஷம் ஜனங்கள் உழைக்கிறார்களாம்.

4. இத்தாலி தேசத்தில் அர்ச். பால் என்னும் மஹானின் பெயருடன் வழங்கும் கோவிலுள்ள கண்டாமணிதான் உலகத்திலுள்ள எல்லா மணிகளிலும், பெரியது. 186000 பவுண்டு நிறையுள்ளதாம். கி. பி. 1450 - ம் வருஷம் அதை செய்ய ஆரம்பித்து 1880-ம் வருஷம் தான் வேலை முடிந்ததாம். மொத்தம் நூற்று நாற்பது லக்ஷம் பவுன் செலவாயிற்றாம்.

5. சில விநோத ஆகாரங்கள் :— அரேபியா தேசத்து ஜனங்களுக்குக் குதிரையின் மாமிஸம் மிகவும் பிரிய

விருந்தினர் ஊருக்குப் புறப்படுகையில் குழந்தைகளுக்கு ரூபாய்கள் கொடுத்துச் செல்பவரானால், அத்தகையோருக்கு எவ்வளவு விருந்தும் செய்யலாமாம். ஏனெனில் செய்தது அவ்வளவும் திரும்பிவந்துவிடுமாம்.

மான ஆகாரம். எகிப்து தேசத்தில் ஒட்டகத்தினுடைய சில அவயவங்கள் முக்கிய உணவாய் உபயோகம். கொச்சின் சைஞ என்னும் தேசத்தவர்களுக்கு அழுகிப்போன கோழி முட்டையிடம் அதிகப் பிரியம். இந்தியாவில் அநேக பாகங்களில் யானையின் மாமிஸம் மிகவும் ருசிகரமாய்நினைக்கப்படுகிறது. மாக்டெலஞ நதிக்கரை யோரங்களில் மழையினுல் நனைந்த பூமியின் மண்ணை ஜனங்கள் ஆகாரமாய் உபயோகிக்கிறுர்கள். தென் அமெரிக்கா கண்டத்தில் பாம்பு பல்லி இவைகளை ஆகாரமாய் உபயோகிக்கிறுர்கள். க்ரிமியா, க்ரீஸ், இந்தியா, மடகாஸ்கர் ஸிரியா, அரேபியா முதலிய தேசங்களிலும், ஆபிரிகா கண்டத்தில் ஹாடண்டாட்டு ஜாதியாராலும் வெட்டுக்கிளி பலவித ஆகாரங்களாக உபயோகப்பட்டு வருகிறது. நியூகலிடோனியா தேசத்து ஸ்வஜனங்கள் அங்குல நீளத்திற்கு குறையாமலுள்ள சிலந்திகளை உட்கொள்ளுகிறுர்கள். நமது தேசத்துத் தாழ்ந்த வகுப்பினரிற் பலர் அணில், நாய், பூனை, எலி, கழுகு முதலியவைகளை ஆகாரம் செய்கிறுர்கள்.

6. அஸ்ஸீரியா தேசத்தில் சென்றபிரளயத்திற்குப் பிறகு மூன்ருவது சால்டி அரசர் ஒருவர் கட்டின கோவில் ஒன்றை பூமிக்குள் இருந்து வெட்டி எடுக்கையில் மனிதன் கையால் எழுதப்பட்ட ஒரு பத்திரம் கண்டெடுக்கப்பட்டது. கி. மு. 4500-வருஷங்களுக்கு முன் மனிதனுல் எழுதப்பட்டதாம். அதற்கு முன் மனிதனுல் எழுதப்பட்ட ஒரு சாஸனமும் இவ்வுலகத்தில் கிடையாதாம்.

7. இங்கிலாந்து தேசத்தில் முப்பத்தெண்ணுயிரம் ஆங்கில ஸ்திரீகள் ரணவைத்தியத்தில் உழைக்கிறுர்களாம். ஐயாயிரத்தைந்நூறு ஸ்திரீகள் புகைப்படம் எடுக்கும் தொழிலில் இருக்கிறுர்களாம். லக்ஷத்து இருபத்தையாயிரம் ஸ்திரீகள் உபாத்தினிகளாய் இருக்கிறுர்களாம். இரண்டாயிரம் பெண்கள் சித்திர வேலை செய்கிறுர்களாம். எண்ணூறு மாதர்கள் கொல்லம்பட்டறை வைத்து இருக்கிறுர்களாம். வர்த்தகசாலை கம்பெனி முதலியவைகளில் வேலை செய்வோர் பெரும்பான்மையோர் ஸ்திரீகளேயாம். பதிஞயிரம் ஸ்திரீகளுக்குமேல் நூலாசிரியர் தொழிலில் இருக்கிறர்களாம். எழெட்டு ஸ்திரீகள்கூட பார்லிமெண்டு சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறுர்களாம்.

8. உலகத்திலுள்ள மொத்த ஜனத்தொகையில் சரிபாதிக்குமேல் புண்ணிய பூமிகள் என்று வழங்கும் இந்தியாவிலும் சைஞவிலும் இருக்கிறுர்களாம்.

9. இங்கிலாந்தில் மஹாராணியாருக்கு சேடிமார்கள் எட்டு பெயராம். அவர்கள் பெரிய பிரபுக்கள் வீட்டுப் பெண்களாம். இருவர் மாற்றி இருவராய் எப்பொழுதும் ராணியாரைச் சூழ்ந்து இருக்கவேண்டுமாம். மஹாராணியார் இஷ்டப்படும்பொழுது உறக்கப் பத்திரிகைகள் வாசிக்கவோ, அல்லது வாத்தியங்களை உபயோகப்படுத்திக்கொண்டு பாடவோ, அல்லது மஹாராணியார் பவனி செல்லும் பொழுது கூடச் செல்லவோ இந்த வேலைகள்

ஏழை ஒரு பூட்டைப் போக்கடித்துவிட்டால் பணக்கார வீட்டினர் சிடுசிடுப்பார். ஒரு பணக்கார விருந்தினனே அப்படிப் போக்கடித்து விட்டால் அப்பொழுது பணக்கார வீட்டினர் அது போனுல் போகட்டும் நமது பூட்டு தான் பரவாயில்லை என்பார்கள்.

எல்லாம் செய்யவேண்டுமாம். ஒவ்வொரு பெருமாட்டிக்கும் மூந்நூறு பவுன் சம்பளமாம். அவர்கள் எல்லாரும் கல்யாணமாகாத ஸ்திரீகளாய் இருக்கவேண்டுமாம். அவர்கள் சேடி வேலையிலிருக்கும் பொழுது அவர்களுக்குக் கல்யாணம் நேரிட்டால் கல்யாணம் செய்துகொள்ளும் ஒவ்வொருவருக்கும் ஆயிரம் பவுன் சீராகவும், ராணியாரின் படத்தில் வைரங்கள் இழைத்த ஒரு பதக்கத்தை வெகுமதியாகவும் அடைகிறார்களாம்.

10. காஷ்மீரம் தேசத்து மஹாராஜா தன் தேசத்திலுள்ள பசுக்களை அயல் நாடுகளுக்கும் மாகாணங்களுக்கும் ஏற்றுமதி விற்பனை செய்யக்கூடாது என்று கண்டிப்பான சட்டம் செய்திருக்கிறார்.

11 லண்டன் நகரத்தில் 'ஸ்காட்லண்டுயார்ட்' என்று வழங்கும் போலீஸ் இலாகா தலைமைத் துப்பறியும் ஆபீஸில் ஐந்தரை லக்ஷம் குற்றவாளிகளின் கையடையாளங்கள் இருக்கின்றனவாம்.

12. ஒரு கோடியே பத்து லக்ஷம் வருஷங்களுக்குமுன் இவ்வுலகில் ஜீவித்திருந்த டினோஸோர் (Dinosour) என்னும் காட்டுப் பக்ஷியின் முட்டையொன்று அமெரிக்கா ஐக்கிய மாகாணப் பொருட்காட்சிச் சாலையில் இருக்கிறதாம். அதன் விலை மதிப்பு பதினாயிரம் பவுனாம்.

13. ஆகாயத்தில் விமானங்கள் பறக்கிறதினால் கனத்த மேகங்களெல்லாம் சின்னாபின்னமாய் சிதறிவிடுவதால் எந்தப் பிரதேசங்களில் மழையை எதிர்பார்க்கிறார்களோ அவ்விடங்களில் ஆகாய விமான சஞ்சாரத்தை நிறுத்தி விடுவார்களாம்.

14. இங்கிலாந்தில் ஆர்ஸ்டர்ஷைர் என்னும் மாகாணத்தில் ட்ராய்ட்விச் என்னும் ஊரில் ஒரு ஏரி யிருக்கிறதாம். உலகத்தில் உள்ள எல்லா ஸமுத்திரங்கள் ஏரிகள் குட்டைகள் இவைகளைவிட இந்த ஏரியின் ஜலத்தில் உப்பு அதிகமாம். இதனால் இந்த ஏரியில் மிதக்கவோ, உட்காரவோ அல்லது படுத்துக்கொள்ளவோ முடியுமே யொழிய மனிதனால் உள்ளுக்குள் முழுகவே முடியாதாம். இந்த ஜலத்தில் ஒரு தரம் ஸ்நானம் செய்தால் உடனே வேறு சுத்த ஜலத்தில் உடம்பை நன்றாய்த் தேய்த்துக்கொள்ளா விட்டால் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி ஸ்வாமி குளத்தின் பாசி ஒட்டிக்கொள்ளுகிற மாதிரி தேகமெல்லாம் ஒரே உப்புச் சட்டை போட்டதுபோல் ஆகிவிடுமாம். ஒரு தலைவலி, பித்தசோகை, கால்கை பிடிப்பு, வாதங்கள் முதலிய வியாதிகள் இந்த ஜலஸ்பரிசத்தினால் போய் விடுவதால், இந்த ஏரியில் ஸ்நானம் செய்ய ஜனப்போக்குவரத்து ஜாஸ்தியாகிக்கொண்டு வருகிறதாம்.

15. மத்திய ஆபிரிகா கண்டத்தில் மேல்லுவலாபா என்னும் பிரதேசத்தில் ஒரு சுதேச அரசன் இருக்கிறானும். அந்த தேசத்தில் அந்த ராஜனை தரையின்மேல் நடக்க விடுவதில்லையாம். உட்காரும்பொழுதும் உயிருள்ள ஆஸனத்தில்தான் உட்காருவானும். ஒரு பலிஷ்ட அடிமை

செல்லாக் காசும் மண்ணில் எறிந்துவிடப்படுவதில்லை. ஒருவரை ஏமாற்றி இன்னொருவர் தா, ஏமாந்தவர் மற்றொருவரை ஏமாற்றி வேறிடம் தா, இவ்விதம் எவர்களிடமேனும் கைமாறி இருந்துதான் அது வாழ்கிறது.

யின்மேல் உட்கார்ந்து மற்றொரு அடிமையின் மேல் சாய்ந்துகொள்வாளும். இரவில் சயனிக்கும்பொழுது பாய்மாதிரி பின்னிக்கொண்டு படுத்திருக்கும் ஸ்திரீ (1)அடிமைகளின் சரீரங்களை மெத்தையாக உபயோகப்படுத்தி அதில் சயனித்துக்கொள்வாளும்!

மனதில் தோன்றும் எண்ணங்களைக் கொண்டுதான் வியாசம் எழுதுகை, தொழில் புரிகை, நேசம், காதல்—தர்மம் — பாவம்— கொலை—இரங்கல் — ஏங்கல் —துதித்தல்—பாராட்டல்— அவர் உருவாதல்—இன்னும் எல்லா இயக்கமுமாம். உதிக்கும் எண்ணங்களின் குணங்களுக்குத் தக்கபடி செயலும் நிகழ்ச்சியுமாம். இவ்வித நினைவின் உதிப்பு அவரவர் மனோபாவத்திற்குத் தக்கவாறாக இருக்கும்.

16. மனிதனால் நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்களுக்குள் மிகவும் பெரியது எகிப்து தேசத்திலுள்ள கித்ஸே பிரமிட் (Pyramid of Gizeb) என்னும் கோரிதானும். அது ஐயாயிரம் வருஷங்களுக்கு முன் கட்டப்பட்டு இன்னும் அப்படியேயிருக்கிறது. அந்த கோரியின் நிலவிஸ்தீரணம் நாலு லக்ஷத்து எண்பதினாயிரம் சதுர அடியாம். பூமி மட்டத்திலிருந்து நானூற்று எண்பதடி உயரமாம். முழுவதும் செங்கல்லால் கட்டப்பட்டு அதற்குள் கள்ள அறைகளும் வழிகளும் நிறைய இருக்கின்றனவாம். இரண்டு லக்ஷம் ஜனங்கள் இருபது வருஷம் வேலைசெய்து அந்தக் கோரியைக் கட்டி முடித்தார்களாம்.

S. A. ஸ்ரீநிவாச ஸர்மா.

நமது சந்தா நேயர்கட்கு.

உத்தம குணமுடைய இப்பத்திரிகையின் சந்தா நேயர்கள் கொஞ்சம் சிரமப்பட்டு இதற்கு வேண்டிய உதவி செய்யுமாறு வேண்டுகிறோம். அதாவது, ஒவ்வொருவரும் தம்மாலியன்ற அளவு முயற்சி செய்து ஓர் புதிய சந்தாதாரரையேனும் சேர்க்கவேண்டுமென்பதே. இவ்விக்ஞாபனத்தை ஏற்கெனவே அங்கீகரித்து உபகாரம் செய்துள்ள அன்பர்களிடம் மிகுந்த நன்றி பாராட்டுகிறோம்.

சிலருக்கு ஒரு காசு கடன் கிடைப்பதில்லை. சிலருக்கோ ஊர் முழுதும் கடன் தரத் தயார். காரணம் அவரவர்களின் நாணயத்தைப் பொறுத்துள்ளது.



பெண்ணைப் பெற்ற பாவத்திற்காகவா?

நேசன் :—ஏதப்பா ! வீட்டில் வெள்ளி டம்ளர்களும் வெள்ளிச் சொம்புகளும் பலமாயிருக்கிறதே? தூக்கமுடியாத அவ்வளவு கனமாகவும் இருக்கிறதே ? எந்த வீட்டில் கொள்ளை போட்டாய்?

சேஷன் :—கொள்ளையா? எல்லாம் பெண்வீட்டு வரிசைகள். விவாகத்துக்கு முன்பே இப்படி இத்தனை தரவேண்டுமென்று பேசியிருந்தோம்.

நேசன் :—ஏன் இப்படி அவர்களுக்கு இவ்வளவு பெருந்தொகைக்கு அபராதம் போட்டீர்கள்? அவர்கள் பெண்ணைப்பெற்ற பாவத்திற்காகவா? சிலருடைய கையில் அடிக்கடி டம்பமாய் வெள்ளிச் சொம்பை பார்த்திருக்கிறேன். அது பெண் வீட்டிலிருந்து கொள்ளையடித்ததா?

* * *

விலகுதலும், ஒட்டிக்கொள்ளுதலும் :—

வினா :—தள்ளத் தள்ள அவன் ஒட்டிக்கொண்டே வருகிறானே அது ஏன்? அவன் ஒட்டிச் சேரச் சேர இவன் தள்ளிக்கொண்டே போகிறானே அது ஏன் ?

விடை :—தள்ளுகிறவனுக்கு ஒட்டிக்கொள்பவனிடம் வேலையில்லை. அத்துடன் பட்டு பட்டுக் கசந்துபோயிருக்கும். ஒட்டிக்கொண்டு வருபவனுக்குத் தள்ளுகிறவனிடம் கொஞ்சம் கார்யம் இருக்கிறது. இதுதான் காரணம்.

* * *

சக்கரைப் பொங்கல் :—

மனைவி :—சக்கரைப் பொங்கல் சுடச்சுட இருக்கிறது. சாப்பிட வாருங்கள்.

புருஷன் :—சரிதான் போ. ஏன் சக்கரைப் பொங்கல் கொண்டுவந்தார்கள் ? அதைக் கொண்டுவந்துவிட்டு ஒரு வாரம் தங்கிப்போகவா? அந்த செலவும் வேண்டாம், இந்த சக்கரைப் பொங்கலும் வேண்டாம். போ! போ !

* * *

கணக்கைச் சரிசெய்ய:—

குமாஸ்தா :—அவருக்கு "பில்" போட்டுக் கணக்கு எழுதியதில் ரூபா 27—6—0-க்கு தான் வருகிறது. அப்படியே முடிக்கவா?

மானேஜர் :—சே! சே! அப்படிச் செய்யாதே. பாக்கிங் சார்ஜ் கூலி என்று 10-அணாவை அந்த கணக்கில் சேர்த்துவிட்டு சரியாக ரூபா 28-க்கு பில் கணக்கு போட்டு அனுப்பிவிடு. அந்த மடையன் தந்துவிடுவான்.

குடும்பத்தின் கஷ்டத்தைச் சொல்லாதே. அதன் இழிதசையைப் போக்கி மேன்மைப்படுத்துவதைப்பற்றி யோசி. ரகசியத்தில் அதைச் செய்.

வீட்டுக்காரன் கஷ்டம் :—

விருந்தாளி:—என்ன தவலையிலிருக்கிற அரிசியை எல்லாம் கீழே கொட்டி அளக்கிறீர்களே? எதற்காக?

வீட்டுக்காரன் :—போன வாரத்தில்தான் 16-ரூபா கொடுத்து 50-படி அரிசியாக ஒரு மூட்டை வாங்கினேன். அதற்குள் பாதியாய்விட்டது. ஒரு மாதத்துக்கு வருமென்று நினைத்தேன். மறுபடியும் 16-ரூபாய் அவிழ்க்க அதற்குள் எங்கே போவேன்? வயிறு எரிகிறதே!

[தன் கூட்டத்தாரால்தான் அவ்வளவு அரிசியும் செலவாயிற் றென்று உணர்ந்த விருந்தாளி வீட்டுக்காரன் கணக்கு போடுவதைக் கவனித்து மௌனமாகிறார்.]

***

இதில் என்ன கேவலமோ?

உபாத்யாயனி:—(பள்ளிக்கூடச் சிறுமியின் தந்தையைப் பார்த்து) என்ன நீங்கள் நேற்று வெகு கேவலமாக எங்களைப் பற்றிப் பேசியதாய் வேலைக்காரி சொன்னாள். இது உங்களுக்குச் சரியா?

சிறுமியின் தந்தை :—உங்களிடமே பேசியிருக்கவேண்டியது. அதை அந்த மூட வேலைக்காரியிடம் பேசியதால் அவளுக்குப் பொருள் விளங்காமல் அதைக் கேவலச் சொல்லாக எண்ணி உங்களிடம் தெரிவித்திருக்கிறாள். அவளுக் கிருக்கிற அறிவு இந்த ஜன்மத்தில் அவ்வளவுதான்.

உபாத்யாயனி :—நீங்கள் அவளிடம் சொல்லியதென்ன?

சிறுமியின் தந்தை :—பெண்களுக்குப் படிப்புக்குள்ள காலமெல்லாம் 12-வயது வரைக்குமே. அதற்குப் பிறகு கல்யாண நோட்டீஸ் புறப்பட்டு விடுகிறது. அல்லது பெண் பெரியவளாய் விடுவாளென்று வீட்டில் நிறுத்தி விடுகிறார்கள். இவர்கள் பள்ளிக்கூடம் செல்வதோ 6-வயதிற்குமேல். இடையில் உள்ள சொற்ப காலத்துக்குள் ஏதாவது கல்வி பயின்றால்தான் உண்டு. இந்த சொற்ப காலமும் உபாத்யாயனிகளின் அசிரத்தையால் கவனிக்கப்படா மல் வீணாவதென்றால், அந்தத் துயரத்தை ஆடவர்களைவிடப் பெண்களே அதிகமாக உணரக்கூடும். உபாத்யாயனி தாம் ஒரு பெண்மணியாக யிருந்தும் சிறுமிகளுக்குள்ள சொற்ப காலத்தை உணராவிடில், உணர்ந்து போதிக்கா விடில் சிறுமிகள் படிப்பில் தேறுவது எப்படி?—என்றுதான் உங்கள் வேலைக்காரியிடம் சொன்னது. இதில் என்ன கேவல வார்த்தை யிருக்கிறது? கடமை தவறியவர்களிடம் அவர்களின் கடமையை உணர்த்தினால் அது கேவலமா? நான் சொல்லியதைத் தெரிந்துக்கொள்ள முடியாமல் என்னவோ சண்டை போடுகிறேனென்று உங்களிடம் சொல்லிவிட்டாள் போலும்!

பெரிய மனுஷ்யத்தன்மை காபியருந்துவதனால்தான் உண்டாகிற தென்று நினைப்போர் பலர். விருந்தினருக்குக் காபியின்றி ஜலம் தருவது வெகு கேவலமாம்! காபி தந்தால் 'உப்புமா'வும் கூட வேணுமாம்.

நாற்பத்தெட்டு வினாக்கள்.

(158-ம் பக்கத் தொடர்ச்சி.)

24. உன் வேடிக்கை விருதா நண்பர்கள் உனக்குச் செய்த செலவு எவ்வளவு? நீ அவர்களுக்காக நாசம் செய்த குடும்ப சொத்து எவ்வளவு?

25. நீ வெளியில் சென்று கண்டு பேசும் மனிதர்களில் எவரெவர் உன் அவசரத்துக்கு உதவக் கூடியவர்கள்? அவர்களின் யோக்கிய—அயோக்கிய தாரதம்மியம் தெரிந்து வைத்திருக்கிறாயா?

26. எந்த விதமான குடும்பகலகங்களிலும், சோதனையிலும் தன் மனத் துயரத்தைப் புகவிடாமல் இருக்கப் பக்குவம் பெற்றிருக்கிறாயா? அவ்வாறு இருக்கப் பிரயத்தினப்படுவதில் உன் வெற்றியை எத்தனை தடவைகளில் கண்டிருக்கிறாய்?

27. ஒரு தினப்பொழுதில் சந்தோஷம், துயரம், கோபம்-இவற்றை எத்தனை முறை கொண்டோமென்று இரவில் சிந்தித்திருக்கின்றாயா?

28. நடக்கத் தவறியதில் மனதைச் செலுத்தி நாளெல்லாம் வருந்தி நீ வாரிக்கொண்ட லாபம் என்ன? மேல் நடக்கவேண்டியதில் உன் கருத்தை எப்போது செலுத்தப்போகிறாய்?

29. உனக்குக் கிட்டாததை நினைத்துக் கொட்டாவி விட்டு லாபமென்ன? சென்றது கருதி ஏன் சிந்தை நோக? உள்ளதைக் கொண்டு பூரித்திடாததேனோ?

30. உன் மனதுக்குப் பிடிக்காத ஒரு தொழிலையோ உத்தியோகத்தையோ விடுத்து, உன் மனம் ஏற்கும் தொழிலில் நீ இறங்குவதற்கு வசதி எப்போது கிடைக்கும்? காலம் சரியில்லையெனில், நல்ல காலம் வருவது என்றைக்கென உனக்குத் தெரியுமா?

31. நீ அயோக்கியர்களைச் சந்திக்க நேர்ந்தால் எவ்வாறு எவ்வளவு நேரம் வார்த்தையாடுவாய்? யோக்கியர்களிடம் உன் குலாவுகை எப்படி?

32. ஒழிந்த நேரங்களை எவ்வெவ்வாறு செலவிட வேண்டுமென்று உன் அநுபவத்தில் கண்டதைச் சற்றே விவரி.

33. உன் துரப்பியாசங்களுக்கு குருநாதர்களா யிருந்தவர் எவரெவர்?

34. நீ நம் நாட்டு ஆசாரத்தை ஏற்கிறாயா? பிற நாட்டு ஆசாரத்தை ஏற்கிறாயா? இரண்டில் நீ விரும்புவது எது?

35. ஏழ்மையில் நேசித்த நண்பனை உன் தற்கால உயரிய நிலையில் நீ எவ்வாறு வரவேற்பாய்? ஒட்டியா?—விலகியா?

36. எளிய சுலப புசிப்பிலுள்ள ஆரோக்கியமும் திருப்தியும் உயரிய ஆகாராதிகளில் காண முடியுமா?

37. நீ பிறருக்கு நலம் செய்தது எத்தனை தடவை? தின்மை புரிந்தது எத்தனை முறை? உன்னால் துயுருற்றோரின் தொகை எவ்வளவு?

38. உனக்கு விரோதிகள் உண்டா? எதிலிருந்து இப்பகைமையின் விளைவு? அவர்களுடன் உறவாட எண்ணமுண்டா? சாகும் வரையில் பகையையே சாதிக்க நினைவா?

பேசவும் புத்தி சொல்லவுமட்டுமே சில ஜனத்தலைவர்கள் என்போர் கிளம்புவார்கள். மற்றவர்கள் செய்து காட்டுங் காலத்தில் அவர்களுடனிருந்து கஷ்டப்பட ஒப்பார்கள். நாற்காலியை விட்டு எழுந்திருக்க அவர்களுக்கு மனமில்லை.

39. எவரது விரோதமும் பகையுமின்றிவாழ்ந்திருக்க நீமுயன்றதில் நீ பெற்ற வெற்றி எதுவரையில் ?

40. உன்னிடமுள்ள புஸ்தகங்களுக்குக் கணக்கு வைத்திருக்கிறாயா? இரவலில் தொலைந்தது எத்தனை?

41. நீ வாசித்த நூல்களில் எந்தெந்தப் பாகங்கள் இப்போது உன் நினைவில் உள்ளன? மறந்ததைத்திருப்பிப் படிக்க உனக்கு சாவகாசம் எப்போது?

42. நீ எழுதும் டைரியில் பிறர் மேல் கூறும் குறைகளுடன் நீ செய்ய நேரிட்ட பிழைகளேயும் குறிப்பிட்டு வருகிறாயா ?

43. உன் மனத்தின் ரகசியங்களை வெளியிடத்தகுந்த அந்தரங்கமானவர்களை நீ பெற்றுள்ளாயா? அன்னோர் எவரெவர்? உன் ரகசியங்களை வெளியிட்டு விட்டோரின் எண்ணிக்கை எத்தனை கோடி?

44. உன் உபநாயகிக்கு நான்கு குழந்தைகளெனில், எத்தனை இரவுகளில் நீ உன் மனைவியைத் தனியே கதறவிட்டுச் சென்றிருக்க வேண்டும்!

45. சிலர் சஞ்சலத்தையே தங்கள் மனதில் குடியிருக்க அனுமதித்திருக்கிறார்களே? அதில் நீயும் ஒருவனா?

46. நீ எவரிடத்தில் மற்றவரைவிட அதிக அன்பைப் பெறுகிறாய்?

47. பிற்காலத்துக்கு உதவ ஏதாவது பணம் சேர்த்து வைத்திருக்கிறாயா? எவ்வளவு அப்பா?

48. நீ பிரதிதினமும் கடவுளை எத்தனை முறை நினைக்கிறாய்?—மறக்கிறாய்? மாதத்தில் எத்தனை முறை கோயிலுக்குச் செல்வாய்?

T. S. குழந்தைவேல் முதலியார்.

ஒருவரது வினா ?

* * ஒரு குடும்பத்திலாவது ஒற்றுமை யென்பதைக்காணேன். ‘ஒணான் வேலிக்கிழுக்கிறது தவளை தண்ணிக்கிழுக்கிறது’ என்ற மாதிரியாய் இருக்கிறது. ஏகதேசமாய் ஸ்திரீ புருஷர் ஒத்து வாழினும், அந்தக் குடும்பங்களை வறுமை பிடித்து வாட்டுகின்றது. உருவத்தில் மனிதன்போலவும், செய்கையிலும் குணத்திலும் மிருகம்போலவு மிருக்கின்ற ஜனங்கள் தான் எங்கே பார்த்தாலும் பெருத்துவிட்டார்கள். உண்மைக்கும் பொய்க்கும் பேதமேயில்லாது போய்விட்டது. பொய் சொல்லியும், ஜாலம் செய்தும், முகமன் கூறியும், சுயநல வஞ்சகர்களுடன் நேசித்தும் பிழைக்க என்றால் முடியவில்லை. மனிதனாய்ப் பிறந்துவிட்டு “ஆடுமாடுக”ளோடு வாழப் பிரியமில்லை. பறக்கவும் இறக்கையில்லை. பறந்து தேவலோகம் போனாலும், அங்கே தேவேந்திரன் செய்கிற அநீதியும் அக்கிரமமும் சகிக்கமுடியவில்லை. இவ்வுலகத்தில் இன்பமடையக்கூடிய பாதை ஏதேனும் இருக்கிறதா? அதற்கிசைந்த பாத்திரமேதேனுங் கிட்டுமா ? அதற்கு வழி எங்கேனும் உண்டா ?

(ஆநந்த கதாகல்பகம்)

சிறுமணித்திரள்

(141-ம் பக்கத் தொடர்ச்சி.)

437. துணிவாகக் காரியம் செய்வதற்குள்ள அவாதான் பால்யத்தின் அடையாளமாகும். இப்போதைய பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் அந்தத் துணிவிலிருந்து உற்பத்தியானது தான்.—ஸ்ரீ. சுபாஸ் சந்திரபோஸ்.

438. அன்னியத் துணியைக் கட்டிக்கொள்ளுவது அடிமைத்தனத்திற்கும், கதியற்ற நிலைமைக்கும் அடையாளம்.

439. 'ஈஸ்ட் இந்தியா கம்பெனி' அமைக்கப்பட்ட லக்கினம் ஆங்கிலேயர்களுக்கு பரம உத்தமமான லக்கினம். இந்தியாவில் வியாபாரம் செய்ய மூட்டையும் முடிக்சுமாக வந்த ஒரு கம்பெனி ஒரு மகத்தான ராஜ்யத்தைக் கைப்பற்றி பிரிட்டிஷ் கவர்ன்மெண்டிடம் ஒப்படைத்தது.

—சுதேசமித்திரன்.

440. பொதுவான விழிப்பின் வேகத்தைத் தடுக்க முடியாது. அந்த விழிப்பைச் சரியானவழியில் ஸ்வராஜ்யம் பெறுமாறு திருப்பவேண்டும்.

—ஸ்ரீ. சுபாஸ் சந்திரபோஸ்.

441. உங்களுடைய முன்னேற்றத்துக்காகச் செய்யும் மூயற்சியில், மற்ற ஜாதியாருடைய சரித்திரத்திலிருந்து காணக்கூடிய தவறுதல்களைக் கவனித்துக்கொண்டு, நீங்கள் அத்தகைய தவறுதல்களுக்கு இடமின்றி நடந்துகொள்ள வேண்டும்.

—கனம் டாக்டர் பி. சுப்பராயன்.

442. ஒரு வகுப்பினர் மற்றவர்களைத் தாழ்ந்சவர்களென நினைத்தால், அவ்வகுப்பினர் சம உரிமை பெற எவ்வித நியாயமுமில்லை.

—கனம் டாக்டர் பி. சுப்பராயன்.

443. எவ்வளவுக் கெவ்வளவு கூலிகள் திருப்தியடைந்திருக்கிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு எஜமானர்களின் ஊதியம் பெருகுகிறதென்பது சிக்கன முறையின் முக்கிய கோட்பாடாகும்.

444. தேசத்தை விடுதலை செய்து அதைச் சுயேச்சையாக வைத்தே தீருவதென்று ஒவ்வொரு மாணவரும் பிரதிக்ஞை செய்து அதன்படி நடக்கவேண்டும்.

ஸ்ரீ. சு. சந்திரபோஸ்.

445. "வாழவிட்டு வாழுங்கள்" என்ற பழமொழி எக்காலத்தையும் விட இக்காலத்தில் அதிகமாக நினைவிலிருக்கவேண்டும்.

446. ஜாதீய விடா முயற்சியும் போட்டியும் ஒரு தேசத்தினருக்கு ஒரு நற்குறியேயாயினும், அது ஜாதிக்குள் விரோதத்துக்கு வழி ஏற்படக் கூடாது.

—கனம் டாக்டர் பி. சுப்பராயன்.

447. துக்கப்படுகிற மனத்திலிருந்து என்ன வார்த்தை கிளம்பப் போகிறது? பல்லைக் கடித்துக் கொண்டு எதையும் சகிப்பு மனத்துடன் விழுங்கப் பார்க்கிறான்.

448. "சோழ மண்டலமே! என தருமைத்தாயே! நான் போய்வருகிறேன். என்னைப் பெற்றுவளர்த்த பூமண்டலமே! நான் எந்த நாட்டில் அலைந்து திரிந்தாலும் உன்னை ஒரு போதும் மறவேன். எவ்வாறாயினும் மறுபடியும் உன்னை வந்தடைவேன்.

(தொடரும்.)



முருகனின் சத்தியாக்கிரகம்.

“எச்சம்பட்டி” யென்பது ஒரு சிறு கிராமம். சுமார் 500 சாமானிய வீடுகளும், இரண்டடுக்குள்ள மெத்தை வீடும் உடையது. அரசு, வேம்பு முதலிய மரங்கள் அங்கங்கே அழகுபெற ஓங்கி வளர்ந்திருக்கின்றன. யானை நிற்பினும் கண்ணிற்குப் புலப்படாதபபடி குத்துக்குத்தாகச் சப்பாத்திக் கள்ளிகள் ஊரைச் சுற்றிலும் கோட்டை கட்டினாற்போல அடர்ந்து வளர்ந்துள்ளன. மழைக்காலத்திலன்றி மற்றக் காலத்தில் நீரென்பதறியாக் காட்டாறு ஒன்று அவ்வூருக்குத் தென்புறம் ஓடிக்கொண்டிருக்கிறது. விநாயகர் கோவிலும், மாரியம்மன் ஆலயமும் அவ்வூரை யலங்கரித்து நிற்கின்றன. தென்னிந்திய ரயில் பாதைக்குச் சுமார் முப்பது மைல் தூரத்தில் உள்ள அச்சிற்றூரில் மேல்நாட்டு நாகரிகம் எனனும் “திட்டு” இன்னும் புகவில்லை. அதனால் அங்குள்ள மக்கள் யாதொரு பரபரப்புமின்றி அன்பும் ஆதரவும் பெருக வாழ்ந்து வருகின்றனர். ஆடு, மாடுகள் மேய்த்தலும் பயிர் செய்தலுமே அவ்வூர் மக்களின் தொழில். அவர்களில் பெரும்பாலார் “கவுண்டர்” என்னும் ஓர் வகுப்பினர். இரண்டு மாடி வைத்துக் கட்டிய அந்த மெத்தைவீடும் ஓர் கவுண்டருடையதே. அவர்தான் அவ்வூரின் நாட்டாண்மைக்காரர். நல்லப்ப கவுண்டர் என்னும் பெயரினர். ஆனால் அவ்வூர்ச் சனங்கள் அவரைப் “பள்ளிக்கூடத்தையா” என்றுதான் அழைப்பது வழக்கம். மற்றவர்கள் யாவரும் கையெழுத்தும் போட அறியாதவர்கள். முதல் முதல் அண்ணாவி யென்னும் திண்ணைப் பள்ளிக்கூடத்து உபாத்தியாயரிடத்து முறையாகக் கல்வி கற்றவர் இவர் ஒருவர்தான். ஆகிரை, அம்பிகைமாலை, அருணகிரியந்தாதி, நீதிசாரம், விவேகசிந்தாமணி, நளச்சக்கிரவர்த்தி கதை, அரிச்சந்திர மகாராஜன் கதை, எண்சுவடி முதலியவெல்லாம் இவருக்குத் தலைகீழ்ப் பாடம். அதனால் இவருக்கு அடுத்த இரண்டு மூன்று கிராமங்களிலும் நல்ல செல்வாக்கு. இத்தகைய நல்லப்ப கவுண்டருக்கு முருகையன் என ஒரு மகன் இருந்தான். தன்னைக்காட்டிலும் தனது மகன் கல்வியறிவில் கெட்டிக்காரனாக

பி. ஏ. பரீக்ஷை தேர்ந்தவர்கள் தக்கவேலை யகப்படாமல் 30-ரூபா சம்பளத்திற்கும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். சொற்ப கல்வியுள்ளவன் நூறுநூறாகச் சம்பாதிக்கிறான். சாமர்த்தியமல்ல, அதிர்ஷ்டம் வேண்டும்.

விளங்கவேண்டுமெனக் கருதி, தன தூருக்குப் பத்து மைல் தூரத்தில் உள்ள "சேங்குளம்"—வேம்பு ஐய ரைத் தன் மகனுக்கு தனது வீட்டி லிருந்தே "இங்கிலீஷ் சொல்லிக் கொடுக்குமாறு ஏற்பாடு செய்திருந் தார். வாசிப்பதற்கல்லாவிடினும், தமக்கும் பத்திரிகைகள் வருகின்றன வென்று ஊர் மெச்சுவதற்காக "சுதேசமித்திரன்" மும்முறைப் பதிப்பொன்றையும் "ஆநந்த குண போதினி" யொன்றையும் தருவித் துக் கொண்டிருந்தார்.

"விளையும் பயிர் முளையிலேயே தெரியும்" என்னும் பழமொழிக் கேற்ப சிறுவன் முருகையன் சில வருடங்களுக்குள் ஆங்கிலத்தில் எழு தப் படிக்கத் தெரிந்துகொண்ட தோடு, தமிழில் தந்தையையும் ஆசிரி யனையும் மிஞ்சபவனாகக் காணப்பட் டான். தமிழ்ச் சுவைக்கும் பெரு மைக்குமாகத் தன் தந்தை பெற்று வந்த "சுதேசமித்திரனை"த் தன் வாழ்க்கைக்கு "இன்பவழி" காட்டும் ஓர் சாதனமாகக் கருதிப் படித்துவந் தான் முருகையன். வருடங்கள் ஆக ஆக, அவன் அவ்வூருக்கு ஒரு புது மனிதனாகக் காணப்பட்டான். மது அருந்துபவர் அவ்வூரில் மிகச் சிலரே யாயினும், புலால் உண்ணாதவர் ஒரு வரையாவது காண்பதரிது. நமது கவுண்டரும் அவர் மகனும் புலால் உண்பவரே. ஆனால் "மித்திர"னில் அதன் ஆசிரியர் எழுதிவரும் சமரச சன்மார்க்கக் கட்டுரைகளும், மகாத் மா காந்தியின் வாழ்க்கை முறையும் சேர்ந்து முருகையனின் மனதைக் கலக்கி வந்தன. கற்றதற்குப் பயன் அதன் வழி நிற்றலன்றோ முறைமை? முதல் முதலாக அவன் தன் வாழ்க் கையில் ஏற்படுத்திக்கொண்ட மாறு தல் புலால் உண்ணாமை. தான் மட் டும் அதனை விலக்கி வீட்டில் மற்றவர் கள் உபயோகித்துவருவது அவ னுக்கு அருவருப்பா யிருந்தது. தன் தாய்தந்தையரை விட்டொழிக்கும் படி அவன் பலமுறை செய்த முயற்சி வீணாயிற்று. பழக்கம் கொடியதல் லவா? ஆயினும் முருகையன் அவ்வ ளவு இலகுவில் சோர்ந்துவிடுபவ னல்ல. சமயம் நேரும்போதெல்லாம் பெற்றோர்களுக்குப் புலால் உண்ண லால் நேருந்திமைகளை யெடுத்துச் சொல்வான். தினம் விட்டுத் தினம் தவறாது வரும் "சுதேசமித்திர"னை வாசித்துக் காட்டி, அதில் ரஸமாய் விளங்கும் காந்தியடிகளின் ஜீவிய சரிதத்தை வாக்கியம் வாக்கியமாகப் படித்துப் பொருள் சொல்வான். அவர்கள் கேட்கும்பொழுதுமட்டும் பரவசப்பட்டுக் கேட்பார்கள். ஆனால் கேட்டபடி நடக்க அவர்கள் கட்டுப் படடவர்களல்ல. "புலால் உண்பது தொன்றுதொட்ட வழக்கமென்றும், தமது மூதாதையர்களால் உபயோ கிக்கப்பட்டு வந்ததோடு பல, தெய் வங்களுக்கு அதுவே பிரீதியென்றும், வாயில்லாப்பிராணிகளைக் கொன்று தின்பது பாவமெனின், அவற்றினும் கீழான நிலைமை வாய்ந்த செடிகொடி களில் விளையும் காய்கனிகளைப் பறித்து உண்பது மகா பாவமென் றும், மாடுகளை வருத்தி வேலை வாங் குவது எல்லாவற்றிலும் கொடுமை" யென்றும் தமக்குத் தெரிந்த யுக்தி அநுபவங்களைக் கொண்டு தன் மகனை அடக்க முயல்வார் நல்லப்ப கவுண்டர். தன் தந்தையின் வாதம் பொருளற்றதென்றும்; அதற்கேற்ற சமாதானம் தனக்குத் தெரிந்திருந் தும் அச்சமயம் சொல்வதால் எவ்வித

பொதுஜனக் கல்வியின் வியாபகமே உயர்தரக் கல்வியின் வேர்களுக்கு ஜீவரஸ மேற்றுகிறது.

பயனும் விளையாதென்று அறிந்து பேசாமலிருந்துவிடுவான் முருகன். அவன் புலால் உண்ணுவிடினும் அவன் வீட்டார் உண்பது வழக்கமாகையால் மாதம் இருமுறையாவது அவன் வீட்டில் அந்நாற்றங்கமிழாதிருக்காது. சிறுவன் என்செய்வன்? பெற்ருேரைத் தன் வழியில் திருப்ப இயலவில்லையே என்ற மனோவேதனை அவன் உடல் வளத்தை நாளுக்கு நாள் அரித்து வந்தது. பாவம்! "கிணறு வெட்ட பூதம் புறப்பட்டது" போல, பிறரைப் புலால் உண்பதினின்றும் தடுக்க முயன்ற அச்சிறுவனிடத்து, புலாலை மறுத்தது தான் உடல் மெலிவுக்குக் காரணமென்றும்; உடம்பு இன்னும் அதிக கேவல நிலைமைக்கு வந்த பிறகு அதைச் சேர்த்துக்கொள்ள முயலின் அது "கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வதோடு" ஒக்குமென்றுங் கூறி முருகையனை வற்புறுத்தத் தொடங்கினர் அவன் பெற்ருேர்கள்.

***

இவ்வாறு மாதங்கள் சில சென்றதும் முருகையனுக்கு சோதனை நான் ஒன்று சமீபித்தது' அது ஹிந்துக்களுக் கெல்லாம் பெருநாளாகிய ஓர் திருநாள். பரந்த நோக்கத்தோடும் ஏற்படுத்தப்பட்ட அந்த நாள் தற்பொழுது குருகிய நோக்கத்திற்கும், கொடிய நிலைமைக்கும் ஆளாகியிருக்கின்ற நாள். ஆண்டவன் படைப்பில் ஒருபடி உயர்ந்தவரெனக் கருதும் வலியவராகிய மக்கள் இன்புறவும், எளிய நிலைமை வாய்ந்த மாக்களில் (விலங்குகளில்) சில துன்புறவும் அமைந்த நாள். அதுதான் தீபாவளியென்னும் திருநாள். ஐப்பசி மாதத்து வரும் அந்த அழகிய தீபாவளிக்கு இன்னும் இரண்டு வாரம் இருந்தது.

தன் வீட்டார் மற்றக்காலங்களில் புலால் அருந்தினும் நன்னாளாகிய இந்நாளிலாவது அதை உண்ணுதிருக்கச் செய்யவேண்டுமெனக் கருதினன் முருகன். பெற்ருேரிடத்துத் தன் எண்ணத்தை வெளியிட்டான். பெண்கள் அன்புவடிவாகையால் தனது அருமை மகனின் வார்த்தையைத் தள்ள முடியாது சம்மதக்குறி காட்டினர் முருகனின் தாயார். கவுண்டரோ அலட்சியம் செய்துவிட்டார். ஆகவே அவர்மீது ஆதிக வருத்தம் கொள்ளத் தலைப்பட்டான் செல்வச் சிறுவன். "தீபாவளியில் மட்டும் என்? என்றுமே அக்கொடுஞ்செயல் இனி தன் வீட்டில் நிகழாதிருக்கச் செய்தலே ஏற்றது" எனக் கருதி அதற்குரிய வழி எது என நெடுநேரஞ் சிந்தித்தான். எவ்வாறு அச்செயலை நடைமுறைக்குக் கொண்டு வருவது என அவனுக்குப் புலப்படவில்லை. அதுசமயம் காந்திஜீயின் சரிதம் முருகையனை அவன் தந்தையிடத்திலேயே சத்தியாக்கிரகம் செய்யும்படி தூண்டிவிட்டது.

***

அன்று திங்கட்கிழமை. தீபாவளியோ இன்னும் நான்கு நாட்கள் இருக்கின்றன. வழக்கம்போல முருகையன் அன்று காலையில் தனது வயலுக்குச் சென்றவன் காலை மணி பத்துவரையிலும் சாப்பாட்டிற்கு வரவில்லை. சரியாக 12-க்கு வந்தான். அவனது வருகையைக் கண்ட ஆருயிரன்னை எதிர் சென்று தழுவி "தம்பி!

அன்பு அன்பு என்று ஏமாற்ற நினைக்கும் தந்திரிகளை அடியோடு விலகிக் குப்பையில் தள்ளு. ஆனல் அவர்களை விரோதிக்காதே.

பழைய சாதம் சாப்பிட வாராமல் இது வரையென்ன செய்தாய்?'' என்று அருள் நிறைந்த நெஞ்சுடன் அன்பு கனிந்த சொல்லால் கேட்டனள். "ஒரு வேலையாக இருந்தேன்'' என ஒரே வார்த்தையில் மறுமொழி கூறி, தனது அறையிற் (Room) சென்று படுத்துக் கொண்டான். அவளுக்குக் காரணம் ஒன்றும் விளங்கவில்லை. தன் மகனிடத்துப் பல முறை மன்றாடிக் கேட்டாள். உடம்பு சரியில்லையென்றும், அதனால் சோறு வேண்டாமென்றுங் கூறித் தன் தாய்க்கு முகங்கொடாது மறுபக்கந் திரும்பிக்கொண்டான். அவள் தன் கணவனிடம் தெரிவித்தாள். உடனே கவுண்டர், தன் மகனை எழுப்பிக் காரணம் வினவினர். "இனி வீட்டில் ஒருவரும் புலால் உண்பதில்லையென வாக்குக் கொடுத்தாலன்றி நான் தண்ணீரும் அருந்தேன்'' என மொழிந்தான் முருகன். கவுண்டருக்குக் கோபம் தன்னையறியாமல் வந்தது. பெயர் நல்ல அப்பன் தான், ஆனால் அவர் தன் மகனிடத்து அவ்வாறில்லை. "சலபானமும்செய்யாவிட்டால் யாருக்குக் கஷ்டம் உனக்குத்தானே: இரு, எத்தனை நாளைக்கு வேண்டுமானாலும் இரு;'' இத்தனை அடமா என்றார் கவுண்டர். அவர் மனைவியோ மனம் வெதும்பினாள்.

(தொடரும்.)

பெ. இராமாநுஜ ரெட்டியார்.

ஐந்துவகைத் திரவியம்.

இந்துக்கள் திரவியத்தை ஐந்து வகையாகப் பிரித்திருக்கிறார்கள். (1) மலைபடு திரவியம். மலையில் உண்டாகிற பொருள்கள்:—மிளகு, கோஷ்டம், அகில், தக்கோலம், குங்குமம் முதலியன. (2) காடுபடு திரவியம். காட்டில் உண்டாகும் பொருள்கள்:—தேன் கூடு, தேன், அரக்கு, மயிற்பீலி, நாவி முதலியன. (3) நாடுபடு திரவியம். நாட்டில் உண்டாகும் பொருள்கள் :—செந்நெல், சிறுபயறு, கரும்பு, வாழை, செவ்விளநீர், முதலியன. (4) நகர்படு திரவியம். பட்டணத்தில் உண்டாகும் பொருள்கள்:—அரசன், பித்தன், கருங்குரங்கு, யானை கண்ணாடி முதலியன. (5) கடல்படுதிரவியம். கடலில் உண்டாகும் பொருள்கள்:—உப்பு, முத்து, பவளம், சங்கு, ஒக்கோலை முதலியன.

☞ மேற்சொல்லிய பொருள்களிற் சில அர்த்த சாஸ்திர முறைப்படி திரவியமாகா. அரசன் விலைப்பண்டம் அல்ல, ஆகையால் அரசனைத் திரவியமென்று சொல்வது கூடாது. நாகரீக தேசங்களில் ஆட்களை விற்கிற வழக்கமில்லாமையால் திரவியமென்று அவர்களைச் சொல்வதில்லை. மேற்கூறிய திரவிய வகுப்பில் அநேக பொருள்கள் விட்டிருக்கின்றன. பஞ்சு, மரம், துணி, ஆட்டுமயிர் முதலான கணக்கில்லாத பொருள்களும் திரவியம் தான்.

சாஸ்திர நுட்பங்கள்

(210-ம் பக்கத் தொடர்ச்சி.)

71. பிராணவாயு (Oxygen) பிரிஸ்திலி என்ற இங்கிலீஷ் குருவினால் 1774-ம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது.

72. பிராணவாயு சுத்தமாய், அதாவது வேறொன்றுமே கலவாமல் தனிலையாய் ஒருக்காலும் இயற்கையில் இல்லை. நிலத்தில் மூன்றத்தொரு பங்கும், தண்ணீரில் நிறைப்படி ஒன்பதில் எட்டுப் பங்கும் பிராணவாயுவேயாகும். இது உயிருள்ள வஸ்துக்களில் முக்கியமான பாங்காயும், ஜீவனைத் தாங்குகிறதாயும், எவ்வித தகனத்துக்கும் வேண்டியதாயும் இருக்கின்றது.

73. வானத்திலிருந்து பூமியில் விழும் வின்கற்களில் (Meteorie Stones) பிராணவாயு இல்லை. ஆகையால் சூரியமண்டலத்திலுள்ள கிரகங்கள் சிலவற்றில் பிராணவாயு இல்லை; அல்லது பூமியில் இருப்பதைவிட அங்கே அது குறைவு என்று அனுமானிக்கப்பட்டது.

74. தாவரங்களில் பச்சை நிறமான பகுதி எதுவும் சூரிய வெளிச்சத்திலே பிராணவாயுவைக் கக்கும்.

75. சுத்த பிராணவாயு நிறம், மணம், ருசியற்றது.

76. ஒரு துண்டு கரியிலுள்ள பிராணவாயு வெளிப் போகாமல் வெகுகாலம் கிடக்கக்கூடும். அதில் சொற்ப நெருப்புப் பட்டாலோ பிராணவாயுவும் கரியும் மெத்த சுறுக்கில் சேர்ந்து எரிந்துபோம்.

77. பிராணவாயு எப்பொருளோடாவது சேர்வதால் காங்கை பிறக்கும்.

78. பிராணவாயு ஒரு பொருளோடு சேருகையில் வெளிச்சம் காங்கை இரண்டும் பிறக்குமாகில் அச்செயலுக்கு தகனம் என்றும், பொருள் எரிகிறதென்றும் சொல்லப்படும். இப்படி பிராணவாயுவோடு சேர்ந்தெரியும் பொருள் தகிக்கப்படுவது எனவும், அதை எரிக்கும் பொருளாகிய பிராணவாயு தகனிப்பது எனவும் பெயர்படும்.

79. பொருள் எரிவதாகிய தகனம் பிராணவாயுவின் செயலே. பிராணவாயுவின் தொடக்கமாகிய நெருப்பு மூளுதல் பெரும்பாலும் கொளுத்திய எப்பொருளாவது பற்றிக்கொண்டு உண்டாகும்.

80. விளக்குத் திரியை அணைத்தால் அது கொஞ்ச நேரம் மின்னிக்கொண்டிருக்குமாகிலும், மறுபடி தானாய் எரியத் துவங்காது. இப்படி மின்னும் திரியை பிராணவாயு அடைக்கப்பட்டுள்ள சாடிக்குள்ளே பிடித்தால் அது உடனே சுவாலித்து மெத்த பிரகாசமாக எரியும். மினுங்குகிற ஓர் கொள்ளியை பிராணவாயு அடைத்துள்ள சாடிக்குள்ளேபிடிக்க, அது வெடித்து சுவாலித்து எரியும். லேசான ஒரு கரித்துண்டை கம்பியில் பூட்டி கொஞ்சமாய்க் கொளுத்தி பிராணவாயு நிறப்பிய சாடிக்குள்ளே பிடிக்க, அது சுருக்காய் எரிந்து நாலு பக்கத்திலும பொறிகளைச் சிந்தும்.

மனுஷ்யன் வெளியில் எவ்வளவு கஷ்டப்பட்டாலும், வீட்டிற்குள் அவனுக்கு ஆதரிப்பும் சந்தோஷமும் இருக்கவேண்டும்

81. கொளுத்திய கெந்தகம் பிராணவாயுவில் சிறப்பான நீலச் சுவாலையோடு எரியும்.

82. பிராணவாயு ஜீவனுக்கு அவசியம் தேவையானது. ஓயாமல் சுவாசிக்கப்படுவதும் அதுவே. அது இல்லாவிடில் ஒரு உயிரும் இருக்க மாட்டாது.

83. பிராணவாயு சுவாசத்தினால் வேறு பதார்த்தங்களோடு கலப்பதால், அது மறுபடி ஜீவனைத் தாங்குவதற்கு உதவாததாகும். ஒரு குருவியை ஒரு கண்ணாடிப் பாத்திரத்துக்குள்ளே அடைத்து வைத்தால், அதற்கு யாதொரு வருத்தமுமில்லாமல் கொஞ்ச வேளைக்கு இருந்தாலும், அக்கண்ணாடிப் பாத்திரத்துள் இருக்கும் பிராணவாயு மூச்சால் கொஞ்சம் கொஞ்சமாய்ச் செலவாகி சீக்கிரத்தில் குறைவதால் மூச்சு முட்டாகி கொஞ்சநேரத்தில் மூச்சு நின்றுவிடும். இந்தப் பாத்திரத்துக்குள் இப்போது பிராணவாயு முற்றிலும் இல்லாமல் செலவாகிவிட்டதால், இன்னொரு குருவியை அப் பாத்திரத்துள் விட்டால் அது க்ஷணத்தில் மூச்சடைத்துச் சாகும். கொளுத்திய விளக்குத் திரியை அப் பாத்திரத்துள் பிடித்தால், அது உடனே அணையும். சுவாசம், தகனம் இரண்டும் பிராணவாயுவைச் செலவழித்துவிடும். தகனத்துக்கு உதவாத வாயு ஜீவனுக்கும் உதவாது. சுவாசத்துக்குப் போதாத பிராணவாயுவில் தகனம் நடவாது.

84. பிராணவாயு சுவாசத்துக்குத் தேவையானதாயினும், கலப்பில்லாத சுத்தமான பிராண வாயுவைக் கொஞ்ச நேரம் சுவாசித்தால் எந்தப் பிராணியும் சாகும். உதாரணமாக, சுத்த பிராணவாயுவுக்குள்ளே ஓர் முயலை அடைத்தால், துவக்கத்தில் அதற்கு ஒரு வில்லங்கம் உண்டாகாதிருந்தும், இரண்டு மூன்று நாழிகைக்குப் பின்போ அவதியும், சுவாச இரத்தோட்டக் கெதியும் உண்டாகி, பதினைந்து நாழிகைக்குள்ளே சாகும்.

85. பிராணவாயு அதிகமாய் காந்தத்தன்மையுள்ளது. அதாவது இரும்புக்கும் காந்தத்துக்கும் உள்ள அளவு சேர்மானம் இதற்கும் காந்தத்துக்கும் உண்டு.

86. பூமியில் பிராணவாயுவால் உண்டாகும் பலன் எவ்வளவென்று நிதானிக்க முடியாது. மனுஷர் மாத்திரம் சுவாசிப்பதற்கு நூறு கோடி ராத்தல் பிராணவாயு நாள்தோறும் தேவையென்றும், மிருகங்கள் சுவாசிப்பதற்கு இதில் இருமடங்கு வேண்டுமென்றும், ஓயாமல் நடந்துகொண்டிருக்கிற தகனம், கொதிப்பு, அழுகல், உக்குதல் முதலியவற்றால் செலவாகிவிடும் பிராணவாயுவையும் கூட்டினால், நாள்தோறும் செலவாகும் பிராணவாயு எண்ணூறு கோடி ராத்தல் என்றும் கணக்கிட்டிருக்கிறார்கள். இக்கணக்கோடு பூமியிலுள்ள எல்லா பதார்த்தங்களையும் ஒருமிக்கத் திரட்டி, அதில் அரைவாசிக்கு மேற்பட்டது பிராணவாயு என்ற கணக்கைப் பார்த்தால் வியப்புண்டாகும்.

87. 154-ராத்தல் பாரமுள்ள மனுஷனில் 116-ராத்தலும் தண்ணீராகும். 36-ராத்தல் மாத்திரம் கெட்டியான பதார்த்தமாகும். கீழ் வகுப்பான பிராணிகள் சிலவற்றிலே தண்ணீர் இதிலும் அதிக மிதமாய்ச்

பேர் எங்கும் பிரசித்தி! உள்ளுக்கோ கேடுகெட்ட எண்ணம். எல்லாம் சுயநலத்தன்மை. தன் பெயரை விளம்பரப்படுத்திக் கொண்டு காங்கிரஸில் பிரபல மனிதராவதற்கே ஒவ்வொரு செய்கையும்.

சேர்ந்திருக்கும். ஓர் வகையான கடற் ஜெந்துவில் 100-க்கு 90-பங்கும் தண்ணீர்.

88. நிலம், நீர், தீ, காற்று, விசம்பு என்ற பஞ்ச பூதங்களுள் தண்ணீரும் ஒன்றாகும். யன்கேல் மன் என்பவர் தண்ணீரை மண்ணாக் கலாம் என்றும், நிலத்தில் நின்ற மரத்தை தண்ணீரில் போட, அது தண்ணீரிலிருந்து கெட்டியான பதார்த்தத்தைப் பெற்று அதில் ஊன்றி வளர்ந்துகொண்டிருப்பதாலும், தண்ணீரைப் பாத்திரத்தில் வற்றவைக்க அதில் எப்போதும் ஓர் மண்ணடையல் காண்பதும் இதற்கு அத்தாட்சிகளாகும். என்று கொண்டார்.

89. சமுத்திரத்தின் தண்ணீரின் நிறம் என்னத்தினாலென்று சரியாய் விளங்கவில்லை. ஆழங்குறைந்த பகுதிகள் பெரும்பாலும் பச்சையாயும், ஆழங்கூடின பகுதிகள் நீலமாயும் இருக்கும். செங்கடலில் சில காலங்களில் சிவப்பு நிறமாயிருப்பது நுண்ணிய பாசிகள் ஏராளமாய் செறிந்திருப்பதனால் என்பது சோதனையால் அறிந்த காரியம்.

90. பூரண சுத்தமான தண்ணீர் இயல்பிலே இல்லை.

91. நெடுங்கால மழையின் முடிவில் சேர்க்கப்படும் மழைத் தண்ணீரே இயற்கையிலுள்ள தண்ணீர்களுக்குள்ளாகச் சுத்தமானது. இதிலும்கூட பரமாணுவும் அதிலுள்ள வாயுக்களும் 100-க்கு $2\frac{1}{2}$-பங்கு வீதமாய் கலந்திருக்கும். ஆற்றுத் தண்ணீர் சுத்தத்தில் மழைத் தண்ணீருக்கு இரண்டாவது. இதற்கு அடுத்ததாக வாவி குளங்களின் தண்ணீர். இதற்கு அடுத்ததாக ஊற்றுத் தண்ணீர். இதற்கு அடுத்ததாக இரும்பு கெந்தகம் முதலியவைகள் சேர்ந்த சுரங்க ஊற்றுத் தண்ணீர். இது தன்னில் கரைந்திருக்கும் பொருளுக்கு ஏற்றதாய் மருந்தாகும். இதற்கு அடுத்ததாக ஆறுகளில் வந்து விழுவதான சமுத்திரத்தின் குடாக்கள். இவைகளின் நீர் உப்பு. இதற்கு அடுத்ததாக சமுத்திரத்தின் தண்ணீர். இதற்கு அடுத்ததாக உள்நாட்டுக் கடல்கள். கடைசியாய் ஓடவழியில்லாத சாக்கடல், கஸ்பியன் கடல் முதலியவைகளாம்.

92. ஊற்று நீர் எவ்வளவு தெளிந்ததானாலும், அதில் ஏதாவது உப்பு வகைகள் கொஞ்சமாவது கரைந்திருக்கும். கலந்திருக்கும் பொருள்களின் தன்மை தண்ணீர் ஊறிவரும் நிலத்துக்குத் தக்கதாய் இருக்கும்.

(தொடரும்)

ஒரு வீட்டில் ஒரு தந்தை நெற்றியில் திலகமிட்டுக் கொள்ள ஒரு குச்சி கொண்டு வரச் சொன்னதற்கு இரு குழந்தைகளும் தனித்தனியே கொடுத்து, தன் தன் குச்சியில் தான் திலகமிட்டுக்கொள்ள வேண்டுமென்றனர். ஒரு குச்சியில் பாதி பொட்டும், மற்றொரு குச்சியில் மறு பாதி பொட்டுமாக இட்டுக் கொண்டு இருவரையும் திருப்தி செய்தார் தந்தை. இரண்டு பெண்டாட்டிக்காரன் கதையும்கூட இவ்விதம் தானே!



இராஜாம்பாள் (23-ம் பதிப்பு.)
3-சித்திரப்படங்களுடன் கூடியது.
விலை அணா 12.

ஸ்ரீமான் ஜெ. ஆர். ரங்கராஜா அவர்களின் முதல் நாவலான இராஜாம்பாளின் 23-ம் பதிப்பைப் பார்த்து மிகவும் ஆநந்திக்கின்றோம். முதல் பதிப்பு 1907-ம் வருஷத்தில் வெளியாயிற்று. இதனிடையே 21-வருஷங்களுக்குள் 23-பதிப்புகள் வரை ஆகியிருப்பது எந்தத் தமிழ் நாவலிலும் காணாத ஸம்பவம். அதற்கேற்றபடி ஆசிரியரும் தமது நூலை இயற்றப் புகுவதில் மிக்க சிரமம் எடுத்துக் கொள்ளுகிறார். தமது நாவலுக்குள்ள முக்கியாம்ஸங்களை எல்லாம் விஸ்தாரமாக முதல் அத்தியாயத்தில் அதிகமான பக்கங்களுடன் அடக்கிவிட்டு, அவற்றில் கண்டவற்றை விளக்குவதற்கு உதவியாக மற்ற அத்தியாயங்களைத் துணைக்குக் கொள்கிறார். இத்துடன் தமது பாண்டித்யத்தைக் காண்பியாது பேசும் தமிழில் எளிய சுலபநடையில் எழுதிச் செல்கின்றார். அவர் அமைத்துள்ள முறையில் வேறு எந்தத் தமிழ் நாவலும் இருக்கவில்லை. அவரது நாவல்களில் இராஜாம்பாள் ஒரு அதிர்ஷ்டமான நாவல் எனலாம். அதை எழுதப் புகுந்த நேரம் நல்ல அதிர்ஷ்ட நேரம். இராஜாம்பாள் கதை தமிழ் நாட்டில் யாவருக்கும் தெரிந்தது. அதன் நாடகம் எத்தனை முறை திருப்பித் திருப்பி நடத்தப்படினும் ஜனத்திரள் அதிகமாகவே யிருப்பது வழக்கம். பத்திரிகைகளில் விளம்பரங்கள் இன்றியும், அக்கிரமக் கமிஷன் இன்றியும், ஸ்ரீரங்கத்துப் பாதிவிலை யில்லாமலும் 23-பதிப்புகள் வரை வாங்கப்பட்டு விலையாகி யிருப்பதானது அந்த நாவலைப்பொது ஜனங்கள் எவ்வளவு ஆவலுடன் விரும்புகிறார்களென்பதைக் காட்டுகின்றது. ஆசிரியர் இன்னும் வெகு காலம் வாழ்ந்து, 25-ம் பதிப்புக்கு வெள்ளி ஜூபிலியும் நடத்தி, 50-ம் பதிப்பையும் பார்த்து இன்புறுமாறு இறைவன் அருள்புரிவாராக.

வியபிசாரம் :—

இச்சிறு நூல் சேலம் அதமன் கோட்டை ஸ்ரீமான் எ. எல். சுப்பிரமணிய ஐயரவர்கள் இயற்றியது. அவ்வளவும் அநுபவ சாரம். மிகத் தெளிவாகவும், அநுபவமாகவும், விவரித்துச் சென்றுள்ளார். விலை அணா 1½.

கலா நிலயம் :—

ஸஞ்சிகை ரூபமான வாராந்திரத் தமிழ்ப்பத்திரிகை. ஆசிரியர் ஸ்ரீமான் ஈ. குமாரய்யா அவர்கள் பி. ஏ. பி. எல். வருஷ சந்தா ரூபா 7–8–0. தமிழ் மொழியின் சுவையை அறிய விரும்பினால் இப்பத்திரிகையை வாங்கிப் பார்க்கலாம். உயரிய தமிழில் மிக்க திறமையுடன் எழுதப்படுகின்றது. மாணவர்கட்கான பக்கங்கள்

ஒரு பக்கம் ராமபாணம்போல் சொல்லித் துளைக்கிறார்கள். மற்றொரு பக்கம் சுடச்சுட பாயஸம் அவர்களே கொண்டுவந்து உண்ணச்செய்கிறார்கள்.

வெகு அற்புதமா யுள்ளன. தமிழ்ப் பாஷா ஞானத்தில் தேறுவதற்கு இப்பத்திரிகை ஓர் அபூர்வ ரத்தின மாகும். உயர்ந்த காகிதப் பதிப்பு. இப்பத்திரிகை வெகுகாலம் நடை பெற்றுப் பூர்வ 'ஜாநவிநோதினி'போன் றும் உயர்வெய்துக.

மாயா மேயோ அல்லது

மேயோவுக்கு சவுக்கடி.

ஆசிரியர் ஸ்ரீமான் வ. ராமசாமி ஐயங்கார் அவர்கள் இயற்றியது. விலை ரூபா 2.

தமது அருங்கருத்துகளை விளக் குவதற்கு இதன் ஆக்கியோனுக்கு மேயோவின் நூல் ஒரு நல்ல சந்தர்ப் பமாகக் கிடைத்தது. அந்நூலுக்கு வரையும் கண்டன பாகத்தின் வகை யிலே, நெடுங்காலமாக ஊறிக் கிடக்கும் தமது உள்ளப் பெருக்கு களை யெல்லாம் வெகு விஸ்தாரமாய் எழுதிச் சென்றுள்ளார். ஆசிரியர் உண்மையிலேயே ஒரு பெரும் தத் துவ சாஸ்திரி. தமிழ் மொழியில் தத்துவ ஞானமிர்தம் பொழிவதற்கு இந்த ஸ்ரீ வ. ரா. ஒருவரே உள்ளார். இத்தகையோரிடம் மேயோவின் நூல் சிக்கிக்கொள்ளின் அது படும் பாடு சொல்லவும் படுமோ? நல்ல சவுக் கடி. சரியான கண்டனங்கள். தக்க விடைகள். ஒவ்வொன்றும் ஆழ்ந்த அநுபவத்துடன் எழுதப்பட்டவை கள். சென்றுவிட்ட நாட்களின் ராஜீய பாகங்களையும் இந்நூல் நினைப்பூட்டு கின்றது. மேயோவின் நூலிலிருந் தெடுத்த பல குறிப்புகளைத் தமிழில் தெரிவித்து, அதற்கு இந்நூலில் கண் டனம் எழுதப்பட்டிருக்கிறது. மேயோ என்ன எழுதினுர் என்று முழுவதையும் பார்க்க விரும்புவோர் ஆங்கில நூலைத்தான் பெற்றுப் படித் தறிய வேண்டும். ஆசிரியர் வ. ரா. அவர்கள் இன்னும் இதுபோன்ற பல நூல்களை எழுதித் தமது அபூர்வ தத்துவங்களை வருஷிப்பாராக.

☞ இப்புஸ்தகங்கள் நமது அமிர்த குணபோதினி ஆபீஸில் விலைக்குக் கிடைக்கும்.

அதிகாலையிலேயே வீட்டைவிட்டுப் புறப்பட்டு விட்டால்தான் தடை எதுவும் இராது. சற்றுநேரம் ஆயினுே ஏதேனும் ஒரு தடை குறுக்கிடும். சோம்பல் தோன்றும். நாளை புறப் படலாமென்று நினைக்கும் படியாகி விடும். அன்றைய புறப்பாடு பிற்பாடு என்றே முடியும். மறு நாளிலும் அதிகாலையில் புறப்பட்டால் தான் முடியும். இல்லா விடில் நேற்றைய கதையைப் போலவே முடிந்துவிடும்.

நீயும் ஒன்றைப் பார்க்கிறுய். நானும் அதைப் பார்க்கிறேன். உன் மந்தப் பார்வையில் உன் உள்ளம் வெறுமனே குந்திக் கிடக்கிறது. என் சுறுசுறுப்புப் பார்வையிலோ உனக்குக் காணுத புது புது நினைவுகளை என் அறிவு என்னில் தோன்றவைத்துத் தூண்டுகிறது. எனவே, நீ பார்ப்பதற்கும் நான் பார்ப்பதற்கும் பேதமிருக்கிறது. நீ வெறுமனே படிக்கிறுய்; நான் வெற்றியடையப் படிக்கிறேன்.

சென்றமாதம்

ஆப்கன் அமீரின் தேசஸஞ்சார நோக்கம்.

"ஆரியக்கூத்தாடினலும் காரியத்தில் கண்" என்பதாக ஆப்கன்அமீர் தமது ஐரோப்பிய சுற்றுப் பிராணத்தைப்பற்றிப் பின்வருமாறு கூறினர். எனது நாட்டின் நன்மையை நாடியே மற்ற நாடுகளின் நிர்வாகத்தைப் பார்க்கச் சென்றேன். சுகபோகத்துக்காக நான் இந்தப் பிரயாணத்தைச் செய்யவில்லை. ஆப்கானிஸ்தானத்தை உலகமெல்லாம் அறியவைக்கவும், பல தேசத்தினரின் கூட்டுறவைப் பெறவுமே இப்பிரயாணத்தைத் தொடங்கியது என்ருர். இவர் காரியக்குட்டி.

***

ஸ்ரீ மீனுக்ஷி ஸர்வ கலாசாலை ஸ்தாபனம்.

"சிதம்பரத்திலே பிறந்த பிள்ளைக்குத் திருவெம்பாவை கற்றுக் கொடுக்க வேண்டுமோ?" என்பது பழமொழி. இதுவரை சிதம்பரம் திருவெம்பாவைப் பாடலுக்கு மட்டும் பிரஸித்தமானதா யிருந்தது. இனி விஸ்தாரமான மாடமாளிகைகளுடன் கூடிய ஸர்வகலாசாலைக்கும் அது பெயர் பெற்றதாகிவிடும். பூலோக கைலாஸமென்னும் சிதம்பரம் தென்னிந்திய வித்யாபீடமாகவும் இனி ஒளி வீசப்பெறும். ஸர் அண்ணுமலை செட்டியார் தமது அன்னையின் ஞாபகார்த்தமாக ஏற்படுத்தும் இந்தத் தர்மம் பரமோத்தமமானது. இப்பொழுது சிதம்பரத்திலுள்ள ஸ்ரீமான் செட்டியாரவர்களின் கலாசாலைக் கட்டிடங்களும், மற்ற ஐவேஜிகளுமான சுமார் 17-லக்ஷம் ரூபாய் பெறுமானமுள்ள சொத்துக்களுடன் 20-லக்ஷம் ரூபாய் ரொக்கத்தையும் சேர்த்து ஸர்வ கலாசாலைக்காக அவர் உதவியுள்ளார். அரசினர் இதக்கு 20-லக்ஷம் ரூபாயும், இனி கட்டப்படும் கட்டிடங்களுக்காக ஏழெட்டு லக்ஷம் ரூபாய்களும் கொடுக்க இசைந்துள்ளார். இவை ஒன்று கூடிய மூலதனத்தின் வட்டியும், மாணவர்களின் சம்பள வசூலும் சேர்த்து நிர்வாகச் செலவுகள் செய்வதில் அது செலவுக்குப் போதாதென்று பிரதி வருஷமும் துரைத்தனவருமானத்திலிருந்து ஒன்றை லக்ஷம் ரூபாய் உபகரித்து வரவும் சென்னைக் கவர்ன்மெண்டார் ஒப்புக்கொண்டுள்ளார். இது மகத்தான தர்மமாகும்.

***

முனிசிபல் உத்தியோகங்கள்.

"ஆர் ஆருக்கு நானுவேன் ஆகாத உடம்பையும் புண்ணுக்கிக் சொண்டு" என்பதாய் முனிசிபாலிட்டிகளில் உத்தியோகம் பெறுவோரின்பாடு பெரிய கலக்கமாகிறது. ஒரு சேர்மனு, ஒரு கௌன்சிலரா? எல்லோரும் மறைந்து மறைந்து புதிதாய் முளைப்பவர்கள்!

அதிகம் கற்றவர்கள் மிக்க அடக்கமும் சாதாரணத் தன்மையும் காண்பிக்க, அதனல் மற்றவர்களுக்கு அவர்கள் சாமான்யராகப்பட, அறிவாளிகளுக்கோ அன்னோர் வெகு அருமையான மனுஷ்யர்களாகத் தோன்றுகிருர்கள்.

இவர்களுடைய தேர்தல்களில் ஒருவருக்கு உதவி செய்தால் மற்றொருவரின் விரோதம்! விரோதமானவர் தேர்தலில் வெற்றி பெற்று நியமனமாய் விட்டால் இருந்த வேலையும் இந்த குமாஸ்தாவுக்குத தொலைந்து போகலாம். எல்லோருக்குமே இங்கிதமாக சங்கீதம் பாடவேண்டிய பரம கஷ்டத்தில் முனிசிபல் உத்தியோகம் இருக்கிறது. அன்றியும் மேலுக்கு அதிக சம்பளத்திற்கு உயரவும் வழியில்லை. இதிற் புகுந்து முன்னுக்கு வரவும் தக்க தூண்டுதலில்லை. இதில் வேலைக்குப் புகுவோரும் வேறிடங்களில் வசதியின்றியே இங்கு வந்தடைகிறார்கள். இவ்விதம் தீராப் பொறியாக இதில் நுழைந்தவர்களும் சிறிது காலத்தில் மனம் ஒடிந்து போகிறார்கள். இச்சென்னை மாகாணத்தில் ஜில்லா முனிசிபாலிட்டிகள் 80-வரை இருக்கின்றனவாம். இதில் 1702-அங்கத்தினர்கள் இருக்கக்கூடுமாம். ஐசுவரிய சம்பன்னர்கள் புது புது கௌரவங்கள் பெறமட்டும் முனிசிபாலிட்டிகள் வெகு சிரத்தையுடன் உதவி செய்கின்றன.

***

டில்லி சிறைச் சாலையின் ஊழல்கள்.

"அருமை அறியாத இடத்தில் எருமை" என்பதாகச் சிறைவாசத் துன்பமும் இருக்கிறது. டில்லி சிறைச்சாலையைப்பற்றி ஆசிரியர் இந்திரா தமது சிறை யனுபவங்களை வெளியிட்டுள்ளார். ஈக்களின் உபத்திரவமில்லாமல் ஒரு நிமிஷங்கூட உணவுகளைத் திறந்துவைக்க முடியாது. சிறைக்கூடத்தில் நாற்றம் நாறிக்கொண்டிருந்தது. ** ரொட்டியில் கோதுமை மாவைவிட அசுத்தமே அதிகம். பக்குவம் செய்த காய்கறிகள் கன்னங்கரேலென்று நாற்றம் நாறியது. பருப்புகருப்பு நிறமாக மாறியது. பழய கம்பளிகளை விறகுக்குப் பதில் எரிக்கின்றனர்..." இன்னும் எத்தனை எத்தனை கோரணிகளோ!

***

தென்னிந்திய ரயில்வே வேலை நிறுத்தம்.

"கவலை யுள்ளாருக்குக் கண்ணுறக்கம் வராது" என்பது போலத் திரிச்சி பொன்மலை ரயில்வேத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யப்போக, அதினின்றும் பெருகி, ஜூலை மாதம் 19-ம் தேதி இரவு 12-மணிக்கு தென்னிந்தியா ரயில்வே முற்றிலும் வேலை நிறுத்தம் செய்துவிட்டனர். இதில் வேலை நிறுத்தக்காரர்கள் சிலர் பலாத்காரத்தில் இறங்கி சேதமும் எதிர்ப்பும் விளைத்துவிட்டதில் வேலை நிறுத்தத்தின் பரிசுத்த நோக்கமே கெட்டு, பல விபத்துகளும் மரணங்களும் நேர்ந்து, வேலைநிறுத்தத் தலைவர்கள் கைதியாகி 30-ம் தேதி காலை 6-மணியுடன் வேலை நிறுத்தம் தீரும்படியான நிலைக்கு நேர்ந்து விட்டது. பலாத்காரம் என்பதே கூடாது. அது ஸத்தியாக்கிரகத்துக்கு முற்றிலும் எதிரிடை. பலாத்காரம் உண்டாகா விட்டால் அதிகாரிகள் தலையிட வழியே யிராது. போலீசுக்கும் வேலையில்லை. இப்படி அஹிம்ஸா தர்மத்துடன் நடப்பதே சரியான ஸத்யாக்கிரகமாகும். அதன்படி ரயில்வேத் தொழிலாளர்கள் பிறருக்கு ஹிம்ஸையோ சேதமோ எதுமின்றி தர்ம நியாயமாய் நடத்தி யிருந்தால் முடிவு வேறு விதமாயும் வெற்றியாகவும் இருந்திருக்கும். எனினும் தவறுதலிலிருந்தே புதிய படிப்பினையின் உற்பத்தி.

குழந்தைகள் பக்கம்

(1) பார், கேட்டுக்கொள். (2) யோசி. (3) பிறகு பேசு.



உலகம் இன்னதென்று அறியாக் குழந்தைகளே! வெளுத்ததெல்லாம் பால் என்று நினைக்கும் சிறுவர்களே! எதையும் நன்றாக உற்றுப் பாருங்கள். எதிலும் உங்கள் கண்களை நன்றாகச் செலுத்திச் சாவகாசமாக ஆராயுங்கள். வெகுபரிசுத்தமானவர்கள்போல் காணப்படும் மனிதர்களிடத்திலும் எவ்வளவோ மோசம். வஞ்சனை, பொல்லாங்குகள்நிறைந்திருக்கலாம். சிலர் ஒவ்வொரு பேச்சுக்கும் கலகலவென்றுசிரித்துக்கொண்டே பேசுவார்கள். அது ஒரு சாமர்த்திய வித்தை. அதிலே மயங்கி அவர்களை உத்தமர்கள் என்று எண்ணிவிடாதீர்கள். பழகித்தான் தெரியவேண்டும். சோதித்துத்தான் அறியவேண்டும். இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்பதுபோல, சிலர் எதுவுமே தெரியாதவர்கள்போல் காணப்படுவார்கள். ஆனால் அது உண்மையா? இல்லவே யில்லை. அவர்கள்தான் சரியான நரிப்பிறப்புக் குட்டிகள். வெகு தந்திர வஞ்சக சுயநல ஜாலம் மிகுந்தவர்கள். எவர்களை வெகு காலத்துக்கு உதவுகிறவர்கள் என்று பழகுகிறோமோ, எவர்களை உண்மையான அன்புடன் கொண்டாடுகிறோமோ, அவர்கள்தான் நடுவழியில் முறித்துக்கொண்டு பிரிந்து போகக்கூடியவர்கள். தங்கள் காரியம் ஆகவேண்டிய சம

புதிய ரயில்வே ஸ்டேஷன் ஒன்று ஏற்பட்டதும் முதலில் தோன்றுவது காபி ஹோட்டல்! அதன்பின்பு வெற்றிலைப்பாக்குக் கடை! பிறகு பல பல.

யத்தில் எவர்களும் வெகு நல்லவர்களாகவே காணப்படுவார்கள். அவர்கள் காரியம் ஆனபிறகு பார்த்தால், அவர்கள் பெரிய தன் காரியக் குட்டிகள் என்றும், தங்கள் காரியம் நிறைவேறவே நம் மோடு அவ்வளவு பிரியமாய்ப் பழகினுர்களென்றும் உடனே தெரிய வரும். பார்த்த அளவில் ஒருவரை நம்பி மோசம் போனவர்கள் எவ்வளவோ பேர். நம் வீட்டுக்குப் புசிக்க வந்திருக்கையில் எவ் வளவு வணக்கமாய் இருக்கிறுர்கள். அத்தகையோரைப் பிறகு பார்த்தாலோ மெதுவாக ஒதுங்கி மறைகிறவர்களா யிருப்பார்கள்.

படத்தில் நீ காண்பதென்ன? ஒருவன் தன் கையில் ஒரு கண்ணுடிப் பாத்திரத்தை வைத்துக்கொண்டு அதில் உள்ள சுத்த ஜலத்தை வெகு ஆழ்ந்த பார்வையுடன் அதிக கவனமாய் உற்றுப் பார்க்கிறுன். வெளிக்கு சுத்தமான ஜலம்போல் இருந்தாலும், அதி லும் அநேக விஷப் பூச்சிகள் நமது கண்ணுக்குத் தென்படாதபடி நிறைந்திருக்கலாம். நமது உயிரையே வாங்கக்கூடிய பூச்சிகளும் அதில் இருக்கலாம். எவ்வளவோ பேர் சுத்தமான பசும்பாலென்று நினைத்து, அதில் கலந்த வைப்பு மருந்துகளை அறியாமல் குடித்து விட்டு, அந்த மருந்து வயிற்றில் தங்கி, அதனுல் இறந்தும்போயிருக் கிறுர்கள். கண்ணுடிப் பாத்திரத்திலுள்ளதை சுத்த ஜலம் என்று அவன் நம்பிவிடவில்லை; வெகு கூர்மையாய் அதைச் சோதிக்கிறுன். அவ்விதமே நீயும் ஜலத்தை மட்டுமல்ல, உன் கண்களுக்குப் படுகிற உன் செவிக்கு எட்டுகிற எதையும் நன்ருக ஆராய்ந்து பார். கண்ட தையும் கேட்டதையும் நம்பிக்கொள்ளாதே. நம்பி உடனே ஒரு நிச்சயம் செய்துவிடாதே. எவ்வளவு வரையில் அது உண்மை, எதுவரையில் அது பொய் என்று நன்ருக அலசிப் பார். அவசரப் படாதே. நிதானமாகவே செய். உன் சிந்தையை எல்லாம் அதில் செலுத்து. ஒரு முகத்தோடு பார், கேட்டுக்கோள். இன் னெரு முகத்தோடு அதைப்பற்றி மௌனமாக யோசி என்று இந்தப் படம் உனக்குக் கற்பிக்கிறது.

(1) முதலிலே எதையும் நன்ருக உற்றுப்பார். வெகு நேர மட்டும் ஆழ்ந்துபார். நன்ருக சோதித்துஅறி. அதில் ஏதாவது தவறு, வஞ்சகம், மோசம், சுயநலம் என்கிற பூச்சிகள் இருக்கின்றனவா வென்று கவனி. தங்கள் நலத்துக்காக அதை உன்னுடைய நலம் போல் அபிநயித்துச் சொல்லுகிறுர்களா என்றும் சிந்தித்து நோக்கு.

(2) பிறகு நீ கண்டறிந்த பரிக்ஷையை, நீ உற்றுப் பார்த்துத் தெளிவாக உணர்ந்த விஷயத்தை, உன் மூளைக்குக் கொண்டுபோ. கண்களை நன்ருக மூடிக்கொள். வெளிப்பார்வையை மூடியதும் உட் பார்வை உண்டாகிவிடும். அந்த உட்பார்வையுடன் முன்பு கண்

அங்கு உடனே சொல்லவேண்டி யிருந்த ஒரு பதில் வார்த்தையை மறந்துவிட்டு, அதை வீட்டில் வந்து நினைத்துக்கொள்வதில் என்ன லாபம்.

ணும் செவியாலும் அறிந்தவற்றை யெல்லாம் வெகுவாக மௌனத்தோடும் இருந்து நெடுக யோசனை செய்.

(3) முதலில் ஒன்றை நன்றாகப் பார்த்தும் கேட்டும் ஆனபிறகு, கண்ணை மூடிக்கொண்டு உன் மனதிற்குள் அவற்றை நன்றாக ஆராய்ந்து தெளிந்தபிறகு, அதன்மேல் நிதானமாக ஒரு நிச்சயமான முடிவுக்கு வா. இதையே இந்தப் படம் குறிப்பிடுகிறது.

இவ்வாறான ஒரு பழக்கத்தை நீ பயிற்சி செய்துகொண்டு விட்டால், உலக காரியங்களில் அதிகமான வெற்றியைக் காண்பாய். உடனுக்குடனே பதில் சொல்லி விடுகிறவன் உதவாத கட்டையாவான். எவ்வளவு தான் பிறர் தன்னோடு பேசினாலும், அவர்களை மட்டும் பேச விட்டுவிட்டு, தான் எதற்கும் வாய் திறவாமல், உம் உம் என்று கேட்டுக் கொண்டே போய், அவர்கள் சென்ற பிறகு, அவர்கள் பேசியவற்றைக் குறித்து நிதானமாக யோசித்து, மெதுவாக ஒரு முடிவுக்குவருகிறவனேபுத்திமான். அவனே தீர்க்காலோசனை யுள்ளவன். ஆகவே, எந்த சங்கதிக்கும்—**பிறகு யோசித்துச்சொல்லுகிறேன்**—என்று நீ பதில் சொல்வதே உனக்கு நன்மை, ஆனால், **நீ வஞ்சகனாய் விடாதே.**

ஒருவருக்குக் கடனாகவோ இரவலாகவோ ஒன்றைக் கொடுக்கையில், அதை அவர் போக்கடித்துவிட்டால், கொடுத்தவர்க்குப் போக்கடித்தவரைவிட அதிக கஷ்டம் மேற்படுகிறது. கொடுத்தது வருமோ வராதோவென்ற கவலையும் உண்டாகிறது. பல வராமலே போகலாம். சிலசில வரினும் அது பாதியோ, கால்பாகமோ யாதோ! கொடுப்பதில் இந்தக் கஷ்டமும் வேறே!

குறி அறிவு:—தன் ஜீவியம் இன்ன வழியில் தான் என்கிற 'குறி அறிவை' ஒவ்வொருவனும் பெறுக. முதற்குறி தவறினும் மேலும் முயல்க. அதன் பின்னரே வேறொரு குறி அறிவு கொள்ளல் வேண்டும். முதலிற் கொண்ட குறியிலேயேவெற்றிகொள்பவன் வீரனாவான்.

ஒரு உண்மைச் செய்தியைக் கலக நோக்குடன் சொல்லும் இழிந்த தன்மையை விட, அவ்விதம் நடக்கவில்லையென்று கூறிக் கலகத்தைத் தடுத்துவிடக் கூடிய ஒரு பொய்யைச் சொல்லுகிற மேலாகிய எண்ணம் முந்திய உண்மையை விட மிகவும் உயர்வானதாகும்.



ஆங்கில  தமிழ்க்கடிதங்கள்

Letter XV.

From a country Shopkeeper, to a dealer in Calcutta, complaining the Badness of his Goods'

Sir,

When I first began to correspond with you, it was my fixed resolution to act with integrity and honour, expecting the same in return. I must indeed, confess, that the goods you sent me for sometime were as good as any I could purchase from another and so for, I had not any reason to complain. But now the case is quite different: the two parcels you sent me are so bad that I dare not offer them to my customers. From what, Sir, does this proceed? Have I ever been deficient in my payments? No, you dare not accuse me with any thing of that nature. However, I am obliged to tell you, that unless you send me others in their room, I must

15-ம் கடிதம்.

நாட்டிலிருந்த ஒரு வியாபாரி தனக்கு அனுப்பிய சரக்கு குணமில்லையென்று கல்கத்தாவிலிருந்த ஒரு வியாபாரிக்கு எழுதியது.

ஐயா,

நான் சரக்குக்காக உமக்கு எழுத ஆரம்பித்தபோது நாணயத்தோடும் விசுவாசத்தோடும் நடக்க மனதிலே உறுதிபண்ணிக்கொண்டு, நீரும் அந்தப்படி நடப்பீரென்று நம்பியிருந்தேன். கொஞ்சநாள் வரையிலே நீர் எனக்கு அனுப்பிய சாக்குகள் உள்ளபடி குணமாகவே இருந்ததால் நான் முறையிட நியாயமுண்டாயிருந்ததில்லை. ஆனால் இப்போது அதற்கு முழுதும் வித்தியாசமாயிருப்பதெப்படியெனில், நீர் கடைசியில் எனக்கு அனுப்பிய இரண்டு சிப்பமும் மெத்தவும் கெடுதியாயிருப்பதால், என் வாடிக்கைக்காரர்களுக்கு அவைகளைக் காண்பிக்க எனக்குத் துணிவில்லை. ஏதனால் இப்படி வந்ததையா? செலுத்த வேண்டிய பணத்தை எப்போதாகிலும் நான் குறைவு பண்ணினேனோ? இல்லை. அப்படிப்பட்ட காரியத்தைக் குறித்து என்மேல் குற்றம் சொல்ல மாட்டீர். அவைகளுக்குப் பதிலாக வேறு சிப்பம் நீர் அனுப்பாவிட்டால் சரக்குக்காக நான் உமக்கு எழுதுவதையாகிலும் நிறுத்தவேண்டும். இல்லாவிட்டால் என் கடையையாவது அடைத்துவிட வேண்டுமென்

either withdraw my correspondence, or shut up my shop. You may choose which you please' and let me beg to have your answer by return of post, as I am in immediate want of those goods, and in danger of losing my customers by a delay.

In so doing, you will oblige

Gundu Chettiar.

றும் உமக்குச் சொல்லவேண்டிய தாயிற்று. இவ்விரண்டிலும் உமக்கு இஷ்டமானதை நீர் தெரிந்து சொல்லும். அந்தச் சரக்குகள் இந்த நிமிஷமே எனக்குத் தேவையானபடியாலும், காலதாமதத்தால் என் வாடிக்கைக்காரர்களை யிழந்து போகும் நஷ்டம் எனக்கு இருக்கிறபடியாலும், மறுதபாலில் உத்தரம் எழுத வேண்டிக்கொள்ளுகிறேன். அப்படிச் செய்வீரானல் எனக்கு உபகாரமாயிருக்கும்.

இங்ஙனம்

துண்டு செட்டியார்.

ஸ்ரீ கிருஷ்ண ஸ்தோத்திரம்.

ஒப்பனை கடந்த அப்பனே வாராய்
அழகுக்கோ ரணியே யையனே வாராய்

குழலினி தூதிக் குழகனே வாராய்
மையலில் மயங்கி மனந்தடு மாறுமேன்

இன்னல் தீர்க்க இறைவனே வாராய்
நன்னல மருள நாதனே வாரய்

அழகைக் காட்டி யகன்றது மேனே
மனதைக் கெடுத்து மறைந்தது மேனே

புன்னகைக் கோலமும் புனிதவொய் யாரமும்
இன்னிசைப் பாடலு மினியநல் லாடலும்

விளங்கவே வாராய் விசனம தொழிப்பாய்
களங்கமு நீங்கிக் கடுகியே வாராய்

திரு. பக்தவத்ஸலம். பி. ஏ.

சரக்கு நன்றாயிருந்தாலும் இல்லாவிட்டாலும் தடபுடலான பெரிய விளம்பரம் செய்தால் விற்றுவிடுமென்பது சிலரது அபிப்பிராயம். அதில் உள்ள மோசக்கருத்து வெளிவருவதில்லை.

விவேகம்
விநோதம்
விசித்திரம்
விகடம்

விகடப்பிரதாபன்

அநுபவம்
அற்புதம்
ஆச்சரியம்
ஆநந்தம்

REGISTERED TRADEMARK

தாறுமாறு தக்கடா புக்கடா !

II



ஆமடா அண்ணு இளிச்சவாயா! இஞ்சி என்று வாயை மூடிக்கொண்டு பல்லைக் காட்டாமல் சொல்லத் தெரியாத நீ தானு உலகத்தை உறிஞ்சி விடப்போகிருய்? உலகமோ, கலகமோ, ஊறு காயோ! உலைவாயை மூட மூடியுண்டு, ஊர் வாயைமூட யாராலாகுமப்பா? சின்ன வீட்டுச் சேதி சிமந்தத்திலே தெரிகிறதுபோல, மறைக்கப் படுகிற எவையும் பிறகு பளா பளாவென வெளிப் பட்டுவிடுகின்றன. ஊர் இருக்கிற சிங்காரத்தைக் கேட்கிருயா அண்ணு! என்னடா தம்பி அதற் குள்ளே சிரித்து சிரித்துக் குப்புற விழுகிருயே! அவ்வளவுக்கு அறியாதவனென்றல்லவோ பக்கத் திலேவைத்துச் சொன்னேன்! எவனும் தன் நெஞ்சுக்குள் இருக்கிறது பிறனுக்குத் தெரியா தென்று நினைக்கிருன். தெரிந்துகொண்டவனே அதைச் சொல்லித் தேள்போல் வெடுக்கென்று கொட்டித் திட்ட ஒரு சமயத்தை எதிர்நோக்கி நிற்கின்ருன்! இவனைவிட அவன்பாடு சுகம் என்கிருன்! அவனைவிட இவன்பாடு சுகம் என்கிருன்! உள்ளுக்கு நுழைந்தால் எங்கும் குறையும் நோயும் கசுமாலமுமாகவே ஆண்டவன் அததற்கேற்பச் சரிசரியாகவே படியளக்கிருர்! இருப்பதில் திருப்திபட்டவர்கள் எவரேனும் உண்டா? மேல் உயர வழியில்லாததால் சிவனே என்று விதியைத் தள்ளுகிறதேயன்றி வேறு என்னடா அப்பா! ஒருமிக்கப் பொருள் குவித்தவனுக்கு அந்தக் குவித்த வழியிலேயே கடைசியில் நாசமும் சூழ்ந்து கொள்கிறது! இவற்றை யெல்லாம் பார்க்கும் பொழுது விகடன் ஒரே சிரிப்பாய்ச் சிரிக்கவேண்டியதாகத் தான் இருக்கிறது. இனி, விகடன் சென்ற தடவை அரைகுறையாய் விட்டு விட்ட தாறுமாறுகளைத் தொட்டுக் கொள்ளுகிறேன் கேளுங்கள்.

***

மாலை வந்து மடியிலிருக்கிறது வாடி மருமகளே!—மாலை வந்தாலெனக்கென்ன, அது மடியிலிருந்தா

தாறுமாறு—குழப்பம். ஏறுமாறு—குழப்பம்.

தக்கடி—குதர்க்கம், துரோகம், மூர்க்கம், வஞ்சனை,

லெனக்கென்ன? பார்ப்பான் வந்து பஞ்சாங்கம் சொல்லுகிறான் வாடி மருமகளே!—பார்ப்பான் வந்தாலெ ன்ன, அவன் பஞ்சாங்கம் சொன்னு லெனக்கென்ன?—என்று எதிர்க்கிற ஏறுமாறான ஏகாத்தாள் மருமகளாகக் கூடியிருந்து குளிர்ந்து குலாவி குணலயமாய்க் கூடுகட்டி கூண்டி லிருந்து குழந்தை பெற்று குவலயம் புகழ வாழப் போகிறாளா? அந்தக் கதை ஏது? ஆரம்பமே அதிகப் பிர சங்கித்தனம்! பட்டித்தனத்துக்குப் பாக்கியம் ஏது? அவள் வாழ்வும் தாறு மாறு தக்கடா புக்கடாவில் தான்! கோணலிலே, கொதிப்பிலே, கோரா ணியிலே தான்! எதிர்க்கெதிர் பேசு வோருக்கு எங்குமேதான் பொல் லாப்பு!

***

ஞாபகக் குறிப்பாக ஒரு சிறு துண்டு எழுதி வைத்திருந்து பின் அது காணவிடில், அது பெருஞ் சொத்து ஒன்று தவறிப்போன மாதி ரியே. பின் இவன் என்ன நினைத்து எழுதினும் பேசினும், அந்த ஞாபகத் துண்டிலிருந்த் ஒழுங்கின்படி ஒய்யார மாய் அமையாது. காணமற்போன துணுக்கின் மீதே இவன் சிந்தை செல்ல, வலியப்பிடித்து இழுத்து வேலை செய்யவிக்கும் புத்தியிலே முன்கோணல் பின் கோணலாகி அங் கும் அது ஒரு தாறுமாறில் தான் வந்து முடிகிறது! இது புத்திசாலி களுக்கு ஏற்படும் அவஸ்தை. இனி குடும்பத்திற்கு ஏற்படும் குட்டிக்கரா ணத்தைக் கேளுங்கள். நன்றாய் ஒழுங்காய் நலமாய் நாலுக்காக ஒத்து வாழும் குடும்பத்திலே சில கொள்ளிக் கட்டைகள் தோன்றிக் கொள்கின் றன. அவற்றிற்கு குடும்பத்தைப் பிரிக்கிற சிந்தனை. வீட்டுக்கு முக்கி யஸ்தனாய், தன் கணவனுக்குத் தாயாதி வர்க்கமாய் இருக்குமொரு வனை பிந்திய தொல்லைகளுக்கு இட மில்லாமல் பிரித்துவிட நினைக்கிறாள் வீட்டு ராணி! எடுக்கிறாளய்யா ஒரு தந்திரம்! அவன் என் கையைப் பிடித் திழுத்தான், என் கற்பு குலைக்கப் பார்த்தான் என்று தன் புருஷனுக்கு பலமான தலையணை மந்திரம் போடுகி றாள். அவன் நெஞ்சிலே அது சுரீர் என்கிறது, தைக்கிறது. உடனே மனதில் குரோதம் முதிர்ந்து அந்த தாயாதி என்னதான் உத்தமனாயிருந் தாலும் அவனுக்குக் கொஞ்சம் பொருள் கொடுத்து வேறு குடித்தன மாய் ஒதுக்கி விடுகிறான்! இது பெண் கள் கற்றுள்ள சமர்த்து வேலையின் தாறுமாறு! இனி இன்னொரு அண் ணத்தை ஒழுங்காயுள்ள வீட்டை ஒடிந்த வீடாக்கத் தன் அண்ணன் தம்பி மனைவியை யிழுத்து ஆசை காட்டப்போக, அந்தும் ஒரு தாறு மாறும் பொல்லாப்புமாய்க் குடும்பம் பிளவு படுகிறது! பிரிகிறது!

***

உத்தியோகப் பெருமையிலே ஒருமிக்கச் சொத்து சேர்த்துவிட நாடி, தாங்களே திருடர்களை ஏவ விட்டுக் கொள்ளையும் அடித்துக் கொலையும் நடத்திப் பங்கு—பாகமுங் கொண்டு, உதவாக்கரையான ஒரு வனை அக்கொலைக் கேஸில் மாட்டி விட்டு அவனையும் தூக்கிவிட்டு அஷ்ட ஐசுவரிய போகமுமாய் வாழப் பார்க்க, இதிலே நொந்துபட்ட தூக்குண்டு செத்தவனின் சாபம் சூழ்ந்து கொண்டுவிட்டு, இவ்வளவுக் குத் துணிந்தவர்களின் வாழ்வு ஒரு கொள்ளை நோயில் முடிந்து பச்சைப்

வீடும் சொத்தும் யாவும் தனக்கே சேரப்போகிறதென்று அறியாத ஒரு சிறு குழந்தை ஒரு வாழைப்பழத்திற்காகத் தாயிடம் கெஞ்சி வேண்டுகிறது!

பல்லாக்கு ஏற, தேடிய அநீதச் சொத்து அத்தனையும் ஐயோ தெய்வமே! அன்னியனொருவன் கையில் போக இருந்த மிச்சமும் சின்னா பின்னமாக முடிவிலே குடும்பம் உயராமல் உள்ளுக்குள்ளே உடைந்து உட்கார்ந்து தாறுமாறு! தக்கடா புக்கடாவாகி விடுகிறது! எந்த நாளைக்குமே ஒரு சங்கதி விகடன் கருத்தாகச் சொல்லி வைக்கிறேன். அதாவது நொந்து பட்டோரின் சாபம் வீணாகாதென்பதே. இன்றைக்கு ஒருவனைத் தன் காரியத்திற்குத் துணையாய்க் கூட்டாகச் சேர்த்துக் கொண்டு அவனை நன்றாக உழைக்க வைக்கிறான். அவன் உழைப்பிலே தன் காரியங்கள் ஒரு உருவாகி ஒருஸ்திரப் பட்ட நிலைக்கு வந்ததும், தந்திரமாய் அவனை விலக்கி விடுகிறான். அவன் மீது வீண் புகார்கள் சொல்லுகிறான். உழைத்தவனோ வயிறு கொதிக்கிறான்! இவன்கொதிப்பு அவனைச்சட்டை செய்யாதபடி விட்டுக் கொடுத்து மாடி வாழ்விலேயே சில காலம் அவனை வாழவைத்தாலும், நல்ல வாழ்வு நாளிலே திடீரென்று வயது சுருங்கிப் பொடுக்கென்று ஆயுளை முடித்துக் கொண்டுபோய் விடுகிறான்! பாதி சொத்துகள் கடன்காரர் வசமாகித் தாறுமாறு படுகிறது! இது உழைத்து ஏமாறியவனின் வயிற்றெரிச்சலில் சூழும் பின்வினை!

***

இன்னொரு அகாத்திய ஞான்னர் கொள்ளையிட்டு பாகம் பிரிக்காமல் தன் மனைவிக்கே யாவும் எழுதி விட்டுப்போக, வஞ்சனையாய் வந்த சொத்து வஞ்சகமாய் அந்த மனைவியைச் சூழ்ந்தோரால் அபகரிக்கப்பட்டுப் போகிறதில், பெரிய தாறுமாறுகிக் குழந்தை குட்டிகளின் பாடு திண்டாட்டத்தில் சிக்கிக்கொள்ளுகிறது! சொத்து சேர்த்துவிடுவது மட்டும் போதாது. அது நீண்டு தொடர்ந்து தன் சந்ததிகளுக்கும் உதவ வேண்டுமானால் தர்ம வழியில் சேர்த்தால் தான் அங்கு தங்கி நிலைக்கிறது. அவ்விதமில்லையாகில் அங்கு தாறுமாறு தக்கடாதான்! இன்னொரு முன்வினையையுங்கூடக் கேளுங்கள். பெரிய மனிதர்களாகவே நல்ல பதவியிலிருந்து வாழ்ந்த சில தலைவர்கள் சாகும் காலத்தில் ஒரு சிறுமியைக் கடைசி தாரமாய் மணந்து குஞ்சு குட்டி கட்டிகளையும் பெற்று விட்டுப் போக, அந்தச் சிறிய சிங்காரியை வீட்டுக் கணக்கன் தன் வசமாக்கிக் கொள்ள அவள் அவனுக்கு அடிமையாகிச் சொத்துகளையெல்லாம் இழக்க, தாய்போன தவறு வழியில் அவள் பெண்களும் பருவம் முதிர்ந்து வீட்டிலிருக்கையில் ரகசிய சோரம் போய் மோசமாகிவிட, வீட்டுத் தலைவனான பிள்ளையும் வேசிகாந்தனாகிக் குடும்பமே பேர் கெட்டு, சீர் அற்று வாழ்வு ஒடிந்து, சின்னாபின்னமாகித் தாறுமாறாய்ப் போகிறது! இது ஒரு முந்திய சூழும் வினையோ யாதோ! ஈசா!

***

தன் குழந்தைகளில் மூத்தவன் நன்கு படித்துத் தேர்ந்து சம்பாதித்துத் தனிக்குடும்பமாகிவிட, அவனை ஒதுக்கிவிட்டு மற்ற பிள்ளைகளுக்கு தனது ஆஸ்தியைப் பங்கிட்டுப் போகிறான். அவனுக்குப் பின் மூத்தவன் தனக்கும் பாகம் வேண்டுமென்று வழக்கிட அதிலிருந்து ஒரு தாறுமாறு! இவ்விதமே கண்டபடி திரியும் இளைய குமாரனுக்கு ஒன்றும்

அகாத்தியம் = பொல்லாங்கு, வஞ்சனை.

செய்யாமல் எல்லாம் மூத்தவனுக்கே செய்து விட்டுப் போக, தந்தைக்குப் பின் இளையவன் பாகத்திற்கு வியாஜ் யம்போட அதிலிருந்து பலபல தாறு மாறுகள் சூழ்கிறது! வீட்டுக்கு வந்த மருமகளை வைத்து வாழத் தெரியா மல் அவள் பெற்ற பிள்ளையை மட் டும் வைத்துக்கொண்டு அவளைத் துரத்திவிட, தெய்வம் இந்தக் கொடுமையைச் சகியாது அந்தப் பிள்ளையையே விழுங்கிவிட, இருந் திருந்து தன் கடைசி துணையாய் நம்பிய குழந்தையும் போய்விட்டதா வென்று அந்தப் புண்ணுள்ள மருமகள் ரயிலடியில் வீழ்ந்து மாய, குடும்பமே குலைந்து தாறுமாறுகிறது? கால முழுதும் தனக்கு உபகாரியா யிருந்து தான் பாயிற்படுத்த நாளி லெல்லாம் மலம் நீர் முதலியவற்றை யெல்லாம் வாரி, வேளையறிந்து பக்குவமாய் உணவளித்து வந்தவளை வஞ்சித்து வீடும் நிலமும் சொத்து பலமும் யாவற்றையும் தன் மனைவிக் கும் அவள் குழந்தைகளுக்கும் எழுதி வைத்துத் தன்னை நம்பியவளை நடுத் தெருவு நாராயணு என்று விட்டு விட, பின் இவன் கண் மூடியதும் இவன் மனைவி மக்கள் அந்த நம்பி யிருந்தவளை வெளியிலே தள்ளித் துரத்தி, தனது என்று அவள் நினைத்தவற்றை யெல்லாம் பிடுங்கிக் கொண்டுவிட, அவள் வயிறு எரிய அலற, அது வீண் போகாமல் இவர் கள் வசமான வீடும் சொத்தும் சில நாளில் கடனுக்கும் நஷ்டத்துக்கு மாகி எல்லாம் தொலைந்து அவளைப் போலவே இவர்களும் அநாதிகளாகித் தாறுமாறு பட்டுப்போக, இதுவும் ஒரு தெருக்கூத்தடா அப்பா!

***

உழைக்கிறவனின்மீது நோட் டம் சொல்ல, அதனால் அவன் மனது வெந்து புத்தி தடுமாறித் தாறுமாறு கிட, இது ஒரு அலங்கோலம்! பட்ட காலிலே படுமென்பதாய் உத்தியோ கம் திடீரென்று போக, இருந்த குழந்தையும் சாக, மனைவியும் நமன் வசமாக, வீடும் காலியாகி இது ஒரு தாறுமாறு! நன்றாயிருந்த குடும்பத்தி னுள்ளே ஒரு விதவைகூட, அவளை வீட்டுக்காரன் அப்பிக்கொள்ள அதிலிருந்து விதவையம்மாள் வீட்டு ராஜாத்தியாகிவிட, பத்தினிப்பெண் டாட்டி பரிதபித்துத் திண்டாடிக் கோர்ட்டுக்கு ஏக, ஐயோ! இது ஒரு அநியாயத் தாறுமாறு! ஒருத்தி இருக்கையில் குழந்தை யில்லை யென்று உறுமி இன்னொருத்தியைக் கொண்டு, அது பெரிய சக்களத்திப் போராட்டமாக வந்த இளையவள் ஒரு குழந்தையைப் பெற்று அக்குழந் தையோடு வானுலகு சேர, இது நம்பியவளை அங்கிரமம் செய்ததற்குக் கடவுள் விதித்த தாறுமாறு!

***

நம்பிவைத்த இடத்தில் நடுக் கொள்ளையடிக்கிறவர்கள் எங்காவது உருப்பட்டதுண்டோ? பெரியவாழ்வு வாழ்வது போலவே வெளிக்குத் தோன்றுகின்றது. ஆனாலோ முடி வென்ன? ஒருவன் நம்பிக்கையுடன் ஒரு கடையைத் தன்னிடம் ஒப்பு விக்க. அவனுக்கே இவன் பட்டுக் குல்லா சாத்தி, தான் ஒரு புதுக் கடைக்காரனைப் பெரிய தோரணை யில் வந்துவிட, ஹா! தேவ்! தேவா! கடைசியில் எப்படியோ திடீரென்று நெருப்புப் பற்றியோ, திருடர்கள்

உன் காரியஸ்தலத்து மேஜைக்கருகில் உன் முன்பு வந்துநிற்பவன் சாமான்னியனாக உனக்குப் படலாம். நீயும் அவ்விதமே அவன் காரியஸ்தலத் தில் சாமான்னியமாகக் கொள்ளப்படலாம். இருக்கிற இடத்தில்தான் மதிப்பு.

கொள்ளையிட்டோ கடை சின்ன பின்னமாகித் தாறுமாறு தக்கடா புக்கடாவுக்கு வந்து விடுகிறது! உத்தியோக மமதையில்கண் தெரியாமல் ஏழை வேலையாட்களுக்குக் கண்டபடி அபராதம் போட்டும், பிறரை நஷ்டப்பட விட்டு அக்கிரமம் செய்தும் ஆரவாரிக்க, அந்த வயிற்றெரிச்சல் கூடித் திரண்டு வேலை பார்த்து நிற்க, பிறகு இவனுக்கே அவசரம் குறுக்கிட்டு அப்பால் போட்டுவிடலாமென்று ஆபீஸ் பணத்தில் கையிட்டு தன் செலவுக்கு எடுத்துக் கொள்ள, மறுதினமே அதிகாரி திடீரென்று கணக்குப் பார்க்க வந்து தொகை குறையவே, இவனும் திகைக்கவே, வேலை உத்தியோகமும் தொலைந்து தாறுமாறுகிறது! இது ஊர் எரிச்சலுக்கு ஆண்டவனே விதித்த தண்டனையாக்கும்!

***

அன்பாயிருந்து உறவாடியவர்களைத் திடீரென விலக்கி விட்டு, அவசிய சுப விசேஷத்திற்கும் அழைக்காமல் வீட்டுக் கல்யாணங்கள் நடத்தப்போக, அந்த அன்பினர்களின் சாபம் இங்கு அடுத்தடுத்துக் காயும் பூவும் பிஞ்சுமாய் உதிர்ந்துமாள இது ஒரு தாறுமாறு! தன் மகனுக்கே அந்த ஒண்டிக்காரியின் பெண்ணும் அவள் ஆஸ்தியுமென்று நெடுங்காலம் காத்திருந்தவனை விரோதித்துத் தள்ளி வேறிடத்தில் தன் பெண்ணைத் தரப்போக, இங்கு நம்பியிருந்தவன் ஆ! என்று வாய் திறந்து அலற அந்த சாபத்தில் வேறிடம் தந்த பெண்ணுக்குக் குழந்தை யில்லாமல் மலடியாக, அப்பெண்ணின் சொத்துக்களெல்லாம் தாயாதிகட்குச் சேர்ந்து தாறுமாறுகிறது! தகப்பன் தன்னைக் கவனியாது மாற்றாந்தாயின் வசமாக, தன் தாயைச் சேர்ந்த இடத்தில் ஒரு பெண்ணும் விவாகமும் நடக்க, அந்தப் பெண்ணின் சொத்தில் இன்பமாய்க் காலந்தள்ள ஆ! இப்படியே அவன் காலம் சுகமாகப் போய்விடக் கூடாதா? அப்படிக் காணுமே தேவா! அங்கு ஒரு கொள்ளியை ஈசனே ஏன் எறிகிருயோ? அவனது மனைவி கர்ப்பமாகிப் பிரஸவிக்க, அதிலே ஒரு ஜன்னி காண, அந்த அவதியில் அவள் மாள, அவள் பங்குக்குத் தர இருந்த சொத்துகளையெல்லாம் அண்ணன் தம்பிகள் தங்கள் வசமாக்கிக் கொள்ள, இவன் அனுதியாய்ப் பழய பிச்சாண்டியாகி வெளியேற, அவன் வாழ்வும் தாறுமாறுகிக் குலைகிறது!

***

கேட்டீர்களோ தாறுமாறுகளை நன்மைக்குத் தின்மை, இன்பத்திற்குத் துன்பம், உண்மைக்குப் பொய், ஒளிக்கு நிசி, வெண்மைக்குக் கருமை, குலமகட்கு வேசை போல்' உலகமே ஒன்றுக்கொன்று எதிர்ப்பாடாகத் தான் முறண்டு கொண்டு நிற்கிறது! இதிலே நல்லது செய்து நல்வழியில் நாடுபவர்களுக்கே காலம் கூடிக் கொள்ள வில்லையாயின், இனிப் பொல்லாங்கு தேடிப் பொங்கி வாழ்பவர்களின் வாழ்வு பின்னுளில் பொசுங்கிப்போகக கேட்கவும் வேண்டுமோ! ஆகவே சதிமோசம் வஞ்சனைகளுக்கு நீங்கள் துணையாகாமல், வாழ்வு சதமல்லவென்று தெரிந்து கொண்டு கடவுளுக்குப் பயந்து நடவுங்களென்று உங்களுக்கு இந்த

ஒருவனுக்கு ஒன்றைக் கொடுத்துக் கணக் கெழுதிக்கொள்ளும் வியபாரியைப்போல், ஒருவனுடன் சம்பந்தப்பட்டதும் அதிலிருந்து ஒவ்வொரு சமயமும் நீ பெறும் அநுபவத்தைத் தினமும் குறிப்பிட்டு வை.

விகடன் என் அநுபவ ஞானப்பாலை யூட்டி நல்லது சொல்லுகிறேன்' கேட்டால் கேளுங்கள், விட்டால் விடுங்கள் பிறகு உங்கள் பாடு. ராம்! ராம்! சுபம்! சூ! சுவாஹா!

அகட விகடம்.

ஒரு ஊரிலே ஒரு பிராமணர் தன் குமாரத்தியை ஒரு பாக்ஷா சாயபுக்கு விவாகம் செய்து கொடுத்து அவரவர் மதத்திலே அவரவர்கள் இருப்பார்களென்று சொன்னாராம். இவ்விருவருக்கும் குழந்தை பிறந்தால் அது எந்த மதத்திலிருக்குமென்பது விகடனின் கேள்வி. அம்மா, மண்ணு போல. அய்யா விதை போல. விதைக்குத் தக்கபடிதானே செடி?

***

வெகு வெகு வைபவமாகத் தொடங்கிய குடித்தனத்தின் திருகாணிகள் இடையிடையே முறிந்து அடிககடி தடுமாறி ஏன் என்று ஒருவர் கேட்க, அதற்கு விகடன் அவரவர் பெற்ற சாபத்துக்கும் ஆசிக்கும் தக்கபடி அதது அமையுமென்றும், வாழ நினைக்கிறவர்களின் வாழ்வு வாழப்போகிற போது தான் தெரியுமென்றும் பதில் சொன்னானும்!

***

அவர்கள் இரண்டு பகல் வந்திருந்ததற்கு அப்படா எவ்வளவு செலவு என்று முகம் சுளித்தாயே, இவர்கள் பத்தெட்டு நாளாய்க் குந்தித் தின்னுகிறார்களே யென்று கேட்டதற்கு அவர்கள் அன்னியர்கள், இவர்களோ தனனவர்கள் என்று ஒரு அம்மா பதில் சொன்னாளாம்.

***

மணியைப் பார்த்துக்கொண்டு நிமிஷக் கணக்காக அளந்து பேசி, நேரமாய் விட்டதென்று திமிராகப் புறப்படுகிறவர்களைப் பட்டணத்து மலேரியா காய்ச்சல் எட்டிப் பார்த்துக் காலை நீட்ட வைத்து விட்டால் அப்போது மணி பார்ப்பதெப்படி யென்று ஒரு முனி கேட்கிறதாம்!

***

"ஆநந்த குணபோதினி "அமிர்தகுண போதினி"யாக மாறியதானது, பெருமாள் என்கிற பெயரைத் தள்ளிப் பெரிய பெருமாளானது போலிருக்கிறது என்று விகடச் சித்தாண்டி யொருவர் எழுதுகிறார்.

நாம் அவரோடிருக்கையில் நம்மை அவ்வீட்டினர் வெகுவாய் உபசரித்தார்கள் தான். அவர் ரயிலில் ஏறியதும், நம்மை அவர்கள் அன்னியர்போல் நோக்கியதை நினைக்கையில், அந்த உபசரணைகள் அவர் நிமித்தமே நமக்குச் செய்ததென்றும் தெரிகிறது. அவர் ரயிலில் ஏறி மறையவே இப்புது உறவும் உடனே தீர்ந்துவிடுகிறது போலும்!

பிறர் சொல்வதற்கெல்லாம் தலை அசைக்காதே. மறுக்க—திருத்த—சில சில ஒப்ப—வெறுக்க — ஒதுங்கத் தமது சுய அறிவு பயன்படும் வண்ணம் பழக்கித் திடனேற்றிக்கொள்வோரை எவரும் தம்வலையில் வீழத்த இயலா. பிறாது கைப்பொம்மையாக்கவும் இயலா. அவர் வாக்கே எதிலும் தலைமை கொள்ளும்; கம்பீரமாகவும் மேலெழுந்து நிற்கும்.